
பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 01 18 பெப்ரவரி 2017 விதி : 36



புலிகளின் கடைசி ஆயுதம்



காணாமல் போகடிக்கப்பட்டவர்கள்



விலகிய சனியும் பரவிய வெளிச்சமும்



கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை




# விடுவிக்கும் வரை விடமாட்டோம்

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



தொடர்கதை

# ஆறாவடு

## 36

சயந்தன்

சடலங்கள் ஆயிரத்தையும் தாண்டியிருந்தன. அவற்றை ஒப்படைப்பதற்கு இயக்கம் செஞ்சிலுவைச் சங்கத்திடம் அறிவித்தது. செஞ்சிலுவைச் சங்கம் சந்திரிகாவிற்கு அறிவித்தது. பதிலுக்கு சந்திரிகா வெறும் முப்பது சடலங்கள் மட்டுமே இராணுவத்தின் சடலங்கள் என்று அறிவித்தார்.

மூக்கினைச் சுற்றி நீலநிறத் துணி கட்டிய வெள்ளைக்காரப் பெண்ணொருத்தி, உடல்களைப் பொறுப்பெடுத்தாள். "முல்லைத்தீவில் வெறும் முப்பது இராணுவத்தினரே இருந்தார்கள்" என்பது அவளுக்கு ஆச்சரியமாக இருந்திருக்கக்கூடும். எஞ்சிய ஆயிரத்து நூற்று சொச்ச சடலங்களும் யார்? என்றும் அவள் யோசித்திருக்கலாம். தனது ஆட்களையே தண்ணீர் தெளித்து விட்ட சந்திரிகா மீது எனக்கு இன்னதென விவரிக்க முடியாத கோபம் இருந்தது. இயக்கத்தில் இருப்பதில் பெருமையாக இருந்தது."இயக்கம் ஒருபோதும் இப்படிச் செய்யாது" என்பதற்கு நிறைய வரலாறுகள் இருந்தன.

சந்திரிகா கைவிட்ட உடல்களையும் சனங்களே எரித்தனர். புதுக்குடியிருப்பிலும், கொக்காவிலிலும் அடுக்கப்பட்ட சடலங்களின் மீது காய்ந்த விறகுகள் கொட்டப்பட்டு தீ மூட்டப்பட்டது. நெருப்பின் நாக்குகளில் உடல் தசைகள் உருகி உருகி எரியத் தொடங்கின. மேலும் மேலும் விறகுகளைப் போட வேண்டியிருந்தது.

இராணுவ அடையாள அட்டைகளையும், குறிப்புப் புத்தகங்களையும் முன்னதாக இயக்கம் எடுத்துக் கொண்டது. ஒவ்வொரு சிப்பாயும் தனது பேர்சுக்குள் ஒரு இளம் பெண்ணின் படத்தையோ, வயதான தாயின் படத்தையோ அல்லது குழந்தையின் படத்தையோ தவறாமல் வைத்திருந்தார்கள். எழுதி முடிக்கப்படாத சில சிங்களக் கடிதங்களும் இருந்தன.

பதுங்கு குழியொன்றில் விழிகளைத் திறந்தபடி செத்துக் கிடந்த ஆமிக்காரனின் முகமொன்று என் நினைப்பில் வந்தபடியிருந்தது. அவன் காயப்பட்டு இரத்த இழப்பின் பின்னர் இறந்திருக்க வேண்டும். வயிற்றின் அடியில் ஆழமான காயமிருந்தது. உடலைத் தூக்கி வெளியில் எடுத்த போது விரல்கள் ஒரு படத்தை அழுத்திப் பிடித்திருந்தன. படத்தில் வெள்ளைச் சிறுமியொருத்தி சிரித்தபடி இருந்தாள். அன்றைக்கு இரவு எனக்கு நித்திரை வரவில்லை.

அடுத்தநாள் காலை மீண்டும் பெரும் சண்டை மூண்டது. நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் அளம்பில் கடற்கரையில் தரையிறங்கினார்கள்.

சிலாபத்துறையில் ஹெலியில் இறங்கியிருந்த கொமொண்டோக்கள் கடற்கரையை கிளியர் செய்து கொடுக்க கடல்வழி இறக்கத்தை இராணுவம் முடித்திருந்தது. அங்கிருந்து கடலோரமாக நகர்ந்து முல்லைத்தீவை மீளவும் கைப்பற்ற அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள்.

கடற்கரையில் சண்டை மூண்டது. நாங்கள் வழிமறித்துத் தாக்கத் தொடங்கினோம். நேருக்கு நேர் சண்டைகளில் பார்த்துப் பார்த்து சுடுவதில் ஒரு பரவசம் இருக்கிறது. இராணுவத்திற்கும் அப்படி இருந்திருக்கலாம். எங்கள் பக்கமும் விழுந்து கொண்டிருந்தார்கள். இயக்கத்தின் பின் தளங்களில் இருந்து கடற்கரையைக் குறிவைத்து ஷெல்கள் பாயத் தொடங்கின. கடலில் தூரத்தே இரண்டு கப்பல்கள் தீப்பற்றி எரிவது தெரிந்தது. சற்று முன்னர் சக்கைப் படகுகள் கப்பல்களில் கச்சிதமாக முட்டியிருந்தன.

படையினரால் ஒரு அடி தன்னும் நகர முடியவில்லை. முல்லைத்தீவிலும் வழித்துத் துடைத்தாயிற்று. "அளம்பிலில் தரையிறங்கியவர்கள் தாமாகவே திரும்பிப் போவார்கள்" என்பது அண்ணையின் எதிர்பார்ப்பாக இருந்தது. அப்படியேதான் நடந்தது. இரண்டு நாட்களுக்குப் பிறகு அவர்களைப் பத்திரமாக மீட்டுப் போவதற்கு இன்னொரு தரையிறங்கு கலம் கரைக்கு அருகாக வந்தபோது சக்கைப் படகு ஒன்றிடம் அரும்பொட்டில் தப்பியி ருந்தது. அவசர அவசரமாக அது இராணுவத்தினரைத் தனக்குள் ஏற்றியது.

நாங்கள் கரைகளுக்கு வந்திருந்தோம். தண்ணீரில் பாய்ந்து, விழுந்து, பதறித் துடித்து, நீந்தி சிப்பாய்கள் கலத்தை நெருங்கினர். கரையில் எங்கள் துப்பாக்கிகள் முழங்கியபடியிருந்தன. தரையிறங்கு கலம் புறப்பட்டது.

அங்கொன்றும், இங்கொன்றுமாகவே குண்டுச் சத்தங்கள் கேட்டன. கரை முழுவதும் பொதி செய்யப்பட்ட புதிய ஆயுதங்கள் சிந்தியிருந்தன. வங்கக் கடலின் அலைகள் உயர்ந்து எழுந்து மூசிக் கொண்டிருந்தன. ஒன்றிரண்டு சடலங்களை அலை கரையில் சேர்த்திருந்தது. நான் எனது "டாஷ் ரூ"வைத் தயார் நிலையில் வைத்து அலையில் எவரேனும் தட்டுப்படுகிறார்களா என்று தேடினேன்.

எனது உதடுகளில் புன்னகை வழிந்த அந்தப் பொழுதில் அலைகளில் தள்ளாடும் கறுப்புத் தலையொன்றை நான் கண்டு கொண்டேன். தண்ணீருக்குள் முங்குவதும் பிறகு மிதப்பதுமாக பச்சை பனியன் அணிந்த அந்த ஆமிக்காரன் அல்லாடிக் கொண்டிருந்தான்.

அவனுக்கு வெகு தூரத்தில் தரையிறங்கு கலம் போய்க் கொண்டிருந்தது.

தண்ணீருக்குள் தூரங்களை மட்டுக் கட்ட முடியாது. எனது "டாஷ் ரூ" அவனது தலையை சிதறடிக்கும் என்று நான் நம்பவில்லை. நிமிடத்திற்கு அறுநூறு ரவுண்சுகளை முன்னூறு மீற்றர்கள் வரை செலுத்துகிற ரி 56 -2 வகையை சேர்ந்த, ஏகே 47 இற்கான சீனாவின் பிரதியீடு அது. அதனைக் கண்களில் பொருத்தி அவனைக் குறி பார்க்கிற நேரங்களில் அவன் அலைகளில் மறைந்து போனான். பிறகு வெளித் தெரிந்தான். இது வேலைக்கு ஆகாது என்று தோன்றியது.

அருகில் நின்றவனைப் பார்த்தேன். அவன் டொங்கானை வைத்திருந்தான். அது சிறிய ஷெல் அடிக்கும் கருவி.

"அடியடா அந்த நாய்க்கு" என்று கடலினுள் கையைக் காட்டிக் கத்தினேன். ஆர்வத்தோடு அவனது கண்கள். சற்று நேரம் அலைந்தன. ஆமிக்காரனைக் கண்டு கொண்ட போது, அவனது கண்களிலும், உதட்டிலும் புன்னகை தோன்றியிருந்தது. டொங்கானை தோள்களில் பொருத்தினான். "ஓயாத அலைகள் ஒன்றில் சாகப்போகிற கடைசி ஆமியாக இவன் இருக்கலாம்" என்று அவன் சொன்னான்.

ஆமிக்காரன் என்ன பாடுபட்டேனும் தரையிறங்கு கலத்தை அடைந்து விடுகிற முனைப்பில் நீந்திக் கொண்டிருந்தான். அவ்வப்போது கைகளை உயர்த்தி உயர்த்தி வீசினான். பொங்குகிற அலைகளையும் கடலையும் தோற்கடித்து விடுகிற அவனது வெறியை என்னால் உணர முடிந்தது. கடந்த நாட்களின் இரவுகளில் என் நினைவுகளில் வந்தவனே நீந்திச் செல்வதாய் என் மண்டைக்குள் மின்சாரம் போன்றதொரு பொறி தோன்றியதும் பக்கத்தில் நின்றவனின் டொங்கானை நான் பறித்து வாங்கியதும் சம நேரத்தில் நடந்தன.

"அடியடா" என்று கத்தினான் அவன். நான் இன்னமும் தலையைத் தேடிக் கொண்டிருந்தேன். "அந்த ஸ்பொட்டிலேயே அடி" என்று திரும்பவும் அவன் கத்தினான்.

நான் வேண்டுமென்றே தாமதப்படுத்துவது அவனுக்கு விளங்கியிருந்தது. பச்சைத் தூசணத்தில் அவனிடமிருந்து வார்த்தைகள் வரத் தொடங்கின. ஒரு நாளும் இல்லாதவாறு எனது கைகளில் நடுக்கம் தொற்றிக் கொண்டது. முகம் வியர்த்துக் கொண்டு வந்தது. உள்ளங்கைகளும் வியர்த்திருந்தன.

அருகிலாக எங்கேயோ குண்டுச் சத்தம் கேட்டபோது உடலின் சமநிலை ஒரு நொடியில் குலைந்து போனதை நான் உணர்ந்தேன். வலதுகால் குளிர்ந்தததைப் போன்று தோன்றிற்று. மேலும் நிற்க முடியவில்லை. பின்னால் கைகளை ஊன்றியவாறு நிலத்தில் விழுந்தேன்.

கண்ணுக்கு முன்னால் முழங்காலுக்கு கீழே, இரத்தம் வழிந்தபடி தசைத் துணுக்குக் பிய்ந்து தொங்கிய என் காலொன்றைக் கடல் அலைகள் தம்மோடு உள்ளிழுத்தன. அந்தக் காலும் அதன் மேலிருந்த வரிச் சீருடைத் துணியும் எனக்கு சொந்தமாய் சற்று முன்னர் வரையிருந்தன.

"ஓயாத அலைகள் ஒன்றில் சாகப்போகிற கடைசிப் புலியாக நான் இருக்கலாம்" என்பதுவே எனக்குள் ஓடிய நினைப்பாக இருந்தது.

மொழிபெயர்க்கும் இளைஞனிடமிருந்து பெருமூச்சொன்று வெளியேறியது. முடித்த பிறகும் நீண்டநேரம் அமைதியாக இருந்த என் முகத்தை கமெரா தொடர்ந்தும் படம் பிடித்துக் கொண்டிருந்தது. என்னிடமிருந்து வேறு ஏதேனும் வார்த்தைகளை அது எதிர்பார்த்திருக்கக் கூடும். ஆனால் சொல்லவே கூடாது என்று திட்டமிட்டு மறைத்த இரண்டு கதைகள் இன்னமும் மிச்சமிருந்தன. அவற்றை நான் சொல்லப்போவதில்லை.

1. சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் இருந்த காலத்தில், ஒருநாள் ஒரேயொரு தடவை, இப்படியொரு கனவு கண்டேன். கைகளில் மலர்களை ஏந்திய வெள்ளைச் சிறுமியொருத்தி, என் முழங்கால்களுக்கு கீழ் நின்று அண்ணார்ந்து என்னை நன்றியுடன் பார்த்துச் சிரித்தாள். பின் தன் கைகளை நீட்டினாள். நான் பற்றிக் கொண்டேன். அப்பொழுது எனக்குக் கால்கள் இருந்தன.

2. ஒரு சிப்பாயைத் தப்பிக்க விட்டதாக தங்களுக்குத் தகவல் கிடைத்ததாகவும், அது குறித்து மேலும் விளக்கம் அளிக்கும் படியும் மேலிடம் என்னைக் கேட்டிருந்தது. சிகிச்சை முடிந்த பிறகு நான் காரணங்களை விளக்கி எழுதினேன். "அவனை உயிரோடு பிடிக்க முடியும்" என நான் நம்பியதாகவும், "அவ்வாறு கைதுசெய்வது பிற்காலங்களில் அரசியல் ரீதியாகப் பயன்படலாம்" என நினைத்ததாகவும், அதில் குறிப்பிட்டிருந்தேன். ஒருவேளை அந்தக் கடிதத்தின் பிறகே என்னை அரசியல் துறையில் இணைக்க மேலிடம் முடிவு செய்திருக்கலாம்.

★ ★ ★

எவருக்கும் இத்தாலியை சென்றடைந்து விடலாம் என்ற எதிர்பார்ப்பு இருக்கவில்லை. அப்படியான நம்பிக்கைகள் செத்து நாட்களாகியிருந்தன. வள்ளம் அதுபாட்டுக்கு ஓடிக் கொண்டிருந்தது. "சுயஸ்" கால்வாயினைக் கடந்து செல்கிற ஏற்பாடுகளில், ஓட்டிகள் தீவிரமாகியிருந்தனர். அவர்களை அழைத்துச் செல்ல யாரோ வெளியாருக்காகக் காத்திருப்பதாய்த் தோன்றியது. அதற்கென நீண்டதூரம் பயணம் செய்வதும், பின்னர் சரிவராது புறப்பட்ட இடத்துக்கே திரும்பி விடுவதுமாக இரவும் பகலும் கழிந்தன.

முன்னைய நாட்கள் மாதிரி இல்லாமல் இப்பொழுது கண்களுக்குத் தெரிகிற தூரத்தில் கன்ரெய்னர்கள் ஏற்றப்பட்ட கப்பல்கள் நாளுக்கு ஒன்றாவது போயின வந்தன. அண்ணார்ந்து பார்த்தால் கழுத்து சுளுக்குகிற அளவுக்கு கடலில் பெரிய மிருகங்கள் நகர்வதுபோல அவை தோன்றின். அப்படியான ஏதேனும் கப்பலில் வருகிற எவராவது இவர்களை அழைத்துச் செல்ல வேண்டுமென்ற பிரார்த்தனைகள் மட்டுமே ஒவ்வொரு வ்ரிலும் எஞ்சி இருந்தன.

(வலிகள் இன்னும்...)




## கந்தகக் கரும்பறவைகள்:

# புலிகளின் இறுதி ஆயுதம்






**தமிழரசன்**

ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும், பேரினவாத அரசுக்கும் மட்டுமல்ல, சர்வதேசத்துக்கும் புரியாத புதிர்களாக இருந்தார்கள், விடுதலைப் புலிகள். இதில் வான் புலிகளின் உருவாக்கம் குறித்து வல்லரசுகளே தலையைப் பிய்த்துக் கொண்டன என்றால், மிகையல்ல.

“வான் புலிகளின் எழுச்சியே விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட வேண்டும்” என்ற எண்ணத்தை வல்லரசுகளிடம் ஏற்படுத்தியது என்பது தமிழர்களிடம் இன்றளவிலும் உள்ள கருத்து. “இதில் உண்மையில்லாமலும் இல்லை” என்கின்றன போரியல் - அரசியல் நிபுணர்களின் ஆய்வுகளும், வாதங்களும். புலிகளின் வான் படை எவ்வாறு கட்டமைக்கப்பட்டது - எழுச்சி கண்டது என்பதெல்லாம் இன்றளவிலும் இராணுவ நிபுணர்களுக்கு எட்டாத மர்மமாகவே உள்ளது. ஆனால் தலைவர் பிரபாகரனின் வான் படைக் கனவு பின்னாளில் உருவானதல்ல. விடுதலைப் புலிகள் மரபுவழி போருக்கு தயாராகும்போதே - 1980 களிலேயே முகிழ்த்து விட்டது.

தலைவர் பிரபாகரனின் வான் புலிகள் கனவுக்கு தூபம் போட்டவர் கேணல் கிட்டுத்தான். 1987 இல் கிடைத்த வளங்களைக் கொண்டு, உள்ளூரிலேயே விமானம் ஒன்றைத் தயாரித்தனர். ஆனாலும் அது பலனளிக்கவில்லை. அராலி வெளியில் மேற்கொள்ளப்பட்ட பறப்பு முயற்சியில் ஓட்டியாக இருந்தவர் மேஜர் கேடில்ஸ். இவர் எதிர்பாராத வெடி விபத்தில் லெப்.கேணல் பொன்னம்மானுடன் வீரகாவியமானவர். இந்த முயற்சிகளுக்கு அச்சாணியாக இருந்தவர் கேணல் சங்கர். பின்னாளில் வான்புலிகளின் தளபதியாக உருவெடுத்த இவர் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியின் கிளைமோர் தாக்குதலில் வீரச் சாவடைந்தார்.

“புலிகளிடம் விமானம் இருக்கிறதா? இல்லையா?” என உலக நாடுகளே தலையைப் பிய்த்துக் கொண்ட கேள்விக்கு, தலைவர் பிரபாகரனின் 1998 ஆம் ஆண்டு மாவீரர் நாள் உரை பதிலளித்தது. இதை உறுதிப் படுத்துவதாக அன்றைய தினம் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் விமானம் மூலம் பூக்கள் தூவியதாக மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டது. ஆனாலும், இது குறித்து மர்மம் நீடிக்கவே செய்தது. 2000 ஆம் ஆண்டு வான் புலிகள் ஆண்டாக அறிவிக்கப்பட்டதன் மூலம் புலிகள் விமானப் படையை அமைத்து விட்டனர் என்பதை சர்வ தேசம் உறுதிப்படுத்திக் கொண்டது.


2001 இல் கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்துக்குள் ஊடுருவிய வான் கரும்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலால், உலகமே அதிர்ந்துபோனது. ஆனாலும் இந்தத் தாக்குதலில் புலிகளால் விமானங்கள் எதுவும் பயன்படுத்தவில்லை. ஆனால் 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 பலாலி விமானப் படைத்தளம் மீது புலிகளின் விமானங்கள் வெற்றிகரமாக முதல் தாக்குதலை நடத்தின. தொடர்ந்து அனுராதபுர விமானப் படைத் தளத்தின் மீது நடத்தப்பட்ட எல்லாளன் படை நடவடிக்கையின் போது, தரைக் கரும்புலிகளுக்கு ஆதரவாக வான் புலிகளும் தாக்குதல் நடத்தினர்.

தொடர்ந்து திருகோணமலை துறைமுகம், மன்னார் தள்ளாடி முகாம், களனிதிஸ மின் உற்பத்தி நிலையம் என்பன மீதும், இக்கட்டான நிலைகளிலும் புலிகளின் விமானங்கள் மேலெழுந்து சென்று தாக்குதல்களை நடத்தின.

இறுதிப் போரில், 100 சதுர கிலோ மீற்றர் பரப்புக்குள், புலிகளும் மக்களும் முடக்கப்பட்ட சமயத்தில் புலிகளின் வான் படைகளுக்கு என்ன வாயிற்று என்று தெரியாத நிலை நீடித்தது. இவ்வாறு மர்மம் நீடித்த சமயத்தில்தான் தலைவர் பிரபாகரன் விமானங்களை இறுதி ஆயுதமாகப் பயன்படுத்தத் தீர்மானித்தார். எதிரிக்கு பெரும் அதிர்ச்சி தாக்குதல் ஒன்றைக் கொடுக்க வேண்டியதன் அவசியம் கருதியே இந்த முடிவு எடுக்கப் பட்டது. அது மட்டுமல்லாது அந்த விமானங்கள் இராணுவத்தின் கைகளில் சிக்கி விடக்கூடாது என்பதும் தலைவரின் எண்ணமாக இருந்தது.

இலங்கையின் பாதுகாப்பு தலைமையகம், கட்டுநாயக்கா விமான நிலையம் மீது கரும்புலித் தாக்குதல் நடத்த வானில் பறந்தனர் கேணல் ரூபன், லெப். கேணல் சிரித்திரன். ஆனால் இருவரும் இலக்கை எட்டாமல் எதிரியின் விமான எதிரப்பு ஆயுதத்தில் சிக்கி வீரகாவியமாகி முதல் வான் கரும்புலிகள் ஆகி போரியல் வரலாற்றில் அழிக்க முடியா இடத்தைப் பெற்று விட்டனர்.

**(இந்தத் தாக்குதலில் இறைவரி திணைக்களம் மீது விமானம் ஒன்று மோதியது.)**



**கேணல் ரூபன்**

கேணல் சங்கரின் வீரச்சாவின் பின் அவரின் இடத்தினை நிரப்பியவர் ரூபனே. வானோடிகளில் அதிக தரத்தையும் கொண்டிருந்தவர். 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப் பெயர்வுகளைத் தொடர்ந்து 14 வயதிலேயே தன்னைப் புலிகள் அமைப்பில் இணைத்துக் கொண்டவர்.

புலிகளின் வான்கலங்கள் நடத்திய அனைத்துத் தாக்குதல்களிலும் பங்கேற்றவர். இறுதியாக கரும் புலியாகும் முன்னர் புலம் பெயர் மக்களுக்கும் தாயக மக்களுக்கும் அவர் எழுதிய கடிதம் மக்களிடையே பெரும் உணர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

தாயகக் கனவுடன் விமானம் ஏறிய ரூபன் வானிலேயே வீரகாவியமாகிப் போனார். அவரின் விதை தாயகம் காக்கப் பல ரூபன்களை உருவாக்கத் தவறவில்லை...



பெயருக்கேற்றாற் போல் எப்போதும் சிரித்த முகத்துடன் காணப்படுவார் சிரித்திரன். முருகப்பிள்ளை சிவரூபன் என்ற இயற்பெயரைக் கொண்ட சிரித்திரன் யாழ்ப்பாணம் இடைக்காட்டை சொந்த இடமாகக் கொண்டவர்.

1996 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண இடப்பெயர்வை தொடர்ந்து விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டார். 98 இல் நடத்தப்பட்ட கிளிநொச்சி ஊடறுப்பு சமரே முதற் சமர், தொடர்ந்து விக்ரர் கவச எதிர்ப்புப் படையணியில் இணைக்கப்பட்டார். பின்னாளில் தலைவர் பிரபாகரனின் நேரடி வழிகாட்டலில் உருவான ஆழ ஊடுருவும் படையணியில் தன்னை இணைத்தார் சிரித்திரன்.

சிரித்திரனின் திறமைகளால் அசந்து போன ரட்ணம் மாஸ்ரர் அவரை தலைவரின் பாதுகாப்புப் பிரிவில் இணைத்துக் கொண்டார். கரும்புலியாகும் கனவில் இருந்த சிரித்திரனை வான்புலிகளின் பயிற்சிக்காக தெரிவு செய்தார் தலைவர்.


குறுகிய காலத்தில் தேர்ந்த வானோடியாக மாறிய சிரித்திரன் வானோடி கேணல் ரூபனுடன் இணைந்து அளப்பெரும் சாதனைகளை படைத்தார். இறுதிக் கட்டத் தேர்வாக வான் கலங்களை கரும்புலி ஆயுதமாகப் பயன்படுத்தத் தலைவர் எண்ணிய போது அதற்கு நண்பன் ரூபனுடன் இணைந்து செயல்வடிவம் கொடுத்தான் சிரித்திரன்.



**லெப். கேணல் சிரித்திரன்**

மிகச் சிக்கலான நிலையில் வெற்றிகரமாக மேலேழுந்த தமிழரின் இறுதி ஆயுதங்கள் இலக்கை எட்டாது போய் விட்டன. ஆனாலும் தமிழரின் வான் படை கனவுகளை நனவாக்க சிரித்திரன்கள் மீள்வார்கள்...

## கடந்தவார சமூக இணையத்தர வரிசையிலிருந்து...




பெப்ரவரி 14 அண்மித்து விட்டாலே போதும் காதல் சம்பந்தப்பட்ட பதிவுகளால் சமூகவலைத் தளங்கள் களை கட்டிவிடும். ஆனால் இம்முறை அதைத் தலைகீழாக்கி விட்டது "சசிகலா அண்ட் கோவுக்கு" வழங்கப்பட்ட தீர்ப்பு.

கடந்த வாரம் முன்னிலையில் நின்று கொண்டிருந்த காதல் பதிவுகளை, சசிகலாவுக்கு உச்சநீதி மன்றம் வழங்கிய தீர்ப்பு வெளியான ஒருசில மணி நேரத்திலேயே பின்னுக்குத் தள்ள வைத்து விட்டனர் சமூக வலைஞர்கள்.

சசிகலாவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்புத் தொடர்பான செய்திகள், சசிகலாவை கலாய்க்கும் மீம்ஸ்கள், சசிகலா சிறையில் இருப்பது போன்ற கார்ட்டூன்களால் நிறைந்து விட்டது.

கூடவே பன்னீர்செல்வத்தின் இறுதிநேர எழுச்சி, அவருக்கு ஆதரவு தெரிவித்த தீபா, கூவத்தூரில் அடைக்கப்பட்ட எம்.எல்.ஏக்கள் எனப் பலவிடயங்களை சமூக வலைதளப் பதிவர்கள் அதகளப்படுத்தி விட்டனர்.

தமிழ்நாட்டில் எழுந்துள்ள தலைமைப் பதவி சர்ச்சையை இங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் ஒப்பீடு செய்து பதியவும் சில பதிவர்கள் தவறவில்லை.

02

சாதரண நாள்களில்கூட காதல் பற்றிய பதிவுகளை சமூக வலைத்தளங்களில் காண முடியும். காதலர் தினம் அண்மித்து விட்டால் அது பற்றிய பதிவுகளை நாம் சொல்லத் தேவையில்லை.

கடந்த வாரம் வழமை போன்று முன்னிலையில் நின்ற காதலுக்கு சோதனையாக வந்து சேர்ந்தது சசிகலா தீர்ப்பு. இதனால் சற்றுக் கீழிறங்கி இரண்டாவது இடத்துக்கு வந்து விட்டன காதல் பதிவுகள்.

பலரும் தங்களின் முகநூலில் "வலன்ரைன் டே"யைக் குறிக்கும் புரொபைல் பிக்சரை மாற்றிக் கொண்டனர். காதல் திருமணம் செய்தவர்கள் ஜோடியாக எடுத்துக் கொண்ட புகைப்படங்களை பதிவேற்றிக் கொண்டனர். காதலிக்காமல் திருமணம் செய்தவர்களும் கூட தங்கள் காதலை தெரிவிக்கும் வண்ணம் புகைப்படங்களைப் போட்டுக் கொண்டனர்.

வயது முதிர்ந்த தம்பதியர், காதல் கவிதைகள், ஹைக்கூக்கள், இதயம், ரோஜா பூக்களின் படங்கள், காதலைத் தெரிவிக்கும் வசனங்கள், காதல் தோல்வியின் வலிகளின் வரிகளாலும் சுவர்கள் நிறைந்து விட்டன.

வழமைபோன்று காதலை நையாண்டி செய்யும் மீம்ஸ்களும், பெப்ரவரி 14 இல் காதலியை துரத்தும் ஆணும், பின்னர் நவம்பர் 14 குழந்தைகள் தினத்தில் ஆணை துரத்தும் கர்ப்பவதி பெண்ணும் என வழமையான மொக்கைப் பதிவுகளும் இம்முறை சமூக வலைதளத்தில் உலா வரத் தவறவில்லை.







இம்முறை சமூக வலைத்தளங்களில் அதிகம் கவனம்பெற்ற ஈழம் சார்ந்த பதிவாக அமைந்தது கம்பவாரிதி ஜெயராஜ் கம்பன் விழாவில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தனவுக்கு வழங்கிய கௌரவம்தான்.

தமிழ்ப் பணியாற்றுவோருக்கு அளிக்கப்படும் கௌரவம் சிங்கள - அரசியல்வாதி ஒருவருக்கு வழங்கப்பட்டமை தமிழ் பதிவர்களை கடுப்படைய வைத்துவிட்டது.

"பாம்புக்கு பால் வார்க்கும் வம்பவாரிதி" என பலரும் ஜெயராஜை வறுத்தெடுத்து விட்டனர். சில வலைத்தளப் பதிவர்கள் அவரின் கடந்த கால வரலாற்றை தங்கள் பதிவுகளாக இட்டனர்.

குறிப்பாக கம்பன் விழாவை புலிகள் தடை செய்த விவகாரத்தையும் கம்பவாரிதியின் அரச விசுவாசத்தையும் குறிப்பிடுவதாகவும் பல பதிவுகள் அமைந்துவிட்டன. கம்பவாரிதியின் செயலுக்கு கண்டனம் செய்வதாகவே ஒட்டு மொத்தப் பதிவுகளும் அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

## படித்ததில் பிடித்தது

Keshayinie Edmund




ஒரு பதினெட்டு பத்தொன்பது வயசில் தன் கட்டுப்பாட்டை விட்டு மனசு ஒரு தாவு தாவிவிட்டு, "அய்யய்யோ! இது நடக்காது" என்று போன வேகத்தில் திரும்பிவந்து கொஞ்சம் பரவசத்தோடும் கொஞ்சம் பரிதவிப்போடும் அது ஒரு காலம் என்று காலமெல்லாம் அசைபோட்டுக் கொண்டிருக்குமே அதுதான் அது.

ஓர் ஆணும் பெண்ணும் உறவுகொள்ள, சடங்குகள், சம்பிரதாயங்க ளோடு சம்மதம் வாங்கிக் கொண்டால் ஊர் அதைக் கல்யாணம் என்கிறது.

பெண் மீது ஆண் மட்டுமோ ஆண் மீது பெண் மட்டுமோ ஆசைப் பட்டு, கனவுகளையும் ஆசைகளையும் நெஞ்சில் கரணை கரணையாகக் கட்டிவைத்திருந்தால் இலக்கியம் அதை ஒருதலைக் காதல் என்கிறது.

ஓர் ஆணின் மனசும் பெண்ணின் மனசும் ஒன்றோடுடொன்று இடறி விழுந்து, இடறிவிழுந்த மனசுகளின் சம்மதத்தோடு உடம்புகளும் தொட்டுக் கொண்டு, இன்பம் போல ஒரு துன்பத்தையும் துன்பம் போல ஒரு இன்பத்தையும் ஒரே நேரத்தில் அனுபவித்தால் உலகம் அதைக் காதல் என்கிறது.

"இதோ பார்! நீ எனக்கில்லை: நான் உனக்கில்ல. ஆனா நீ எனக்கு வேணும், நான் உனக்கு வேணும். உன்னால் சுகம் எனக்கு என்னால் சுகம் உனக்கு. போகிற போக்கில் போவோம். காலம் எங்கே நம்மைப் பிரியச் சொல்கிறதோ அங்கே லாபநட்டக் கணக்குப் பார்க்காமல் பிரிந்து கொள்வோம்" இந்த ஒப்பந்தத்தோடு நடக்கிற உறவுக்குக் காமம் என்று பெயர்.

உனக்குள்ளும் அது இருக்கிறது. எனக்குள்ளும் அது இருக்கிறது. நான்கு கண்களுக்குள் மட்டும் 'மினுக், மினுக்' என்று அது மின்னுகிறது. வட்டமிட்டுச் சுற்றிவரவுமில்லை. திட்டமிட்டுச் சொல்லவும் ம்டியவில்லை. ரெண்டு மனசிலும் கனக்கிறது ஒரே பாரம். இறுதிவரை இறக்கி வைக்கவே இல்லை. கடைசியில் பிரிகிறோம் - இதயங்களுக்குள் குழிவெட்டி பாரங்களைப் புதைத்துக் கொண்டு இந்த அனிச்சப்பூவின் அரும்பு போலிருக்கும் அந்த மெல்லிய உறவுக்கு எந்தப் பெயரை வைக்கலாமோ அந்தப் பெயரை வைக்கலாம்..



**Sivachandran Sivagnanam**

முடிந்துவிட்டது
காதலரதினம்
இன்னும் அப்படியே
இருக்கின்றது
காதல்!

**Kumarathas Sathananthan**

நான் ஒரு சிங்கம்.
-சசிகலா

எங்களுக்கு தேவை ஆறு அறிவு கொண்ட முதல்வர் தான்!
ஐந்து அறிவு கொண்ட சிங்கம் அல்ல,
நீங்கள் வண்டலூர் பூங்கா செல்லலாம்.

Like

## இந்தவார மீம்ஸ் (Meme)



புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

# விடுவிக்கும்வரை விடமாட்டோம்

"காலைச் சுற்றிய பாம்பு" என்று ஒரு மரபுத்தொடர் தமிழில் உண்டு. அதன் அனுபவபூர்வமான விளக்கத்தை கேப்பாபுலவில் உள்ள இலங்கை விமானப்படையினர் மிக நன்றாகவே உணர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

மக்களின் காணிகளை தமது விமான ஓடுபாதைக்காகவும், படைத்தளத்திற்காகவும் ஏக்கர் கணக்கில் கையகப்படுத்தியபோது மக்கள் வாய் திறந்து எதுவும் சொல்ல முடியவில்லை. அவர்கள் சிறைக்கைதிகள் போல அப்போது நலன்புரி நிலையங்களுக்குள் அடைக்கப்பட்டிருந்தார்கள். தங்கள் ஊரில் என்ன நடந்திருக்கின்றது என்பது அப்போது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. நலன்புரி நிலையங்களில் இருந்தவர்கள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டனர். ஆனால் கேப்பாபுலவு மக்களுக்கு அந்த அனுமதி எட்டாக்கனியாகிக் கொண்டே இருந்தது. எனவே தம்மை மீளகுடியேற்றக் கோரி பல வழிகளிலும் குரல் எழுப்பத் தொடங்கினார்கள். இந்தக் குரல்களின் ஓர்மத்தைக் கண்டு மிரண்ட அரசு, அவர்களை கேப்பா புலவுக்கு அருகில் உள்ள சீனியாமோட்டை என்ற பகுதியில் குடியமர்த்தியது. ஆனால் தங்களுடைய காணிகளே தங்களுக்கு வேண்டும் என்று அப்போதிருந்தே இந்தப் பகுதி மக்கள் தங்கள் கலகக்குரலை அவ்வப்போது பதிவு செய்தார்கள்.

இந்த முறையும் அதேபோன்று எதிர்ப்பை வெளியிட்டுவிட்டு கலைந்து சென்றுவிடுவார்கள் என்றுதான் அரசும் கேப்பாபுலவு விமானப்படையினரும் நினைத்திருப்பார்கள். ஆனால் எல்லாக் கணக்குகளும் சரி வருவதில்லை. இந்த முறை கணக்குப்பிழைத்தது. "என்ன நடந்தாலும் நடக்கட்டும் எங்கள் காணிகளில் நாங்கள் கால்வைக்கும் வரை இங்கிருந்து அசையப் போவதில்லை" என்ற வைராக்கியத்தோடு அங்கேயே தங்கிவிட்டார்கள் மக்கள். சரி, ஓரிரு நாட்களில் சென்றுவிடுவார்கள் என்று நினைத்து அவர்களை போராட்டக்களத்தில் இருந்து அப்புறப்படுத்துவதற்கான இடையூறுகளையெல்லாம் படைத்தரப்பு தாராளமாகவே செய்தது. ஆனால் மக்கள் அசையவில்லை. அதே மனவுறுதியோடு எதிர்த்து நின்றார்கள்.

அந்த மனவுறுதிக்கு முன்னால் அரசால் எதுவும் செய்ய முடியவில்லை. அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் மக்களைத் தேடிச்சென்றார்கள். உயர்மட்டங்களுக்கு தகவல்கள் பறந்தன. எப்படியாவது மக்களின் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்று அரசு அந்தரித்தது. ஏனெனில் ஒரு போராட்டம் வெற்றிகரமாக நீண்டு சென்றால் அது இன்னும் பல போராட்டங்களுக்கு முன்னுதாரணமாகி கிளர்ச்சிகளை உருவாக்கிவிடலாம் என அதிகாரவர்க்கம் எண்ணியது. கடைசியில் காணிகளை விடுவிக்க ஜனாதிபதி தரப்பில் சாதகமான பதில் கிடைத்துள்ளதாகத் தெரியவருகிறது.

என்றாலும் கடந்த காலங்களைப் போல வெறும் வாய்மொழிகளைக் கேட்டு கலைந்து செல்ல மக்கள் தயாராகவில்லை. "காணிகளை விடுவிக்கும்வரை போராட்டத்தை விடமாட்டோம்" என்று இன்னமும் போராடிக்கொண்டே இருக்கிறார்கள். வெற்றி வெகுதூரத்தில் இல்லை.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



வர்சி

# வாள்களின் அரசியல்

**யாழ்.** குடாநாட்டில் தணிந்திருந்த வாள்வெட்டு, கோஷ்டி மோதல்கள் மீளவும் தலையெடுக்க ஆரம்பித்துள்ளன. இந்த மோதல்களில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டாலும் மீளவும் வாள்வெட்டு சம்பவங்கள் அரங்கேறிய வண்ணமே உள்ளன. அப்படியென்றால் இந்த வாள்வெட்டுச் சம்பவங்களின் பின்னணியில் பலமான சக்தி ஒன்று செயற்படுகிறதா என்ற சந்தேகம் இயல்பாகவே எழுவது தவிர்க்க முடியாதது.

வாள்வெட்டு உள்ளிட்ட சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களில் அநேகரின் வயது 17 தொடக்கம் 22 வரையே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் மாணவர்களாகவும் பாடசாலைகளில் விளையாட்டு, கல்வி உட்பட்ட செயற்பாடுகளில் கெட்டிக்காரர்களாக இருப்பதாகவும், இருந்தனரெனவும் அறிய முடிகிறது. அவ்வாறெனில் இவர்கள் ஏன் இப்படி சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகிறார்கள் என விசாரித்தால் அவர்களது சேர்க்கையே அவர்களை இவ்வாறு செய்யத்தூண்டுவதாக பலரும் தெரிவிக்கின்றனர். அப்படியென்றால் கெட்டிக்கார தமிழ் மாணவர்கள்,இளைஞர்களை தீய செயலுக்குள் தள்ளிவிடும் செயற்பாட்டை மறைகரம் ஒன்று திட்டமிட்டு மேற்கொள்கின்றதா?

எவ்வித ஈவிரக்கமுமின்றி எம்மினத்தை நாமே வெட்டி சாய்த்துக் கொண்டிருக்கிறோம். தென்னிந்திய சினிமா படங்களில் கதாநாயகர்களும் வில்லன்களும் வெட்டுவதை நாம் திரையில் பார்க்கின்றோம். ஆனால் திரைக்கு பின்னால் வெட்டியவரும் வெட்டு வாங்கியவரும் சிரித்துப் பேசுகின்றார்கள். தங்களது ஊதியத்தை பேசி வாங்கிக் கொள்கின்றார்கள். ஆனால் இங்கோ வெட்டு வாங்கியவர் உயிரிழக்கிறார் அல்லது படுகாயமடைந்து எதிர்காலத்தில் இயங்க முடியாத நிலைக்கு செல்கிறார். வெட்டியவர் தனது வாழ்நாளை சிறையில் காலம் பூராவும் கழிக்கிறார். இந்தச் சம்பவங்களால் மேலும் மேலும் பகைமை வளர்கிறதே ஒழிய குறைவதில்லை.

வாள்வெட்டில் ஈடுபட்டவர்களை கைது செய்து தண்டனை கொடுக்கப்படுகிறதே ஒழிய அந்த வாள்களை குறித்த இளைஞர்களுக்கு கொடுத்தவர்கள் தொடர்பாக எவ்வித தகவலும் வெளியே வருவதில்லை. அப்படியென்றால் இந்த மறைகரம் குறித்து பொலிஸாருக்கும் தகவல் தெரிவதில்லையா? 30 வருட போரில் தமிழர்கள் கொடுத்த விலைகள் ஏராளம். தற்போது இவ்வாறான சம்பவங்களால் எமது இளம் சந்ததியே எம்மவர்களால் அழிக்கப்படும் துர்ப்பாக்கிய நிலைதான் நீடிக்கிறது.

அண்மையில் வாள்வெட்டில் ஈடுபட்டார் எனத் தெரிவித்து கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக சிறை வைக்கப்பட்டு யாழ். மேல் நீதிமன்றால் பிணையில் விடுதலை செய்யப்பட்ட மாணவன், உயரம் பாய்தலில் சர்வதேச ரீதியில் தங்கப்பதக்கம் பெற்று தான் கற்ற பாடசாலைக்கும் யாழ்.மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்தவர். இவரைப் போன்று பல்வேறுதுறைகளில் கெட்டிக்காரர்களாக உள்ள மாணவர்களும், இளைஞர்களுமே சூழ்நிலைகளின் மாற்றத்தால் கைகளில் வாளேந்துகின்றனர். இந்த சூழ்நிலையை அவர்களே விரும்பி உருவாக்குகிறார்களா? அல்லது நண்பர்களின் வற்புறுத்தலால் இத்தகைய சூழலுக்குள் சிக்குகிறார்களா? என்று தெரியாத நிலையே உள்ளது. இப்படியான நிலையில் இவர்கள் வாளேந்திகளாக மாறுவதற்குக் காரணம் என்ன என்பது குறித்து எமது புத்திஜீவிகள், உளவியலாளர்கள் கருத்தில் எடுக்காதது ஏன்?

உண்மையில் இவ்வாறான இளைஞர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டால் அவர்களின் இளவயதும், சமூகம் மீதான கோபமும் அவர்களிடத்தே மேலும் வன்முறையை தூண்டுவதற்கே வழிவகுக்கும். அப்படி யென்றால் என்ன செய்வது? இவர்கள் விளக்கமறியலில் இருக்கும்போதோ அல்லது சிறைத்தண்டனை அனுபவிக்கும் போதோ அவர்களுக்கு நீதிமன்றங்களின் அனுமதியுடன் உளவள வகுப்புக்களை எடுத்தால் அவர்களின் மனநிலையை ஓரளவுக்கேனும் மாற்றமுடியும்.

நாம் அரசியல் தீர்வு, இராணுவ வெளியேற்றம் தொடர்பாக வாய்கிழிய எமக்கு கிடைக்கும் மேடைகளிலெல்லாம் கத்திக் கொண்டு வருகின்றோம். ஆனால் எமது எதிர்கால சந்ததி யாருக்கும் தெரியாமல் நாசூக்காக அழிக்கப்பட்டு வருவதைப் பற்றி ஏன் சிந்திக்க தலைப்படுகிறோம் இல்லை? அரசியல் தீர்வு ஒரு பக்கமிருக்கட்டும். ஆனால் நம் எதிர்கால சந்ததியை நல்வழிப் படுத்தும் செயற்பாட்டிலும் எமது தலைமைகள் ஈடுபடவேண்டும்.

இதற்கான பணிகளை ஆரம்பத்திலேயே தொடங்கினால் தான் அது விஷ விருட்சமாக மாற முதல் பிடுங்கியெறிய முடியும். வெள்ளம் அணைகடந்த பின்னர் குய்யோ முறையோ என ஒப்பாரியிடுவதில் பயனில்லை.எனவே பூனைக்கு மணி கட்ட வேண்டியது காலத்தின் கட்டாயமாகிவிட்டது. ஆனால் அந்த மணியை யார் கட்டுவது?



# காணாமல் போகடிக்கப்பட்டவர்கள்

சிக்மலிங்கம் ரெஜினோல்ட்

**01**

காணாமற் போகடிக்கப்பட்டவர்களால் பாதிக்கப்படும் குடும்பத்தைப் பற்றி "பிறவி" என்றொரு மலையாளப் படம், 1990 இல் வந்தது. அதுவொரு அசாதாரணமான படம். அந்தப் படத்தைப் பற்றி அதிகமான தமிழர்கள் அறிந்ததில்லை. "பிறவி" படத்தின் சுருக்கக்கதை இதுதான்.

அரசியல் தொடர்பு காரணத்துக்காக, கல்லூரியொன்றில் படித்துக் கொண்டிருந்த இளைஞன் காணாமற் போகடிக்கப் படுகிறான். அவனைத் தேடத்தொடங்குகிறது, அவனுடைய குடும்பம். அது முடிவற்ற தேடுதல். முடிவில்லாத அலைச்சல். எங்கெல்லாமோ அலைந்தபோதும், யார் யாரையோவெல்லாம் சந்தித்தபோதும், அவனைப் பற்றிய எந்தத் தகவலையும் பெறமுடியவில்லை, அவர்களால். அதனால் அவனுடைய வீடு அப்படியே செயலிழந்து போகிறது. அவனுடைய பெற்றோரும் வேலைக்குப் போகிற சகோதரியும் துக்கத்தினால் உக்கிப் போகிறார்கள்.

இந்தப் படத்தின் கதையை இப்படிச் சுருக்கமாகச் சொல்வதால் காணாமற் போகடிக்கப்பட்டோரைப் பற்றிய துக்கத்தை முழுதாக உணர்ந்து விட முடியாது. இந்தத் துயரத்தையும், இது ஒரு பெரிய பிரச்சினை என்பதையும், அந்தப் படத்தைப் பார்த்தாலே ஓரளவுக்குப் புரிந்து கொள்ள முடியும். குடும்பங்களையும், தலைமுறைகளையும் உக்கவைக்கும் ஒரு அரசியற் பொறியே காணாமல்போகடிக் கப்படுவதாகும். உண்மைதான், அந்த மனிதர்கள் உக்கித்தான் போகிறார்கள்.

அப்பொழுதும், தமிழ்ச்சூழலில் காணாமற் போவோரைப் பற்றிய வலியும், துயரமும் இருந்தது. அது போராட்டச் சூழலின் விளைவு. 1970 களின் நடுப் பகுதியிலிருந்தும், 80 களில் அதிகமாகவும் "சொல்லாமற்போகும் புதல்வர்களின்" வலி ஈழத்தமிழ்ச் சூழலை அதிகமாக வாட்டியது. ஔவையின் "சொல்லாமற் போகும் புதல்வர்கள்" ரஞ்சகுமாரின் "கோசலை" இதற்கு உதாரணங்கள். போராட்டத்துக்கென்று தினமும் ஏராளமான இளைஞர்கள் காணாமல் போனார்கள்.

**மார்கழி மாதத்தின் முன் இரவில்**
**ஓர்நாள் -**
**அவன்,**
**நேரமாகியும் வீடு திரும்பவில்லை.**
**வழமையாக கோயில் மணி ஒன்பதடிக்க**
**வாசலில் அவன் வருவது தெரியும்.**
**எழுந்து சென்று**
**கதவைத் திறந்து**
**அவனை அழைத்து**
**உணவு போடவும், அப்போதும்**
**அவன் மௌனம்தான்.**
**எப்பொழுதும் அவன் அப்படித்தான்**
**சாப்பிடும்போது எதுவும் பேசான்.**
**என்மகன் -**
**நள்ளிரவாகியும் வரவேயில்லை**
**எங்கே போனான்?**
**அன்று**
**தங்கை அயர்ந்து தூங்கியிருந்தாள்**
**நானும் அவனைத் தேடி இருந்தேன்**
**அதன் பின் வரவேயில்லை.**
**நீ எங்கு போனாய் என்பதை அறியேன்.**
**(சொல்லாமல் போகும்**
**புதல்வர்கள் - ஔவை)**

தூக்கமில்லாமல், அமைதியில்லாமல் படுக்கையில் இருந்தபடியோ அல்லது யன்னல் கம்பிகளைப் பிடித்தபடியோ இரவுகளைக் கழித்த தாய்மார் இன்னும் நினைவில் நிற்கிறார்கள். தூரத்தே, ஒரு வேட்டுச் சத்தமோ, முழக்கமோ கேட்டாலே பதறித்துடிக்கும் வாழ்க்கையோடு அவர்கள் முதுமையடைந்தார்கள். கோசலைகளை விட்டு ராமன்கள் காடேகும் காலமது. அம்மாவை விட்டுக் குலம் காணாமல் போகிறான். ரஞ்சகுமாரின் "கோசலை" இதற்கெல்லாமொரு காவியம்.

எண்பதுகளின் நடுப்பகுதி இன்னும் கொடுமையான காலமாகியது. அப்போது தான் காணாமற் போகடிக்கப்படுவோரின் தொகை கட்டுப்படுத்தவே முடியாத அளவுக்குக் கூடியது. போராடுவதற்காக இயக்கங்களில் இணைந்தவர்களை, அந்த இயக்கங்களே தின்னத் தொடங்கின. இரகசியமாகத் தின்னும் இந்தப் வெறிப் பசியில் காணாமல்போகடிக்கப்பட்டோர் நூற்றுக்கணக்கிலாகினர். பிறகு இயக்க மோதல்களின் போதும் பலர் காணாமலாக் கப்பட்டனர்.

பிறகு வந்தது இந்திய அமைதிப் படைக் காலம். அந்த கால அரசியல், அந்த அரசியலின் விளைவாகக் கிளை விட்டுத் தொடர்ந்து கொண்டிருந்த நிகழ்ச்சிகள் எல்லாம் போகடிக்கப்படுவோரை உற்பத்தியாக்கியது.

இந்தத் துயர நாடகம் இன்னும் முடிவடையவில்லை. பல குடும்பங்களை, அந்தக் குடும்பங்களின் உறவினர்களை இன்னும் இது அலைத்துக் கொண்டேயிருக்கிறது.

ஆட்சிகள் மாறின. தலைவர்கள் மாறினார்கள். காலம் மாறியது. சூழல்கூட மாறிவிட்டது. ஆனால், இந்தத் துயரக் கதை மாறவேயில்லை. அது இன்னும் வளர்ந்து, வேரோடி, எங்கும் கிளை விட்டு, பெரிய துக்க மரமாக நமக்கு முன்னே நிற்கிறது.

**02**

இலங்கையில் காணாமற் போனோரைப் பற்றி ஏராளம் கதைகள் இருக்கின்றன. இயக்கத்தில் இருந்தவர்கள், இயக்கங்களுக்கு ஆதரவளித்தவர்கள், ஊடகவியலாளர்கள், பெரிய முதலாளிகள், பல்கலைக் கழக மாணவர்கள், பேராசிரியர்கள், ஒன்றுடனும் சம்மந்தப்படாத சாதாரணமானவர்கள்.... இப்படிப் பல வகையினரும் காணாமற்போயிருக்கிறார்கள். போகடிக் கப்பட்டிருக்கிறார்கள்.

காணாமற் போகடிக்கப்படுவோரைப் பற்றிய ஒவ்வொரு கதையும் இரத்தத்தை உறைய வைப்பன. ஒவ்வொன்றும் இதயத்தைப் பதைபதைப்பூட்டுவன.

என்னுடைய நண்பர் ஒருவரின் தந்தை காணாமற்போய்விட்டார். அவர் காணாமற் போனபோது ஐம்பதுக்கு வயதுக்கு மேல். எந்த இயக்கத்தோடும், எந்த அரசியலோடும் அவருக்குத் தொடர்பிருந்ததில்லை. பெரிய காசுக்காரரோ பெரிய பதவியில் இருந்தவரோ இல்லை. வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் ஏஜென்ஸியைக் கூட அவர் நடத்தியதில்லை. ஆனால் ஓர் இரவு அவர் காணாமற்போய் விட்டார்.

அந்தத் தந்தை காணாமற் போய் இப்போது ஏறக்குறைய இருபது வருசங்களாகிவிட்டன. அவருடைய படத்துக்கு மாலை போடுவதா இல்லையா என்று எந்தத் தீர்மானமும் இல்லாமலே இருக்கிறார்கள் வீட்டில். தன்னுடைய நெற்றியில் குங்குமத்தை வைக்கலாமா இல்லையா என்று தெரியாமலே இருக்கிறார் அவருடைய மனைவி.

அமைதிப் பேச்சுக் காலத்தில் நான்கு பேர் ஒரு வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்த போது காணாமற்போனார்கள். அதில் ஒருவர் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர். வன்னியிலிருந்து கண்டிக்குப் போனவழியில், அவரும் அவருடன் கூடப் போனவர்களும் காணாமற் போனார்கள். இதுவரை அவரைப் பற்றி, அவருடன் கூடப் போனவர்களைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை. அவர்கள் சென்ற வாகனத்தைப் பற்றியும் கூட தடயம் கிடையாது.

அவருடைய இளவயது மனைவி, எப்போதும் கண்ணீரோடிருக்கக் கண்டிருக்கிறேன். மற்றவர்களின் உறவினர்களும் அப்படித்தான். தேடிக் கொண்டேயிருக்கிறார்கள், தங்கள் சொந்தங்களை. மரணமோ! வாழ்வோ! அந்த முடிவைத் தெரிந்து கொண்டு வாழ்வது வேறு. எந்த முடிவும், எந்தத் தகவலும் தெரியாமல் வாழ்வது, வாழவே முடியாமற் தவிப்பது வேறு.

பிள்ளைகள் தாயின் முகத்தைப் பார்ப்பார்கள். அந்த முகத்தில் வழியும் கண்ணீரைக் கண்டு அமைதியாக இருப்பார்கள். சிலவேளைகளில் அதைப் பொருட்படுத்தாமலே தேவைகளுக்காக அழுவார்கள், அடம்பிடிப்பார்கள். அவர்களுக்கு தந்தையின் நிலையைப் பற்றி தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவர் காணாமற் போனபோது, அவர்கள் அதை அறியும் பராயமுமில்லை. ஆனால், இப்பொழுது அவர்களுக்கு அந்த வலி தெரியும். அதை அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் ஒரு காலம் பெயர் அறியப்பட்ட ஓவியரின் மகன் போராளியாக இருந்தார். வன்னியிலிருந்து இயக்க நடவடிக்கைக்காக அனுப்பப்பட்ட புலிகளின் அணியுடன் இணைந்து யாழ்ப் பாணத்துக்குள் இவனும் நுழைந்தான். சண்டையும் தேடுதலும் நடந்தன. அது சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்காலம். படையினர் யாழ்ப்பாணத்தைத் தங்களுடைய பிடியில் வைத்திருந்தனர். அப்பொழுது மல்லாகம் - ஏழாலைப் பகுதியில் நடந்த ஒரு சண்டைக்குப் பிறகு அந்தப் போராளியைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை.

முடிவு ஏதும் தெரியாதபோதும், அந்தப் போராளி இறந்து விட்டதாகக் கருதி, "மாவீரர் ஆகிவிட்டார்" என்று அறிவிக்கப்பட்டது. சடங்குகள் நடந்தன. துக்கங்கொண்டாடப்பட்டது. கல்லறையில் சுடர்கூட ஏற்றப்பட்டது. ஆனால், தன்னுடைய "மகன் இருக்கிறார்" என்று அந்த ஓவிய நண்பர் இருந்தாற்போல ஒரு நாள் பதற்றத்தோடும் மகிழ்ச்சியோடும் வந்து சொன்னார். யாரோ ஒருவர் தனக்கு மகனைப் பற்றிய அந்தச் செய்தியைச் சொன்னதாக அவர் சொன்னார். ஆனால், அவருடைய மகன் எங்கே இருக்கிறார், எப்படி இருக்கிறார், யார் அவனைக் கண்டது என்றெல்லாம் துலக்கமான தகவல்கள் கிடையாது.

அந்த நண்பரின் குடும்பம் "கோவில்கள், சாத்திரிமார், குறிசொல்லிகள், முகவர்கள், நேர்த்திக்கடன்" என்று அலையத் தொடங்கியது. மகன் படையினரால் பிடிக்கப் பட்டு ஏதோ ஒரு சிறைச்சாலையில் இருப்பதாக ஒரு தகவலும், அவர் எப்படியோ அந்தச் சண்டையில் காயத்தோடு தப்பி, யாரோ அவரைக் காப்பாற்றி, பிறகு அவர் தன்னுடைய தோற்றத்தை மாற்றிக் கொண்டு திரிவதாகவும் நண்பர் மாறி மாறிக் கதைப்பார். அந்த நண்பரும், அவருடைய நோயாளியான மனைவியும் அந்தக் கதைகளோடுதான் இன்னும் உயிர் வாழ்கிறார்கள். "மகன் வருவான். அவன் எங்கோ வாழ்ந்து கொண்டிருக்கிறான்" என்று புதுப்புதுக் கதைகளைச் சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். அண்மையில் சந்தித்தபோது "அவன் திருமணம் முடித்துக் குடும்பமாக வாழ்ந்து கொண்டிருப்பதாக அறிந்தோம்" என்றார்கள்.






# காணாமல் போகடிக்கப்பட்டவர்கள்

பேரக்குழந்தைகளைக் கனவில் தன்னுடைய மனைவி கண்டதாக நண்பர் சொன்னார். "மகன் இப்போது எப்படியிருப்பான்" என்று அவர் மனதில் உருவகித்து, வரைந்து கொண்டிருக்கும் ஓவியத்தைக் காட்டினார். அதில், அவன் பிள்ளைகளோடு கூடியிருக்கும் காட்சியை வரைந்து கொண்டிருந்தார். அவருடைய கண்களைப் பார்த்தேன். என்னைப் பார்ப்பதைத் தவிர்த்தார். அவருக்குத் தெரியும், "தான் நம்ப முடியாத ஒன்றை நம்பிக்கொண்டிருக்கிறேன்" என்று.

இதற்கிடையில் 'உங்கட மகனைப் பற்றித் தகவல் கிடைச்சிருக்கு, உங்கட மகனைக் கண்டதாக ஒருத்தர் சொன்னார், அவரை மீண்டும் உங்களிட்ட கூட்டி வரோணுமா?' என்றெல்லாம் சொல்லி, அந்தக் குடும்பத்திடம் ஏராளமாய் பணத்தைக் கறந்து கொண்டிருக்கிறார்கள், அவருடைய சில நண்பர்கள்.

ஆனாலும், அதைப் பற்றிய எந்தக் கோபமும் இல்லாமல் பிள்ளைப் பாசத்தில், "பிள்ளைக்காகத்தானே செலவழிக்கிறோம்" என்ற எண்ணத்தில், ஏதோ ஒரு வகையான நம்பிக்கையின் பின்னால் பணத்தைக் கொடுக்கிறார்கள். பொருட்களை வாங்கி அனுப்புகிறார்கள். தீராமலே தொடர்ந்து கொண்டிருக்கிறது, தேடும் பிள்ளையைப் பற்றிய அலைச்சல்.

இதனால் உருவாகும் பாதிப்புகளைப் பற்றி எல்லாம் எவரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. இந்தக் கதைகளை பலவிதமாக்கிக் காவித் திரிகிறவர்கள், பொய்யான கதைகளையே நம்புகிறவர்களில் "படித்தவர், படிக்காதவர்கள்" என்ற பேதங்களில்லை. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தங்களுக்கு வருகின்ற தகவல்களையும் சேதிகளையும் நம்புவதும், அதனால் குழம்பிக் கொள்வதும் வேறு. அவர்கள் பாதிப்புகளின் மத்தியில் இருக்கும்போது, "சரி பிழை, உண்மை எது பொய் எது" என்று எதைப்பற்றியும் பகுத்து ஆராய முடியாமலிருக்கலாம்.



அதற்கான உளச் சமனிலை அவர்களிடம் இருப்பதில்லை. எப்போதும் பதற்றமாகவே இருக்கும் மனதில் எந்தத் தகவலையும் பகுத்துப் பார்க்க முடியாது.

ஆனால், பொறுப்போடு நடந்துகொள்ள வேண்டியவர்கள், நியாயமாக நடந்து கொள்ள வேண்டியவர்கள் எல்லாம், வதந்திகளை நம்புவதும், அவற்றைப் பரப்புவதும் வேறு. அவர்கள், இந்த மாதிரி வருகின்ற பொறுப்பற்ற கதைகளாலும், செய்திகளாலும் ஏற்படுகின்ற பாதிப்புகளைப் பற்றிச் சிந்திக்காமல் நடந்து கொள்வதே மிகவும் கவலைக்குரியது.

## 03

வன்னிப் போரின்போது பல போராளிகள் போர்க்களங்களில் படையினரிடம் சரணடைந்திருக்கிறார்கள். அப்போதே அரசாங்கம் "இப்படி பல போராளிகள் படையினரிடம் சரணடைந்திருக்கிறார்கள்" என்று அறிவித்திருக்கிறது. ஆனால், அப்படிச் சரணடைந்த போராளிகளைப் பற்றிய எந்த விபரங்களையும் அது வெளியிட்டதாகத் தெரியவில்லை. இதைப் பற்றி எந்த அரசியற் கட்சியோ அல்லது மனித உரிமை அமைப்புகளோ பேசியதாகவும் இல்லை.

அடுத்தது, வன்னிப்போரின் முடிவில் படையினரிடம் சென்ற, சரணடைந்த போராளிகள், போராளிகள் அல்லாதவர்களில் காணாமற்போனவர்கள், இப்படிக் காணாமற் போனவர்கள் அல்லது இது வரையில் தகவலே இல்லாமல் ஓராண்டுக்கும் மேலாக இருப்பவர்கள் எனப் பலர் உண்டு.

இந்த எண்ணிக்கை "ஆயிரத்துக்கு மேல். இரண்டாயிரத்துக்கும் அதிகம்" என்று நம்பப்படுகிறது. இதில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களிலிருந்து சாதாரண பொதுமக்கள் வரை அடங்குவர்.

இவர்களைப் பற்றி யாரிடம் கேட்பது? யார் பதில் சொல்வது? எங்கே முறையிடுவது? சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும் ஐ.நா அமைப்புகளிடமும் கிறிஸ்தவ அமைப்புகளிடமும், இலங்கை மனித உரிமைகள் அமைப்பிடமும் பொலிஸிடமும் என்று தங்களுடைய உறவினர்களைப் பற்றி ஒவ்வொருவரும் புகார் செய்திருக்கின்றனர். ஆனால், எதற்கும் பதில் கிடையாது. புகாருக்கான எந்தத் தகவலும் வழங்கப்படுவதுமில்லை.

இதற்கிடையில் சம்மந்தப்பட்டவர் - அதாவது "காணாமற்போனவர் அங்கே நிற்கிறார்", "இங்கே நிற்கிறார்", "மருத்துவமனைக்கு கொண்டு வரும்போது இன்னார் கண்டாராம்", "அவர் அப்படி நிற்கிறாராம்", "இவர் இன்னாரோடு இப்படி நிற்கிறாராம்" என்ற பேச்சுகள். இந்தப் பேச்சுகளால் சம்மந்தப்பட்ட பாதிக்கப்பட்டிருக்கும் - காணாமற் போனவர்களுடைய குடும்பங்கள் அடைகின்ற வதைகள் கொஞ்சமல்ல.

இத்தகைய பேச்சுகளைப் பொறுப்பற்ற விதத்தில் பேசுவது எவ்வளவு குற்றத்துக்குரியது? எத்தனை பெரிய மனச்சாட்சியற்ற செயலாகும்? பாதிப்புக்குள்ளாகியிருக்கும் மக்களுடைய உள நிலையைப் பற்றி ஒரு சமூகம் நாகரீகமில்லாமல் நடந்து கொள்ளுமா? அப்படி நாகரீகமில்லாமல் நடந்து கொண்டு பிறகெப்படி பிறருடைய மனச் சாட்சியைப் பற்றியும் அறத்தைப் பற்றியும் கேள்வி எழுப்ப முடியும்? அப்படிக் கேள்வி எழுப்புவதற்கு அதற்கு எங்கேயிருந்து அதற்கான அடிப்படைத்தகுதி கிடைக்கிறது?

"தங்களுடைய பிள்ளைகளைக் காணவில்லை" என்று தவித்துக் கொண்டிருக்கும் பெற்றோர், தெரு நீளம் அலைகிறார்கள். தங்களுக்குத் தெரிந்த இடங்களிலெல்லாம் ஏறி இறங்குகிறார்கள். காணாமற்போன பிள்ளைகளைப் பற்றிய விவரங்கள், தங்களுடைய குடும்ப விவரங்கள், பிள்ளையின் படங்கள் என எல்லாவற்றையும் காவிக்கொண்டு திரிகிறார்கள். போவோர் வருவோர், தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என்று எல்லோரிடமும் தங்களுடைய நிலையைச் சொல்கிறார்கள். சிலர் தங்களை மறந்தே புலம்பும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

கையில் காசில்லாமல், கடன்பட்டுக் கொண்டு, போட்டோக்களில் மேலதிக பிரதிகளை எடுத்து எடுத்தே களைத்தபடி, "போட்டோக் கொப்பி" என ஆவணங்களைப் பிரதி பண்ணிக் கொண்டு, இவர்கள் தேடியலைவதை சற்று அறிவோடு பார்த்தால் அந்த வேதனையை விளங்கிக் கொள்ள முடியும்.

இதைப்போலவே காணாமற்போன தங்களுடைய கணவன்மாரைத் தேடும் நூற்றுக்கணக்கான பெண்கள். தங்களுடைய தந்தையையோ, தாயையோ தேடிக் கொண்டிருக்கும் பல பிள்ளைகள், சகோதரர்களைத் தேடும் சகோதரர்களும் சகோதரிகளும். கண்ணீரும் கவலையும் நிரந்தரமாகிவிடுமோ? என்ற அச்சத்தில் நின்றும் அந்த அச்சத்தைக் கடக்க வேண்டும் என்றும் தடுமாறிக் கொண்டிருக்கும் இவர்களுடைய அந்தரிப்பு மிகக் கொடுமை யானது.

இவர்களுடைய பரிதவிப்பையும் ஏக்கத்தையும் அந்தர நிலையையும் பயன்படுத்தி ஏமாற்றிப் பிழைத்துக் கொண்டிருக்கிறது ஒரு பெருங் கூட்டம். இந்தக் கூட்டத்தில் அரசாங்க அதிகாரிகள், பொலிஸ், அரசியல்வாதிகள், பொது அமைப்புகளையும் தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்தோர், படையினர், படை அதிகாரிகள் என நீண்ட பட்டியல் உண்டு.

இவர்கள் தங்களுடைய உறவுகளைப் பற்றிய தகவல்களை அறியத் தவிப்போருக்கு, பொய்யான தகவல்களைச் சொல்லிக் காசு கறக்கிறார்கள். "காணாமற்போனவர்களைக் கண்டு பிடித்துத் தருகிறோம்" என்றும் காசு பிடுங்குகிறார்கள். சிலர், "ஆட்களை மீட்டுத் தருகிறோம்" என்று காசு வாங்குகிறார்கள். இப்படிச் சொல்லும் தரப்புகளிடம் கன பேர் நம்பி ஏமாந்து விட்டனர். முன்னரே சொன்னதைப் போல இந்தச் செய்திகளை நம்பாமல் இருக்கவும் முடியாது. நம்பவும் முடியாது.

முன்னர் வெளிநாடுகளுக்கு ஆட்களைக் கூட்டிச் செல்லும் ஏஜென்ஸிகளிடம் இப்படி நம்பி ஏமாந்தவர்கள் நிறையப்பேர் உண்டு.

ஆனால், அந்த ஏமாற்றம் வேறு. இது வேறு. இது உயிருடன் சம்மந்தப்பட்டது.

காணாமற் போனவர் உயிருடன் இருக்கிறாரா? இல்லையா? என்றே தெரியாத நிலையில், சம்மந்தப்பட்டவருக்கு ஒரு சடங்கைக்கூடச் செய்ய முடியாத நிலையில், ஆண்டுகளைக் கழித்துக் கொண்டிருக்கும் இந்த மக்கள் சொல்லும் கதைகள், இதயத்தைப் பிழியும். மெலிந்து, கன்னங்கள் ஒட்டி, தலையெல்லாம் வாரப்படாமலே காய்ந்து காற்றில் பறக்க, திரியும் யாரையாவது கண்டால், அவர்கள் காணாமற் போனோரின் சொந்தக்காரர்கள் என்று சந்தேகமேயில்லாமல் அடையாளங் காணலாம். இப்படித் திரிவோர் ஒருவர் அல்ல இருவர் அல்ல, ஆயிரக்கணக்கானோர். இப்படி நிறைய.

காணாமற் போனோரைப் பற்றிய துயரம் பல வகையானது.

## 04

என்னுடைய தோழி ஒருத்தி தன்னுடைய தம்பியைத் தேடிக் கொண்டிருக்கிறாள். மூன்று பெண்களுக்கு ஒரே ஆண் அவன். வலு சுட்டி. சுறுசுறுப்பு. கெட்டிக்காரன். ஆனால் எந்த முடிவும் இல்லாமலே, எந்தச் சுவடும் இல்லாமல் நாட்கள் கழிகின்றன. அவளிடமும் அவளுடைய குடும்பத்திடமும் இருக்கின்றன. அவனைப் பற்றி ஆயிரமாயிரம் கதைகள். அந்த ஒவ்வொரு கதைகளும் உள்ளுக்குள்ளே கண்ணீரை நிரப்பி வைத்திருக்கின்றன. தொட்டால் போதும் பட்டென்று உடைந்து நம்மையே மூழ்கடித்து விடும் கண்ணீர்.

## 05

1978 அல்லது 80 என்று நினைக்கிறேன். மஹாகவியின் "புதியதொரு வீடு" 'பா' நாடகத்தைப் பார்த்தேன். கடலுக்குத் தொழிலுக்காகப் போய் காணாமற் போனவரைப் பற்றிய கதை அது. காணாமற்போனவர் நீண்ட நாட்களின் பின்னர் ஒரு நாள் திரும்பி வருகிறார். அவர் வரும் போது வாழ்க்கை மாறி விட்டது. நிகழ்ச்சிகள் பல நடந்து விட்டன. காலம் தன் விளையாட்டில் பல கோலங்களை வரைந்து விட்டது. திரும்பி வந்தவர் வந்த வழி திரும்புகிறார். அதுவோரு உச்சநிலைத் துயரம். அதுதான் விதி. அதுதான் வாழ்க்கை.

காணாமற்போனவர்கள் - காணாமற் போகடிக்கப்பட்டவர்கள் - எந்த நிலையிலும் திரும்பி வந்தால் அது போதும். கண்ணீருடன் வாழவே முடியாது அதற்காக.



# இடிக்கப்படும் தொன்மை

## வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோயிலுக்கு நேர்ந்த கதி

அ.றொக்சன்

ஒரு இனம் அழிக்கப்பட வேண்டுமாயின் அதன் வரலாறு அழிக்கப்பட வேண்டும். இது போன்றே எதிரியின் கோட்பாடுகள் அமைந்திருக்கின்றன. எனவே எதிரிக்குத் துணைபோகின்ற வகையில் எமது நடவடிக்கைகளும் அமைந்திருப்பது வருந்தத்தக்கதாக அமைகின்றது. கோயிலானாலும் சரி, கிறிஸ்தவ தேவாலயங்களானாலும் சரி இவை பல நூற்றாண்டு பழமை வாய்ந்ததென்று கருதப்பட்டால், அவை நிச்சயம் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதில் இரு கருத்துக்கு இடமில்லை. அவையெல்லாம் எமது இனத்தின் கதையைச் சொல்லி நிற்பன. பல்லாண்டு கால வரலாற்றைச் சொல்லி நிற்பன.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் பருத்தித்துறைப்பகுதியிலுள்ள பெரிய வளவு வரத விநாயகர் ஆலய முன் மண்டபத்தூண்கள் (அவை அறுபது வருடங்களுக்கு மேலான வரலாற்றுப் பதிவுகளைக் கொண்டவை)கிராம மக்கள் எதிர்ப்பையும் மீறி அழிக்கப்பட்டுள்ளன. கேட்டால் ஆலய அபிவிருத்திப் பணி என்கின்றனர் பரிபாலன சபையினர். அபிவிருத்தி என்ற போர்வையில் ஒரு சமூகத்தின் கதை, ஒரு சமூகத்தின் வரலாறு ஒழிக்கப்படுவது நியாயமா? என்கின்றனர் சமூக ஆர்வலர்கள். அந்தச் சம்பவம் நடந்த சூடு ஆறுவதற்கிடையில் தற்போது வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோயிலில் இருந்த பழமையான தூண்களும் இடிக்கப்பட்டிருக்கின்றன. புனர் நிர்மாணப் பணிகள் என்ற போர்வையில், ஊராரின் எதிர்ப்புக்கு மத்தியிலும், புதிய நிர்வாக சபையினர் இந்த அழிப்புப்பணியைச் செய்துள்ளனர். சுமார் நூறு வருடத்திற்கு மேல் பழமை வாய்ந்த கோயில் இது.

### 500 வருடக் கிணற்றையும் மூட முடிவு?

´மேற்படி கோயிலின் கொடிக்கம்பத்திற்கு அருகாமையிலுள்ள மண்டபத்திலிருந்த ஆறு பழமை வாய்ந்த தூண்கள் இடிக்கப்பட்டுள்ளதோடு, தேக்கு மரத்திலான மேற்கூரையின் ஊசிக் காலும் கழட்டப்பட்டுள்ளது. அத்தோடு இக் கோயிலின் தெற்குப் பக்கத்தில் சுண்ணாம்பு கற்களினால் கட்டப்பட்டிருந்த சுவர் முற்று முழுதாக இடித்தழிக்கப்பட்டுள்ளதோடு களஞ்சிய அறை, மடப்பள்ளி, அலுவலக அறை என்பனவும் இடித்தழிக்கப்பட்டிருக்கின்றன. தற்பொழுது இக்கோயிலுக்கு அருகிலுள்ள சுமார் ஐந்நூறு வருடங்கள் பழமை வாய்ந்த கிணறொன்று இருக்கிறது. இதனையும் மூடுவதற்கு புதிய நிர்வாகம் முடிவெடுத்துள்ளதாகக் கோயிலைக் கட்டியவரான கணபதியார் தம்பையாவின் பீட்டப்பிள்ளையும், ஓய்வுபெற்ற கிராம சேவகருமான செல்வி நவராகினி சண்முகம் பெரும் குற்றச்சாட்டை முன் வைத்திருக்கிறார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி அடைக்கலம் தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோயிலின் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் இப்பழமை வாய்ந்த கோயிலை புதிய நிர்வாகத்தினர் புனர்நிர்மாணம் செய்வதாகக் கூறி 2016 ஆம் ஆண்டு ஆனி மாதம் கோயிலின் மேற்படி பகுதிகளை இடித்தழித்துள்ளனர். மேற்படி கோயிலின் பகுதிகள் இடிக்கப்பட்டு ஆறு மாதங்கள் கடந்த நிலையில், கோயிலில் எந்தவிதமான புனர் நிர்மாணப் பணிகளும் ஆரம்பிக்கப்படவில்லை என்பதோடு, வேலையும் கிடப்பிலேயே போடப்பட்டுள்ளது.

இடிக்கப்பட்ட பகுதிகளை புனர் நிர்மாணம் செய்வதற்கெனப் புதிய நிர்வாகத்தினரால் சிற்பாச்சாரியர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்கும் நிர்வாகத் தலைவருக்கும் இடையில் ஏற்பட்ட நிதி தொடர்பான முரண்பாடு காரணமாகச் சிற்பாச்சாரியார் வேலையை நிறுத்தி விட்டதாகக் காரணம் சொல்லப்படுகிறது. இதனால் "இக்கோயிலின் மிகுதிப்பகுதி இடிக்கப்படாமல் தப்பியுள்ளது" என்று அயலவர்கள் கூறுகின்றனர்.

### மிகத் தொன்மையான வரலாறு

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் மேற்குப் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள வட்டுக்கோட்டை கிழக்கு கிராம அலுவர் பிரிவில், தெல்லிப்பழை வீதி மாவடிச் சந்திக்கு அருகாமையிலேயே இந்த அடைக்கலம் தோட்டம் ஸ்ரீ கந்தசாமி கோயில் அமைந்துள்ளது. வட்டுக்கோட்டைக் கிராமத்தின் மத்தியில் தமிழர்களின் பண்பாட்டை எடுத்தியம்பும் அரும் பெரும் கலைச்சொத்தாகத் திகழ்வதே இக் கோயிலின் சிறப்பம்சமாகும். ஆதியில் இக்கோயில் மானங்காத்த பிள்ளையார் கோயிலில், மானம்காத்த அடைக்கலம் கொடுத்த பிள்ளையார் கோயில், சுப்பிரமணிய பிள்ளையார் கோயில், அடைக்கலம் தோட்டத்துக் கந்தசுவாமியார் கோயில் என்ற பெயர்கள் கொண்டு விளங்கி வந்துள்ளது. இக் கோயில் மூன்று முறை அழிக்கப்பட்டு மீண்டும் கட்டப்பட்டதாக இதன் வரலாறு கூறுகிறது.

### முதலாவது கோயில் (கி.பி 1760)

சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட இடத்திலே மானம்காத்த பிள்ளையார் என்றொரு கோயில் இருந்துள்ளது. இது போர்த்துக்கேயர் காலத்திற்கு முற்பட்டதாகும். இக் கோயில் காலப்போக்கில் சிதைவடைந்திருக்கலாம் அல்லது போர்த்துக்கேயர்களினால் இடித்தழிக்கப்பட்டிருக்கலாம். அதன் பின்னர் தற்போதுள்ள கோயிலின் (மூன்றாவது கோயில்) மேற்குப் புறத்திலுள்ள தல விருட்சமான வெண் அரசமரத்திற்கு அண்மையில், முனிவர் ஒருவர் தவம் செய்ததாகவும் அம்முனிவர் அவ்விடத்திலேயே சமாதியடைந்த பின்னர் கி.பி 1760 ஆம் ஆண்டிற்கு முன்பின்னராக கந்தசுவாமியருக்கு மடாலயம் போன்ற சிறுகோயில் (முதலாவது கோயில்) செங்கற்கள் மற்றும் சுண்ணாம்பு என்பவற்றால் கட்டப்பட்டு வழிபட்டு வந்ததாகவும், இக் கோயிலைச் சூழவுள்ளோர் சந்ததி சந்ததியாகக் கோயில் வரலாற்றைக் கூறிவந்துள்ளனர். தெல்லிப்பழை வீதியுடன் ஒட்டியிருந்துள்ள இக் கோயிலுக்குரிய கேணியும், 1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூடப்பட்டு விட்டது.

### இரண்டாவது கோயில் (கி.பி 1912)

காலப்போக்கில் செங்கற்கள், சுண்ணாம்பு என்பவற்றால் கட்டிய இம் மடாலயம் சேதமடையத் தொடங்க, கி.பி 1860 ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கோயிலின் ஆதி உரிமையாளர் என்று சொல்லப்படுகின்ற சேதுகாவலர் அம்பலவாணர் மற்றும் அவரது பேரன் (மகளின் மகன்) முருகர் வைத்திலிங்கம் ஆகியோரினால் தற்போதுள்ள கோயிலின் (மூன்றாவது கோயில்) தேர்முட்டி இருக்கும் இடத்தில் இரண்டாவது கோயிலுக்கான அத்திவாரம் போடப்பட்டது. எனினும் இது தொடர்பில் போட்ட வழக்கு காரணமாக மேற்படி, இரண்டாவது கோயில் கட்டி எழுப்பப்படாமல் அத்திவாரத்துடனே தடைப்பட்டது.


அதனைத்தொடர்ந்து காலப்போக்கில் செங்கட்டியிலான முதலாவது கோயில் மேலும் சிதைவடைந்து கருவறையின் சுவர் இடிந்து விழும் நிலை ஏற்பட்டது. இதனால் 1911 ஆம் ஆண்டளவில் மூலவரான கந்த சுவாமியாரை தொடர்ச்சியாக அக் கோயிலில் வைத்திருக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. இதனால் இக் கோயிலின் உரிமையாளராக இருந்த சேதுகாவலர் அம்பலவாணரின் பேரன் (மகனின் மகன்) கணபதியார் தம்பையா இக்கோயிலில் காணப்பட்ட பலகையிலான வெற்று மண்டபத்தில் மூலவரை பாலஸ்தானம் செய்துவித்தார். இம்மண்டபமும் விரைவில் சிதைவடைய அவர் மரப்பெட்டியொன்று செய்து 1911 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பாலஸ்தானம் செய்து மூலவரை அங்கு எழுந்தருளச் செய்தார்.

1912 இல் முதலாவது கோயில் முழுவதுமாக சிதைவடைந்தது. இந் நிலையில் அதே ஆண்டில் கணபதியார் தம்பையா தனது பாட்டனாரினால் 1860 இல் இடப்பட்ட அத்திவாரத்திலேயே இரண்டாவது கோயிலைக் கட்டி முடித்தார்.

### மூன்றாவது கோயில் (கி.பி 1913)

இரண்டாவது கோயில் கட்டிமுடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இக்காலப் பகுதியிலேயே இன்னொரு சமூகத்தினர் இக்கோயில் அருகாமையிலேயே ஒரு சிறு கோயிலைக் கட்டத் தொடங்கினார்கள். இந் நிலையில் ஒரு சமூகத்தினரான கணபதியார் தம்பையாவின் பதினாறு பிள்ளைகளில், பத்துப்பிள்ளைகள் ஒன்றன்பின் ஒன்றாக இறந்துவிட்டனர். சிறு கோயிலைக்கட்ட ஒழுங்கு செய்த மற்ற சமூகத்தினரும் ஒருவர் ஒருவராக இறந்தனர். இதனால் இரு சமூகத்தினரும் செய்வதறியாது திகிலடைந்தனர். இறுதியில் இரண்டாவது கோயிலையும் கைவிட்டு விட்டு புதுக்கோயிலைக் கட்டுவதற்கு நிர்வாகத்தின் முடிவுக்குக் கணபதியார் தம்பையா உடன்பட்டார்.

1912 இல் இரண்டாவது கோயில் இடித்தழிக்கப்பட்டு புதுக்கோயில் கட்டுவதற்காக அதன் பெறுமதி வாய்ந்த கட்டடப் பொருட்கள் சேகரித்து வைக்கப்பட்டதோடு, மூன்றாவது கோயில் கட்டுவதற்கும் தீர்மானித்தனர். இதற்கமைவாக கணபதியார் தம்பையாவினால், கி.பி 1913 ஆம் ஆண்டு தை மாதம் தற்போதுள்ள மூன்றாவது கோயிலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அதனைத்தொடர்ந்து வைரக்கற்களாலான கர்ப்பக்கிரகம் (மூலஸ்தானம்) அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகிய கோயிலின் முக்கிய பகுதிகள் கட்டி முடிக்கப்பட்டன. முதலாவது கோயில் கர்ப்பக்கிரகம் (மூலஸ்தானம்) அமைந்திருந்த இடத்திலேயே மூன்றாவது கோயிலின் கர்ப்பக்கிரகமும் (மூலஸ்தானம்) அமைக்கப்பட்டது. அதன் பின்னர் கோயில் முழுவதும் கட்டி முடிக்கப்பட்டது. இக் கோயில் திருப்பணிக்கு அக்காலத்தில் 12 ஆயிரம் ரூபா செலவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



(18 ஆம் பக்கம் பார்க்க ...)

# வாரப்பலன்

**மேடம்**
காரியத் தடை. மனைச் சிறப்பு. புதிய வரவு. வாகனச் சிறப்பு. ஜெயம்

**ரிஷபம்**
போகநிலை. தானியச் சிறப்பு, வேலையாட்கள் சகாயம். துணை நலம்.

**மிதுனம்**
தேகசுகம் பாதிப்பு. துணிந்த நிலை. புத்திரரார் கவலை. காரியஜெயம்.

**கடகம்**
குலச் சிறப்பு. காரியம் கைகூடல். உழைப்புக்கேற்ற ஊதியமின்மை.

**சிம்மம்**
பணக் கவலை. கல்வி மேம்பாடு. மனைச் சிறப்பு. காரியசித்தி.

**கன்னி**
தியானம். தனித்த நிலை. ஆதாரமின்மை. இறைஅருள். பயம்.

**துலாம்**
சாதகமற்ற கிரக நிலை. துணை நலக் கேடு. பசியின்மை. தெய்வ பக்தி.

**விருச்சிகம்**
உறக்க மின்மை. பொதுப் பணியில் ஆர்வம். தெய்வ அநுக்கிரகம்.

**தனுசு**
வேளாண்மைச் சிறப்பு. ஆலயதரிசனம். ஆர்வமின்மை. காரியத்தடை.

**மகரம்**
மூத்தோர் வருகை. மங்கல காரியம். தெய்வ அநுக்கிரகம். பயமிகுதி.

**கும்பம்**
புதிய ஸ்தானம். அதிகாரப்போக்கு. மனைமாட்சி. கல்வி மேம்பாடு.

**மீனம்**
பொருள் வருகை. நற் காரியத்தில் ஆர்வம். வாகனச் செலவு. ஜெயம்.




கடந்த 08.02.2017 அன்று உணவளிப்போம் Feed The Poor அமைப்பால் யாழ்ப்பாணம், கோப்பாய் மத்தியை சேர்ந்த ஸ்ரீகாந்தன் திலக்சன் எனும் 14 வயது சிறுவனுக்கு BLADDER OUTLET OBSERVATION, TREATMENT AND CYSTOSCOPY SURGERY என்னும் சத்திர சிகிச்சைக்கு ரூபா.150 000, கோப்பாய் பிரதேச செயலர் அலுவலகத்தில் வைத்து, உதவி பிரதேச செயலரின் ஊடாக வழங்கப்பட்டது. அத்துடன் புத்தகப்பை, பாடசாலைக் காலணிகள் என்பனவும் அக் குடும்பத்தை சேர்ந்த 4 பிள்ளைகளுக்கும் வழங்கப்பட்டன.




சிவசங்கர பண்டிதம், சிவஞானசித்தியார் என்ற இரு தொகுப்பு நூல்களின் வெளியீடு சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் வெளியீடாக 10 .02 .2017 அன்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

படங்கள் - அ.யேசுராசா



வன்னியில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் பு.சத்தியமூர்த்தியின் “நினைவுகளோடு பேசுதல்” - சிறப்புக் கருத்தமர்வு, யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் 12.02.2017 பி. ப. 3. 00 மணிக்கு நடைபெற்றது.

## ஒரு பறவையைப் போல...



யாழ்.பரியோவன் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், கலை, இலக்கிய, சமூக தளங்களில் தீவிர செயற்பாட்டாளருமான சண்முகம் முத்துலிங்கம் அவர்கள் கடந்த 14-02.2017 அன்று மாரடைப்பால் இயற்கை எய்தினார். அவரின் இழப்புக் குறித்த துயர் பகிர்வு ஒன்று.

“உங்கள் மரணம் பற்றிய செய்தி அறிந்ததிலிருந்து மானிடவாழ்வியல் பற்றிய என்னென்னவோ பற்பல சிந்தனைகளை என் மனம் என்னுள் தூண்டி விட்டிருக்கின்றது. உங்களுடனான எனது அறிமுகம் என்பது எல்லோரும் கூறுவதைப்போல விசித்திரமானதாகவோ, அற்புதங்கள் நிறைந்ததாகவோ அல்லது மகிழ்ச்சியாகவோ நிகழ்ந்த ஒன்றல்ல. அவ்வாறே நாம் ஒருவரை ஒருவர் அறிந்தவர்களுமல்ல. முரண்களின் வெம்மை தீர்க்க அவ்வப்பொழுதுகளில் முகப்புத்தகத்தில் பரஸ்பரம் கருத்துக்களின் மீதான பரிமாற்றங்கள் தவிர்த்து என்றேனும் ஒரு பொழுதிற்கூட பேசிப் பழகியவர்களுமல்ல.

என்னுள் புதைந்திருந்து அவ்வப்பொழுதுகளில் வெளிவந்து நின்ற அறிந்தும் அறியாததுமான பற்பல எண்ணங்கள் சிந்தனைகளும் அதேபோல உங்களிடமிருந்து வந்த பற்பல எண்ணங்களும் சிந்தனைகளும் எங்கோ ஓர் புள்ளியில் சந்தித்து முட்டி மோதியதால் ஏற்பட்ட கரடான பக்கங்களில் இருந்தே எழுந்தது என்பதில் எனக்கு கிஞ்சித்தும் சந்தேகமில்லை.

மரணமென்பது என் அறிவிற்குத்தெரிந்தவரை இயல்பானதும்,வலிகளோ எவ்விதமான பிரக்ஞைகளுமோ அற்றதொன்று. ஆனால் அது ஏற்படப் போகின்றது என்ற பயம். அந்தப் பயத்தால் ஏற்படும் எதிர்வினைகளே மானிடர்களை பாடாய்ப்படுத்தி அலைக்கழிக்கின்றது.

உலகவாழ்வியலை மிக அர்த்தபூர்வமாக உணர்த்திச் செல்வது மரணம் ஒன்றுமட்டுமே.எனினும் அதனை உணர்கையில் எவரும் இவ்வுலகில் இருக்கப்போவதுமில்லை அந்த உணர்வை எவருடனும் பகிர்ந்து கொள்ளப் போவதுமில்லை.

உங்கள் மரணத்தை நீங்கள் சந்தித்தவேளையில் நீங்களும் அதனை உணர்ந்திருப்பீர்கள், என்றோ ஒருநாளில் நானும் அதனைச் சந்திக்க நேர்கையில் உணர்ந்தே அதனுடன் சேர்ந்து பயணிப்பேன்.

ஆன்மா, மறுபிறவி என்பவைகள் பற்றி என்றும் நான் ஆழமாய்த் தெரிந்தவனுமல்ல, தெளிவு பெற்ற ஒருவனுமல்ல அதனால் உங்கள் ஆன்மா அமைதியில் உறங்கட்டும் என்று சொல்லவும் தயக்கமடைகிறேன்.

மரக்கிளையில் வந்து அமர்ந்து சென்ற ஒரு பறவையைப் போலவே உயிர்களின் பிறப்பும் இறப்பும் என்றாகவே என்னை நான் சமரசம்செய்துகொள்ள முயல்கின்றேன்.

- கார்வண்ணா சுபாஸ்






புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக நடத்தப்படும் ஆய்வரங்குத் தொடரின் இரண்டாவது அமர்வு “ஒக்ரோபர் புரட்சியும் தொழிலாளி வர்க்க விடுதலையும்” என்ற தலைப்பில் இடம்பெற்ற போது...



கடந்த வாரம் யாழ்ப்பாணம் கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்ற ம. குழந்தை சண்முகலிங்கத்தின் “அன்டிகனி” நாடகத்தில் ஒரு காட்சி...

# கடவுள் எங்கே இருக்கிறார்?



ஒரு புத்த மடாலயத் தலைவர் மிகவும் கவலையில் இருந்தார். ஒரு காலத்தில் அவரது மடாலயம் அந்தப் பகுதியிலேயே சிறப்பும் மதிப்பும் பெற்று விளங்கிய ஆலயம். தற்போது மதிப்புக் குறைந்து பாதாளத்திற்குப் போய்க் கொண்டிருந்தது, அவருக்குத் தெளிவாக விளங்கியது.

மடத்தின் உள்ளேயே பிக்குகள் யாரும் ஒருவரை ஒருவர் மதிக்காமல், தன்னிச்சையாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். பொறுக்க இயலாமல் ஒருநாள் அந்தத் தலைவர் தன்னை விட அனுபவத்தில் சிறந்த ஒரு குருவைத் தேடிப்போனார். தன் பிரச்சினையை எடுத்துச் சொன்னார்.

அந்தக் குருவும் சற்று நேரம் ஆழ்ந்து யோசித்து விட்டுப்பிறகு "உங்கள் மடத்தில் புத்தரே வந்து தங்கியிருக்கிறார். நீங்கள் எவரும் அவரைக் கண்டு கொள்ளவும் இல்லை. மதிக்கவும் இல்லை. பின் எப்படி சிறப்பு செழிக்கும்?" என்று கேட்டார்.

இதைக் கேட்ட நம் தலைவர் வியப்பு மாறாமலே மடத்திற்குத் திரும்ப வந்து அங்கே இருந்த புத்த பிக்குகளுக்கு விபரம் சொன்னார். அவர்களுக்கும் ஆச்சரியம். அந்தக் கணத்தில், "இருந்து சுற்றியிருப்பவர்களில் ஒருவர் கடவுளாக இருக்கக் கூடும்" என்ற அனுமானத்தில் எல்லோரையும் பணிவாகவும், அன்பாகவும், மிகுந்த மரியாதையுடனும் ஒவ்வொருவரும் அணுகினார்கள்.

நாளடைவில் மடத்தின் சிறப்பு பல மடங்கு உயர்ந்து போனது என்பதைச் சொல்லத் தேவையே இல்லை. கூடிச் செயற்படும் போது கொடுத்துப் பெறுதல் அவசியமான ஒரு சூட்சுமம் ஆகும்.

## பெரியாரின் வாழ்வில்..



# குருவின் வாக்கு பலிதம்

குருவின் இல்லத்தில் பிரார்த்தனை நடந்து கொண்டிருந்தது. ஒரு சீடன் தட்டில் இருந்த நெருப்பில் சாம்பிராணி போட்டுக் கொண்டிருந்தான். அவன் அளவு பார்க்காது கை நிறைய அள்ளி அள்ளிப் போட்டுக் கொண்டிருந்தான்.

அக்காலத்தில் சாம்பிராணிக்கு மிகப்பெரும் தட்டுப்பாடு நிலவியது. இதனால் சீடனின் செய்கையைக் கண்ட குரு சொன்னார் "அப்பனே சாம்பிராணியை கொஞ்சமாகப் போடு. பின்னா ளில் சாம்பிராணி விளையும் நாடு எதையும் போரில் வென்றால் அள்ளிப் போடலாம்" என்றார்.

காலங்கள் ஓடின. ஒருமுறை குருவின் இல்லத்துக்கு மூட்டை மூட்டையாக சாம்பிராணிப் பொருட்கள் வந்திறங்கின. வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த குருவைப் பணிந்த சேவகன் ஒருவர் அவரிடம் ஓலை ஒன்றைக் கொடுத்தான்.

அதில் "பெருமானே இனி பிரார்த்தனையின் போது தாங்கள் சிக்கனம் காட்ட வேண்டியதில்லை. தாராளமாகப் பயன்படுத்தலாம்" என்றிருந்தது. அடியில் 'அலெக்ஸாண்டர்' என்ற கையொப்பமும் இருந்தது.

ஆம்... மாவீரன் அலெக்ஸாண்டர்தான் அந்த சீடன். சிரியா நாட்டை போரில் வென்று சாம்பிராணி பொருள்களை தனது குருவுக்கு அனுப்பிவைத்தார்.




ஹாய் குட்டீஸ்...!

உங்களின் படைப்புகள் அனைத்தும் புதுவிதியில் பிரசுரமாக வேண்டுமா? உடன் எழுதி அனுப்புங்கள்.

puthuvithi@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கும் உங்கள் படைப்புகளை அனுப்பி வைக்க முடியும்.

'புதுவிதி' இல.107 இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.


# அதிசயத் தகவல்கள்

★ நாம் பயன்படுத்தும் கைபேசிகளின் சிம் அட்டைகள் பிளாஸ்டிக் என்றே பலரும் கருதுகின்றனர். உண்மையில் தாவரங்களில் கிடைக்கும் செலுலோஸ் என்பதில் இருந்தே சிம் தயாரிக்கப்படுகின்றது.

★ இரவில் படுக்கையில் சிறுநீர் கழிக்கும் பழக்கம் குழந்தைகளுக்கு உண்டு. பெண் குழந்தைகளை விட ஆண் குந்தைகளே இப்பழக்கத்துக்கு அதிகமாக உள்ளாகின்றனர்.

★ நமது உள்ளங்கையில் ஒரு சதுர அங்குலத்தில் மூவாயிரம் வியர்வைச் சுரப்பிகள் உள்ளன.

★ நைல் நதியில் மேலே செல்லும் நீரோட்டத்தை விட அடிமட்டத்தில் பாயும் நீரின் மடங்கு 6 மடங்கு அதிகமாகும்.

★ நீல நிறக் கண்களை உடையவர்களுக்கு ஏனையோரை விட இரவுப் பார்வைத் திறன் துல்லியமாகத் தெரியும்.

★ சுப்பர் கணனியை விட எமது மூளை பல மடங்கு சக்தி வாய்ந்தது. 100 பில்லியன் நரம்பு செல்களால் உருவானதே எமது மூளை.

★ ஜேர்மன் ஷெப்பர்ட் வகை நாய்களே மனிதர்களை அதிகளவில் கடிக்கிறது.

★ ஆண்களின் உடைகளில் வலது பக்கமும் பெண்களின் உடைகளில் இடது பக்கமும் பட்டன்கள் அமைந்திருக்கும். இங்கிலாந்து அரச குடும்பத்திலிருந்தே இந்தப் பழக்கம் ஏற்பட்டது.

★ தேன் இலகுவாக சமிபாடடைந்துவிடும். ஏனெனில் அது தேனீக்களால் ஜீரணிக்கப் பட்டமைதான்.

# தேயிலை

## அரிய தகவல்கள்



★ இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்னரே சீன அரசனான சென் நூங் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

★ உலகில் தண்ணீருக்கு அடுத்து அதிகம் அருந்தப்படும் பானம் தேநீர்.

★ மத்திய காலத்தில் ஆங்கிலேயர்கள் காலையில் தேநீர் அருந்தும் முன்னர் பியர் அருந்தும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர்.

★ அமெரிக்கர்கள் குளிர்ந்த தேநீரை அதிகம் அருந்தும் பழக்கமுடையவர்கள்.

★ பிரான்ஸ், கொரியா, வியட்நாம் நாட்டை சேர்ந்தவர்கள் பால் கலக்காத தேநீரை அருந்தவே விரும்புகின்றனர்.

★ ஈரானியர்கள் தேநீர் அருந்தும் முன்னர் பற்களிடையே சீனிக் கட்டிகளை வைத்திருப்பர்.

★ உலக சந்தையில் இலங்கையின் தேயிலைக்கு அதிக புகழ் உள்ளது.

★ தேயிலையில் மூவாயிரத்துக்கும் அதிகமான வகைகள் உள்ளன. ஆனாலும் இவை கறுப்பு, பச்சை, வெள்ளை, பழுப்பு நிறமுடையவை.

★ தேயிலை இலைகளை வாசித்து எதிர்காலத்தை எதிர்வு கூறும் கலை ரஸ்ஸோலொஜி எனப்படுகின்றது.

# குட்டீஸ் பரிசுப் போதி - 32

★ கடந்த 15.02.2017 அன்று எத்தனை செயற்கைக் கோள்களை ஒரே தடவையில் விண்ணில் செலுத்தி இந்தியா உலக சாதனை படைத்தது?

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

குட்டீஸ் பரிசுப்பொதி - 32

முடிவுத்திகதி: 24.02.2017

**குட்டீஸ் பரிசுப் பொதி - 30 முடிவுகள்**

விடை: ரஷ்யா

★ இனியவன்
தரம்-07
கிளி/வட்டக்கச்சி மத்திய
கல்லூரி

பாடசாலை மாணவர்கள் மட்டுமே பங்கேற்கலாம். (துபால் அட்டையில் பாடசாலை தரம் குறிப்பிட வேண்டும்.)

# புறநானூறு: போரும் அமைதியும்

முனைவர் ஜெ.அரங்கராஜ்
(ஆய்வறிஞர், யாழ்ப்பாணம்)

ஓர் ஆட்சியின் சிறப்பு நால்வகைப் படைகளில் வலிவால் அமைவதால், விருப்புடன் ஆட்சி செய்தல் அறமாகாது, சமூக ஒருங்கிணைப்பை ஏற்படுத்தாது, அறநெறி பிழைக்கும்போது தமிழ் அறிவுலகம் அதனைப் பல்வேறுவகையில் எதிர் கொண்டது. இதனை,

அறநெறி முதற்றே யரசின் கொற்றம்
அதனால் நமரெனக் கோடல் கோடாது
பிறரெனக் குணங்கொல் லாது
ஞாயிற் றன்ன வெந்திற லாண்மையும்
திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையும் மூன்றும்
உடையை யாகி யில்லோர் கையற
நீடு வாழிய நெடுந்தகை.
(புறம்.55:11-17)

ஆட்சியாளர்களின் அறிவு, ஈரம் பெருங்கண்ணோட்டம் முதலாய பண்புகள் அச்சமூகத்தின் அமைதியினைக் காப்பதாக அமையும். ஆயுதங்களின் பலத்தினைக் காட்டிலும் அறவழிப்பட்ட செங்கோலினையுடைய ஆட்சியே மக்களின் அமைதியைக் காக்கவல்லது. இதனையே,

அம்புதுஞ்சுங் கடியரணால்
அறந்துஞ்சுஞ் செற்கோலையே
(புறம்.20:16-17)

அறம்பிழைப்பின், அந்நாட்டின் வளம் குன்றும், நகரங்கள் பொலிவிழக்கும், அறிவுடையோரின் மொழிகள் இகழப்படுவதன் வினாவை கபிலர் கூறுகிறார்.

வெண்ணி நிலைஇய விழுப்புக ழோன்றி
இருபாற் பெயரிய வுருகெழு மூதூர்க்
கோடிபல வடுக்கிய பொருநுமக் குதவிய
நீடுநிலை யரையத்துக் கேடுங் கேளினி
நுந்தை தாய நிறைவுற வெய்திய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்
நும்போ லறிவி னுமரு ளொருவன்
புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையை
இகழ்ந்ததன் பயனே யியற்றே ரண்ணல்
(புறம்.202:5-13)

அறத்தின் வலிமை கூறிய புலவர், கழத் தலையாரை இருங்கோவேளின் முன்னோர் பழித்ததால்தான், அவனது செல்வ நகரங்கள் அழிந்ததாகக் குறிப்பிடுகிறார். இக்குழாத்தலையார்தான் அறப்போர் குறித்த புறம் 82 ஆம் பாடலைப் பாடியுள்ளார் என்பது எண்ணத்தக்கது. தங்களுக்கு உரித்தில்லாத நாட்டினைக் கைக்கொள்ள நினைத்தல், அறம் வழுவிய செயலாம். இதனால் குடிகளின் அமைதி குன்றும்; நாடு சீர்கெடும் என்பதினைப் பிரமனார் எனும் புலவர்பாடிய புறம் 357 பாடலின் வழியறியலாம்.

எவ்வகையான குற்றங்கள் செய்தாலும் அதற்கான கழுவாய் ஒன்றுண்டு. ஆனால் ஒருவன் தன்னைச் சார்ந்து நம்பினோனுக்கு அவன் செய்த நன்றியை மறந்து இரண்டகம் செய்வானாயின் அவனுக்கு உய்வே இல்லை என்பதாகப் பண்டைத் தமிழ் மரபு கூறுகின்றது.

அடுதலும், தொடுதலும் உலகத்தியல்பு என, இரண்டு மன்னர்கள் தம்முள்ளே பகைக் கொண்டு போரிடுவதை ஏற்றுக் கொண்ட தமிழ் அறிவுப்புலம், நன்றி மறத்தலையும், இரண்டகம் செய்வதையும் கடுமையாக எதிர்க்கிறது. பசுவின் பால் தரும் மடியினை அறுத்தோர்க்கும், கருவுற்ற பெண்ணின் கருவைச் சிதைத்தோனுக்கும் கழுவாய் உண்டு. ஆனால் நன்றியற்றோனுக்கோ இரண்டகம் செய்தோனுக்கோ பூமி தலைகீழாய்த் திரிந்தாலும் கழுவாய் இல்லை என அறம் கூறுவதாகக் கூறுவதினை,

ஆன்முலை யறுத்த வறனிலோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
கரவார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டிற்றே யாழிழை
(புறம்:34:1-7)

இரண்டகம் சமூக அமைதியைக் கெடுத்து மக்களின் நம்பிக்கையைக் கெடுத்து பெரும் கேடும், அழிவும் விளைவிக்க வல்லது. நெடுங்காலமாய் சமுதாய அமைதிக்கு, இது பெருங்காரணமாயிற்றமையால், இதனை அறிஞர் கண்டித்தனர் போலும்.

“இப்பிறப்பிலே நன்மை செய்தால், அறம் செய்தால், மறுபிறப்பிலே நற்பயனையடையலாம்” எனும் கருத்தியலைத் தமிழ்மரபு மறுக்கும் நிலையும் உண்டு. மறுமைநோக்கி, அறம் செய்வோரை அறவிலை வணிகனென ஏணிச்சேரி முடமோசியார் கூறுகிறார். வேள் ஆய் அண்டிரன் அப்படிப்பட்ட அறவிலை வணிகனல்லன்; அவன் சான்றோன் வழிச் செல்பவன் என்பதினை,

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிக னாயலன் பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டனன் றவன்கை வண்மையே
(புறம்.134)

எனும் பாடலால் அறியலாம்.

பண்டைத் தமிழரின் போரியல் அறம் தமிழ் சமுதாயத்தின் அமைதியினை எவ்வகையில் போற்றியது என்பதினை மேற்கண்டவாறு புறநானூற்றுப் பாடல்களின் வழியறியலாம். ●



(முற்றும்...)

# சாதலின் அழகியல்

இரண்டாம் முறை,

இதுவே கடைசி இனித்
திரும்பேன் எனும்
முத்தாய்ப் போடு

இறுக்கி மூடினேன்
என்னையொரு சிற்பியென.

மீண்டும் மீண்டும்
கூவியழைத்து மீட்ட பின்
பிரித்தகற்றினார்

முத்துகளைப் போல
ஒட்டியிருந்த புழுக்களை,

சாதலும்,

ஏனைய கலைகளைப்
போலொன்றே அபூர்வ
அழகோடு

அதனை நான் நிகழ்த்துகிறேன்.



எவரதும் போலவே,

உங்களது மரணமும்,
இயல்பென்றாள் என் தாய்...

அம் மன நிலையை உள்
வாங்கும் வயதேறுதல்,

சடுதியில் எங்ஙனம் நிகழும்?

தற்கொலையின் அபகீர்த்தியைச்
சுமந்தலையும்
ஆவி நானே எனதே எனதான,

நீலநிற கூரிய கத்தியொன்று

என் தொண்டைக்குள்ளே

துருவேறிக் கொண்டிருக்கிறது.

● சில்வியா பிளாத்

சச்சின் டெண்டுல்கரின் வாழ்க்கை வரலாறு “சச்சின் ஏ பில்லியன் ட்ரீம்ஸ்“ என்ற பெயரில் படமாக வரவுள்ளது.

மேரி கொம், அசாருதீன், டோனி என விளையாட்டு வீரர்களின் வாழ்க்கை வரலாற்றை படமாக்கிய பொலிவூட்டே இதையும் படமாக்கியுள்ளது.

மே 26 ஆம் திகதி வெளியாகவுள்ள இந்தப் படத்தின் நாயகன் யார் தெரியுமா? நிஜ நாயகன்தான் ரீலிலும் நாயகனாக அசத்தியிருக்கிறார். இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்திருக்கிறார்.

இந்தியில் மட்டுமே முதலில் வெளியாகவுள்ள இந்தப் படம் தமிழிலும் பிற மொழிகளிலும் வெளியிடும் வேலைகள் விரைவில் தொடங்கவுள்ளன.




சங்கரின் இயக்கத்தில் சுப்பர் ஸ்டார் ரஜினிகாந், அக்ஷய்குமாரின் நடிப்பில் உருவாகிறது “2.0” படம்.

இதில் முக்கிய பாத்திரத்தில் எமி ஜாக்ஸன் நடிக்கிறார். அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் 2.0 இன் படப்பிடிப்புக்கள் விரைவில் முடிவடைந்து விடும் எனப் பதிவிட்டுள்ளார்.

2.0 படம் தீபாவளிக்கு வெளியாகும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





விஜயை ஏ.ஆர். முருகதாஸ் மீண்டும் இயக்கவுள்ளார். இந்தக் கூட்டணியில் வெளிவந்த கத்தி, துப்பாக்கி பெரும் வரவேற்பைப் பெற்றன. இந்நிலையிலேயே புதிய படத்துக்கான பேச்சு தொடங்கியுள்ளது. கத்தி படத்தை தயாரித்த லைக்கா நிறுவனமே புதிய படத்தையும் தயாரிக்கவுள்ளது.


சோனக்ஷி சின்ஹா நாயகியாக நடிக்கவுள்ள இந்தப் படத்திற்கு அனிருத் இசையமைக்கவுள்ளதாகவும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளியாகியுள்ளன.



தமிழ், தெலுங்கு படவுலகில் முன்னணி கதாநாயகியாக வலம் வரும் தமன்னா மலையாளப் படங்களில் நடிக்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

விருது விழா ஒன்றுக்கு அண்மையில் சென்ற அவர் அங்கு பேசும்போதே தனது விருப்பைக் கூறியுள்ளார்.

மலையாளப் படவுலகில் மம்முட்டி, துல்கர்சல்மான், நிவின் பாலி ஆகியோரையும் தனக்குப் பிடிக்கும் தமன்னா குறிப்பிட்டுள்ளார்.





நகல்’ படம் மூலமாக, தமிழ் திரையுலகில் நாயகியாக அறிமுகமாக உள்ளார் ‘டப்ஸ்மாஷ்’ மிருணாளினி.


இயக்குநர் சசி மற்றும் சுசீந்திரன் ஆகியோரிடம் இணை இயக்குநராக பணியாற்றியவர் சுரேஷ் எஸ். குமார். ஒரே ஒரு கதாபாத்திரத்தை மட்டுமே மையமாக கொண்டு உருவாக வுள்ள இப்படத்துக்கு ‘நகல்’ என்று பெயரிட்டுள்ளனர்.



ஜீவா சங்கர் இயக்கத்தில் விஜய் அன்ரனி நடித்துள்ள ‘எமன்’ திரைப்படம், வரும் 24 ஆம் திகதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

‘அமர காவியம்’ படத்தைத் தொடர்ந்து விஜய் அன்ரனி நாயகனாக நடித்த ‘எமன்’ படத்தை இயக்கினார் ஜீவா சங்கர். லைகா நிறுவனம் தயாரித்த இப்படத்தில் மியா ஜார்ஜ், தியாகராஜன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளார்கள்.

இந்தப் படத்துக்கு தணிக்கைக் குழுவின் சான்றிதழ் கிடைத்து விட்டதால் திட்டமிட்டபடி படம் வெளியாகும் எனத் தெரிகிறது.





விஜய் சந்தர் இயக்கத்தில் விக்ரம் நடித்து வரும் படத்தில் வில்லனாக ஆர்.கே.சுரேஷ் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

விக்ரமுடன் இவர் நடிக்கும் முதல் படம் இதுவாகும். நாயகியாக முதலில் ஒப்பந்தமான சாய்பல்லவி விலகியதால் தமன்னா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இன்னும் பெயரிடப்படாத இப்படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பை முடிந்ததும், ‘துருவ நட்சத்திரம்’ படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பில் கவனம் செலுத்தவுள்ளார் விக்ரம்.

அமிர்கான் நடிப்பில் வெளியான ‘தங்கல்’ திரைப்படம் உலகளவில் 715 கோடி இந்திய ரூபா வசூலை கடந்துள்ளது.


ஏற்கனவே அமிர்கானின் நடிப்பில் வெளியான ‘பி.கே’ ரூ.792 கோடி வசூல் செய்து முதல் இடத்தில் உள்ளது.

இந்நிலையில் இப்படம் ரூ.800 கோடி வசூலைக் கடக்கும் என்று இந்தி திரையுலக விமர்சகர்கள் கணித்துள்ளார்கள்.

நடிகை அ
நெருங்கிப் ப
என பகிரங்க
நடிகர் ஜெய்.

“எங்கேயு
படத்தில் இ
இருவருக்குள்
இருப்பதாக
பேசப்பட்டு
இருவரும் ம

ஒன்றாக
இருவரும் வி
செய்து கொ
எனத் தெரிவி
இந்நிலையி
தமது நெருக்
பகிரங்கமாக்







ராணா நடித்துள்ள 'காஸி' திரைப் படத்தின் தமிழ் பதிப்புக்கு சூர்யாவும் தெலுங்குப் பதிப்புக்கு சிரஞ்சீவியும் பின்னணிக் குரல் கொடுக்கவுள்ளனர்.

1971ஆம் ஆண்டு இந்திய - பாகிஸ்தான் போரில் பாகிஸ்தானின் பிஎன்எஸ் காஸி நீர்மூழ்கிக் கப்பல் மர்மமாக மூழ்கியதைப் பற்றிய கதையே இப்படம்.

இதில் கடற்படை அதிகாரியாக ராணா நடித்துள்ளார். அகதியாக டாப்ஸி நடித்துள்ளார்.




நடிகை அஞ்சலியுடன் நெருங்கிப் பழகுவது உண்மைதான் என பகிரங்கமாக ஏற்றுள்ளார் நடிகர் ஜெய்.


"எங்கேயும் எப்போதும்" படத்தில் இணைந்த இருவருக்குள்ளும் நெருக்கம் இருப்பதாக கோலிவூட்டில் பேசப்பட்டு வந்தது. இதை இருவரும் மறுக்கவில்லை.

ஒன்றாக ஊர் சுற்றும் இருவரும் விரைவில் திருமணம் செய்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையிலேயே ஜெய் தமது நெருக்கத்தை பகிரங்கமாக்கியுள்ளார்.





# கமெராக் கதைசொல்லி பிரோஸ்













சம்மாந்துறையைச் சேர்ந்த பிரோஸ் கிழக்கு மண்ணின் மண் வாசனையை மிகவும் தத்ரூபமாக அவரது கமெராவினுடாக ஒளிப்படங்களாக பதிவு செய்து வருகிறார். இவரது அண்மைக்கால புகைப்படங்கள் வெகுவாகவே மக்களைக் கவர்ந்துள்ளதுடன் மிகவும் கலைத்துவமிக்கதாக இம்மண்ணின் பெருமைகளை வெளிக்காட்டவும் செய்கின்றன.



புகைப்படக் கலையை தனக்குள் மட்டும் ஒளித்துவைக்காமல், இத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கும் பிரோஸ் பயிற்றுவித்தும் வருகின்றார் என்பதும், இவர் கடந்த வருடம் தேசிய விருதுபெற்ற கிழக்கு மாகாணத்தின் ஒரேயொரு புகைப்படக் கலைஞர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"அனைவருக்கும் ஒரு கனவு இலட்சியம் இருக்கும். அப்படியான எனது கனவும் உலகமும் புகைப்படம் தான். அதன் பிரதிபலிப்பே இவை.

"என்னைப் பொறுத்தவரை புகைப்படம் என்ற ஒன்று அழகுக்காக மட்டும் இருப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை அதையும் தாண்டி ஆத்மார்த்தமான உயிரோட்டமான ஏதோ ஒரு செய்தி அதற்குள் இருக்கிறது.. இருக்கவும் வேண்டும். அவ்வாறு இருப்பின் என்றும் எம் புகைப்படம் உயிரோடு இருக்கும்" என கண்களில் நம்பிக்கை மின்னக் கூறுகிறார் பிரோஸ்.

திறமையும், கனவும், கமெராவும் சுமந்தபடி வலம் வரும் இந்த இளைய கலைஞர் இன்னும் உயரங்களைத் தேடிப் பயணித்தபடியே இருக்கிறார். அவருக்கு புதுவிதியின் பாராட்டுக்கள்.

**- எஸ்.என்.எஸ்.றிஸ்லி சம்சாட்**



# சமையல் செய்யும் ரோபோக்கள்

மனித கண்டுபிடிப்புகளே மனிதனுக்கு எதிரிகளாகப் போகின்றன. ஏனென்று கேட்கிறீர்களா? மனிதனின் அறிவு நாளுக்கு நாள் எது எதையோவெல்லாம் கண்டுபிடிக்கிறது அல்லவா? அதில் ரோபோக்களும் உள்ளடக்கம்.

இப்பொழுதெல்லாம் மனித வேலைகள் பல ரோபோக்களுக்கு கொடுக்கப்பட்டு வருகின்றன . அவையும் விசுவாசமாக சொன்னதை எல்லாம் கச்சிதமாகச் செய்து விடுகின்றன. அமெரிக்க ‘மக்டொனால்ட்ஸ்’ நிறுவனத்தின் முன்னாள் பொறுப்பதிகாரியை ஒரு ஊடகம் பேட்டி கண்டபோது “ஒரு மணிக்கு ஆகக் குறைந்த ஊதியம் 15 டொலர் என்று வந்தால் நீங்கள் நம்ப முடியாத அளவு பலர் வேலை வாய்ப்புகளை இழப்பார்கள். இவர்களுக்கு பதிலாக குறைவான பணத்தில் ரோபோக்களை வாங்கி, அவர்களின் வேலையைச் செய்விக்கலாம் என்று கூறி இருக்கின்றார்.

அனுபவக் குறைவான ஒருவனுக்கு மணிக்கு 15 டொலர் கொடுப்பதை விட இதை நேர்த்தியாகவும் வேகமாகவும் செய்து முடிக்கும் ஒரு ரோபோவை 35,000 டொலருக்கு வாங்கி விடலாம் என்கிறார் இந்த அதிகாரி. ஒரு சீனப் பத்திரிகைச் செய்தியின்படி அப்பிள், சம்சுங் நிறுவனங்களுக்கு உதிரிப் பாகங்கள் விநியோகம் செய்யும் ஒரு நிறுவனம் தனது தொழிற்சாலையின் பணியாள்கள் தொகையை 110,000 இலிருந்து 50,000 இற்கு குறைத்து விட்டதாம் .

மனிதர்கள் வேலையை ரோபோக்கள் செய்ய ஆரம்பித்துவிட்டதுதான் காரணம் மேலும் 600 நிறுவனங்கள் இதே ஆட்குறைப்பை விரைவில் செய்யப் போகின்றனவாம். கோப்பி பரிமாறவும் , சதுரங்கம் விளையாடவும் ரோபோக்கள் வந்து சேர்கின்ற இந்த நாள்களைப் பார்க்கும்போது , சர்வலோகமும் ரோபோக்கள் மயமாக இருக்கும் காலம் தொலைவில் இல்லை என்றே நினைக்கத் தோன்றுகின்றது .


சமையல் செய்து தரவும் ரோபோக்கள் இனி அடுக்களைக்குள் வந்துவிடும் என்பதால் கட்டிய மனைவியை மாத்திரம் சாப்பாட்டுக்கு நம்பியிருக்க வேண்டிய நிர்ப்பந்தமும் இல்லை.

# பயணிகளுக்கு விலைவிரிக்கும் விமானங்கள்

சில சமயங்களில் பிடித்து வைத்த பிள்ளையார் போல எந்தப் பக்கமும் அசையமுடியாதபடி விமான இருக்கைகள் அமைந்து விடுகின்றன. மலிவுக் கட்டணத்தில் விமானங்களைத் தேடும்போது இப்படித்தான் கை கைகால்களை கட்டி வைத்தாற்போல பயணிக்க வேண்டி வந்துவிடுகின்றது. பெரிய விமான நிறுவனங்களில் இந்தப் பிரச்சினை இருப்பதில்லை.

பணத்தை தாராளமாகச் செலவிட்டு முதல் வகுப்பில் செல்லும் பயணிகளைப் போன்றவர்களுக்கு வசதிகளை மேலும் அதிகரித்து தங்களுடன் பயணிக்க விமான நிறுவனங்கள் புதிய யுத்தியைக் கையாளத் தொடக்கி உள்ளன. எட்டுப் பிரிவுகளில் தங்கள் எதிர்பார்ப்புகளுக்கு அமைய விமானக் கபின்களை அமைப்பவர்களுக்கு கிறிஸ்டல் காபின் விருது அளிக்க ஹம்பேர்க் ஏவியேஷன் என்ற ஜேர்மன் நிறுவனம் முன்வந்துள்ளது . விமான உற்பத்தி நிறுவனங்கள், விநியோகஸ்தர்கள், பொறியியல் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் என்று 21 நாடுகளில் இருந்து 85 பேர் இந்த விருதுக்காக போட்டியிடுகிறார்கள். கபின் பற்றிய வடிவமைப்பு, மின்னியல் அணைப்பு முறை, சுகாதாரம், பாதுகாப்பு, சுற்றுப்புறச்சூழல், பாவனையில் எடுக்கப்படும் பொருட்கள், பயணிகளின் சௌகர்யம் என்றெல்லாம் பல விடயங்கள் கவனிக்கப்பட்டே வெற்றியாளர் தேர்வு செய்யப்படுவார்.

இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே. என்கிறீர்களா? அட போங்கைய்யா சிறகொடிந்த பட்சி போல விமானங்கள் விழுந்து விபத்துக்கள் வருகின்றன. பேசாமல் வீட்டில் இருங்கள் என்கிறீர்களா? தெருவில் பாதையோரம் போனாலும் நம் மீது வாகனங்கள் முட்டி மோதுகின்றனவே. அதற்கு என்ன செய்யலாம்?



# பிறந்தது சேவல் வருடம்




ஜனவரி முதலாம் திகதி புது வருடம் பிறந்து விட்டதே . இனியென்ன புது வருடம் என்று கேட் கிறீர்களா? அது ஆங்கிலேயப் புது வருடம். வருடத்திற்கு வருடம் நாட்கள் முன்னே பின்னே மாறும் சீனப் புதுவருடம் இந்தத் தடவை ஜனவரி 29இல் பிறந்திருக்கின்றது . சீனர்களின் இந்தப் புதுவருடம் பெப்ரவரி 15 ,2018 வரை தொடர்கின்றது .சீனர்களில் மிகப் பெரிய கொண்டாட்டமான இந்தப் புதுவருடப் பிறப்பை வசந்த விழா என்றே இவர்களின் அழைக்கின்றார்கள். 12 மாதங்களும் 12 மிருகங்களுடன் பிறக்கும் இவர்கள் புதுவருடம் இந்தத் தடவை சேவலுடன் பிறக்கின்றது. இனி அடுத்த சேவல் வருடம் 2029இல்தான் பிறக்கும்.

சேவல் வருடத்தில் பிறப்பவர்கள் கடின உழைப்பாளிகள் . தம்மை ஏனையோரிடையே பிரபல்யமாக்கிக் கொள்ள நிறைய முயற்சி செய்பவர்கள், புத்திசாலிகள், மன உறுதி கொண்டவர்கள் என்று இவர்களைப் பற்றி நல்ல விடயங்கள் நிறையச் சொல்லப்படுகின்றன. அதே சமயம் தாம் அடைய நினைத்ததை அடையும் வரை வெறியோடு செயற்படுபவர்கள் என்றும் சொல்லப்படுகின்றது. ஆனால் இந்தத் தடவை இவர்களுக்கு இந்த வருடம் சோபிக்காதாம் என்றும் சொல்லப்படுகின்றது.

இந்த மிருக ராசியுடன் பிறந்த பிரபல்யங்கள் சிலர். பெஞ்சமின் பிராங்ளின், ரோஜெர் பிரெடேர், செரீனா வில்லியம்ஸ், நடிகர் ஜோன் கொல்லின்ஸ், இளவரசர் பிலிப்ஸ்.

இந்தப் புதுவருடப் பிறப்பின்போது செய்யக் கூடாத பலவற்றில் சில இதோ. புதுவருட நாளில் வீட்டைக் கூட்டவே கூடாதாம் . வீட்டின் செல்வம் அடிபட்டுப் போய்விடும் என்று சீனர்கள் நம்புகிறார்கள். தலை முடியைக் கழுவவே கூடாதாம். சீன மொழியில் தலை முடிக்கும் செல்வம் கொழிப்பது எப்படி என்பதற்கும் உபயோகிக்கும் சொற்கள் ஏறத்தாழ ஒரேமாதிரியானவையாம். முதலிரு நாட்கள் உடுப்புகளைக் கழுவக் கூடாதாம் . காரணம் முதலிரு நாட்கள் தண்ணீருக்கான கடவுளை இவர்கள் வழிபடுகின்றார்கள் .

நாட்டுக்கு நாடு எத்தனை நம்பிக்கை

புதினப் பூங்கா

ராஜேஸ்மணாளன்

# கொலையுதிர் காலம்


உலகில் கொலைகளுக்குப் பஞ்சமில்லாத நாடு எது என்று கேட்டால் உங்கள் பதில் என்னவாக இருக்கும் ? அது ஒரு லத்தீன் அமெரிக்க நாடு என்று மட்டும் சொல்லி விட்டு புதினத்தைத் தொடர்கிறேன் . இங்கே கொலை விழாத நாள் இருப்பதில்லையாம் .

இறுதியாக ஜனவரி 22, 2015 இல்தான் எவருமே கொல்லப்படவில்லை. இப்பொழுது மீண்டும் ஒரு பெரிய புதினமாக ஜனவரி நடுப்பகுதியில் ஒரு நாளில் ஒரு தலையும் உருளவில்லை. ‘மாறாஸ்’ என்ற பாதாளக் குழுவின் அட்டகாசங்களை அடக்குவதில் வெற்றி கண்டுள்ள பொலிஸார் சென்ற 2015. இல் 5278 கொலைகள் விழுந்தன. ஆனால் 2016இல் இது 20 வீத வீழ்ச்சியைக் கண்டுள்ளது என்கிறார்கள். 6 மில்லியன் சனத்தொகையைக் கொண்ட இந்த நாட்டில் சென்ற வருடம் நாளொன்றுக்கு 14 கொலைகள் சராசரியாக விழுந்துள்ளன. 2015இல் 100,000 பேருக்கு 104கொலைகள் என்று உலக நாடுகளில் உச்சத்தை இந்த நாடு தொட்டிருந்தது.

இந்த நாடுதான் எல் சல்வடோர். இதன் அயல் நாடான ஹொண்டூரஸ் 2011,12 ஆம் ஆண்டுகளில் கொலைகள் விடயத்தில் உலக சாம்பியனாகி இருந்தது.

ஒரு சின்ன ஒப்பீடு. ஒவ்வொரு 100,000 பேருக்கு 1கொலை பிரிட்டனில் இடம்பெறுகின்றது. அமெரிக்காவிலோ 5. இன்னொரு இலத்தீன் அமெரிக்க நாடான பிரேசிலில் 25.

எல்சல்வடோர் கொலைகளின் தாயகம் போலும்.






# மயக்கமும்... மர்மமும்...

நன்றி:
ஆனந்தவிகடன்




பகுதி - 10

















- தொடரும்...




# கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை


அதிபர் ந.கந்தவனச்செல்வன்

தொகுப்பு : அ.றொக்ஷன்

## வரலாறு

யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கில் யாழ். கல்வி வலய நல்லூர்க் கோட்டத்தில் கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை அமைந்துள்ளது.

இப்பாடசாலையை 1922 ஆம் ஆண்டு 10ஆம் மாதம் 22ஆம் திகதி த.குமாரசாமிப்பிள்ளை ஸ்தாபகம் செய்தார். பாடசாலை முதலில் 50 மாணவர்களுடனேயே ஆரம்பிக்கப்பட்டது.

இப்பாடசாலை 1929 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு முகாமைத்துவ சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

யாழ். கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை 1960ஆம் ஆண்டு அரசாங்கத்தால் ஏற்கப்பட்டது. பாடசாலையின் முதலாவது முதன்மை ஆசிரியராக எஸ்.வேலுப்பிள்ளை கடமையாற்றியிருந்தார். அவரைத்தொடர்ந்து மு.சின்னத்தம்பி ஐயர், ப.சரவணமுத்து, திருமதி.இராமாசிப்பிள்ளை, க.தம்பாப்பிள்ளை, என்.சேதுபதி, வி.சின்னத்துரை, எஸ்.சதாசிவம்பிள்ளை, மு.நல்லதம்பி, கே.பரராஜசிங்கம், த.தர்மலிங்கம், க.குணேசதாசன், பழனிவேற்பிள்ளை, த.கிருஷ்ணகுமார், க.பரமேஸ்வரன்,செ.இளங்கோ ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றியிருந்தனர். தற்பொழுது அதிபராக ந.கந்தவனச்செல்வன் பாடசாலையை நிர்வகித்து வருகின்றார். அவரின் கீழ் 200 மாணவர்களுக்கு 22 ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றனர்.

## சாதனைகள்

- உள்ளக விளையாட்டுக்கள் : யாழ். கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியா சாலையில் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளதோடு, பயிற்சிகளும் வழங்கப்பட்டு மாணவர்கள் தேசிய மட்டம்வரை சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.
- 2015ஆம் ஆண்டு நடைபெற்ற முதலமைச்சர் கிண்ண சதுரங்கப்போட்டியில், 12 வயதுப்பிரிவில் ஒரு மாணவி தெரிவு செய்யப்பட்டார்.
- 2016ஆம் ஆண்டு நடைபெற்ற முதலமைச்சர் கிண்ணம் சதுரங்கப் போட்டியில், கோட்ட வலய மட்டத்தில் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு மாகாண மட்டத்தில் பங்குபற்றியுள்ளனர்.
- 2015, 2016ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற 'பட்மின்ரன்' போட்டிகளில், ஆண்கள் அணியினர் தேசிய மட்டத்தில் பங்கு பற்றி சாதனை படைத்துள்ளனர்.
- 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற கோட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டியில் ஈட்டி எறிதலில் 800 மீற்றர் ஓட்டத்தில் இருவர் 3 ஆம் இடத்தினைப் பெற்றுக்கொண்டனர்.
- இதே ஆண்டில் நடைபெற்ற 19 வயது ஆண்கள் அணியினர் பூப்பந்தாட்டப் போட்டியில் வலய மட்டத்தில் 2ஆம் இடத்தினைப் பெற்றனர்.
- இதே ஆண்டில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் கோட்ட மட்டத்தில் ஒரு மாணவன் பேச்சுப் போட்டியில் பங்கு பற்றி 3ஆம் இடத்தினைப் பெற்றுக்கொண்டார்.
- நல்லூர் கோட்டத்தில் நடைபெற்ற டெங்கு ஒழிப்பில் சுகாதாரம் பேணப்பட்டமைக்கு, நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பிரிவில் 1ஆம் இடத்தையும், பணப்பரிசையும் பெற்றது.
- "அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" என்ற வேலைத்திட்டத்தின் கீழ், குளியலறையுடன் கூடிய மலசலகூடக் கட்டிடத் தொகுதி அமைக்கப்பட்டது.
- 2015ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் ஆனந்தன் காயத்திரி 8ஏ,சி சித்தியைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.
- 2016ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் எல்லா மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று 100 வீதம் சித்தியைப் பெற்றுள்ளார்கள்.
- 2016ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண உளவளத்துறையினர்நடத்திய புத்தாக்கப் போட்டியில் ம.யதுர்சன் எலிபிடிக்கும் பொறியைக் கண்டுபிடித்து தங்கப்பதக்கம் பெற்றார்.
- 2016ஆம் ஆண்டு இப்பாடசாலையில் மாணவர் நாடாளுமன்றம் ஆரம்பிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சவால்கள்

பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளில் அக்கறை காட்டுவது குறைவாகவுள்ளது.

குறிப்பிட்ட சில மாணவர்களின் பாடசாலை வரவானது மிகவும் குறைவாகவுள்ளது.

ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான விளையாட்டரங்கமும், செயற்பாட்டறையும் தேவையாகவுள்ளது.

இப்பாடசாலைக்கென விளையாட்டு மைதானம் இல்லை

பெற்றோர்கள், அருகிலுள்ள பிரபலமான பாடசாலைகளுக்கு பிள்ளைகளைச் சேர்ப்பதனால், முதலாம் தரம் மற்றும் 6ஆம் தரத்தில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவுள்ளது.

செயற்பாட்டறைகள், மேலதிக பாட வகுப்பறைகள் என்பன இல்லை.

கட்டடத்தொகுதிகள் மேல்மாடிகள் அமைக்கப்படல் வேண்டும்.

ஆசிரியர்கள் ஓய்வுஅறை, சிற்றுண்டிச்சாலை என்பன அமைக்கப்படல் வேண்டும்.


இணை பாடவிதான செயற்பாட்டு உபகரணங்கள் (விளையாட்டு உபகரணங்கள்) பாதுகாப்பாக வைப்பதற்கான இடவசதி தேவை.

கலைத்துறைசார் வாத்தியக்கருவிகளின் தேவையும் உள்ளது.


தரம் 5 இல் புலமைப்பரிசில் பரீட்சையில் அடைவுமட்டம் மிகவும் குறைவாகப் பெற்ற மாணவர்களே இப்பாடசாலையின் உள்ளீடுகளாக வருகின்றனர்.







யதார்த்தன்







# ஈழத்து மடப்பாண்டும் தெருமூடி மடமும்

நாம் வரலாற்றின் விளிம்பு நிலை குழுமத்தினராகவே உள்ளோம். வரலாற்றுத் தொடர்ச்சியை மீளக் கட்ட வேண்டிய தேவைகளை தொடர்ச்சியாக உணர்கிறோம். அதன் பொருட்டு மிச்ச மிருக்கும் மரபுக்ளையும், தொல்லியல் கையளிப்புக்களையும் அறியவும், ஆவணப்படுத்தவும், அடுத்த சந்ததிக்குக் கையளிக்கவும் வேண்டியுள்ளது. மிகக் குறைவாகக் கிடைக்கும் மரபார்ந்த தொல்லியல் பண்டங்களை வைத்துக் கொண்டு, அவற்றைத் தொடர்புபடுத்தி, அதனைச் சூழ அமைந்த வரலாற்றினை உருவாக்குதல் என்பது ஒரு புனைவைப் போல் முன் வைக்கக் கூடியதல்ல. அது எல்லா வகை வரலாற்று மூலாதாரங்களின் ஆதாரங்களின் கூட்டு மொத்தத்தின் ஊடாக ஒருங்கிணைந்தெழுப்பப்படுதலே சரியானது.

ஈழத் தமிழ்ச் சமூகத்தினைப் பொறுத்த வரையில், வடக்குப் பகுதி வரலாற்றின் மைய வாசிப்பிடங்களில் ஒன்றாக இருக் கின்றது. குறிப்பாக, அதன் கட்டடக்கலை மரபு பற்றிய எழுத்து முக்கியமானது. வாழும் அல்லது எச்சமாக இருக்கும் கட்டட ஆதாரங்கள் மிகக் குறைவாகவே எமக்குக் கிடைக்கின்றன. இதற்கு காலனி யம், போர் என்பவை அதற்கு பிரதான காரணங்களாக இருக்கின்றன. எனினும், கிடைக்கும் கட்டட மூலாதாரங்கள் முக்கியமனவையாகவும், செறிவான வரலாற்று எழுத்துக்கான மூல வாசிப்பு நிலைகளைக் கொண்டுள்ள அமைப்புக் களாகவும் உள்ளன.

ஒப்பீட்டளவில் வடக்கில் அதிகம் வாழும், அல்லது எஞ்சியிருக்கும் கட்டக் கலைவடிவங்களாக மடங்களைக் குறிக்க லாம். மடப்பண்பாடு பரவலாக வடக்கு நிலம் சார்ந்து அமையப் பெற்று, குறித்த காலத்தின் வரலாற்று வாசிப்பினையும், சமூக வாசிப்பினையும் நிகழ்த்த உதவு கின்றது. குறிப்பாக, வடமராட்சியின் பருத்தித்துறையில் காணப்படும் இலங்கையின் ஒரேயொரு தெருமூடி மடத்தினை மையமாகக் கொண்டு இக் கட்டுரையைத் தொடர நினைக்கிறேன்.

"ஈழத்தமிழ்ச் சமூகம் இந்திய - தமிழ் நாட்டு பண்பாட்டின் நீட்சியைப் பகிர்ந்து கொள்கிறது" என்ற வரலாற்றுக் கற்பிதம் பரவலாகக் காணப்படுகின்றது. ஆனால், அதனிடம் கேரள, கலிங்க, அரேபிய, பர்மிய, மற்றும் ஐரோப்பிய பண்பாட்டு பகிர்வுகள் இருப்பதை சமநிலையில் வைத்துப் பார்க்கும் தன்மை, நம்முடைய கடந்த கால வரலாற்று எழுத்துக்களில் உள்ளதா? என்றகேள்வி தொக்குநிற்கின்றது. சமுத்திரத்தினால் இடை வெட்டப்படும், "இந்து சமுத்திரத்தின் மத்தியில் இருக்கும் தீவு" என்ற வகையில் அதனிடம் தனித்து வமான குணங்குறிகளை ஒழுங்கு படுத்தத்தக்க மொழி, பண்பாட்டு, கலை, கைவினை வடிவங்கள் இருப்பதை மறுப்பதற்கில்லை. அது இந்திய உபகண்டத்திற்கு நெருக்கமாக இருப்பதால், அதன் பண்பாட்டினை உள்வாங்கிக் கொண்டாலும், அதை எவ்வாறு தன் நிலத்துக்குரிய வடிவமாக மாற்றிக் கொண்டது என்பது பற்றி ஆய்வுகள் தேவையாகவிருக்கின்றன.

மடப்பண்பாட்டினை எடுத்துக் கொண்டாலும், இதே நிலையே உள்ளது. அதாவது இந்திய உபகண்டத்தினதும், ஐரோப்பிய காலனித்துவத்தினதும், கட்டடப் பண்பாட்டை உள்வாங்கியிருந்தாலும், இலங்கையின் மடங்களுக்கு என்று தனிக் குணங்குறிகள் இருக்கவே செய்கின்றன. அதனை விளங்கிக்கொள்ள, இந்திய மற்றும் ஐரோப்பிய மடப்பண்பாடுகளைப் பற்றிச் சுருக்கமாக பார்த்து விடுவது அவசியமாயிருக்கும்.

வரலாற்றின் மிக நுண்ணியதும், தொடக் கமாயும் இருக்கவேண்டியது மொழி ஊடான வாசிப்பு என்ற வகையில் மடம் என்ற சொல்லின் மொழி நிலை வாசிப்பினைக் கவனிக்கலாம்.

தமிழில் மடம், பன்னசாலை, ஆச்சிரமம், சத்திரம், பள்ளி என்ற சொற்களையும், ஆங்கிலத்தில் monastery என்ற சொல்லையையும், சிங்களத்தில் "பிரிவெனா" என்ற சொல்லையும், இங்கே எடுத்துக் கொள்ளலாம். தமிழில் பன்னசாலை, ஆச்சிரமம் ஆகிய சொற்கள் மிக நெருக்கமானவை. காரணம் இலங்கைத் தமிழ்க்கிளை மொழிப்பேச்சு வழக்குகளில் பயன்படுத்தப்படாத இச்சொற்கள் இரண்டும் தமிழ் நாட்டில் வழக்கத்தில் உள்ளவை. சொல்லப்போனால், இச் சொற்கள் இரண்டும் ஒரே அர்த்தத்தினைப் பகிருபவை. "ஆச்சிரமம்" என்பது வட மொழியில் இருந்து, இந்து சமயத்தின் ஊடாகத் தமிழிற்கு வந்த திசைச்சொல். அதற்கான நேரடியான தமிழ் வடிவமாக பன்னசாலையைக் கொள்ளலாம். குறிப்பாக இச்சொற்கள் இரண்டும் இந்து சமயத்தின் சாதுக்கள், துறவிகள், முனிவர்கள் வசிக் கும், இடங்களைக் குறிப்பவை. இச்சொற் கள், இலக்கிய வழக்கு தவிர, ஈழத்தமிழில் பயன்படுத்தப்படுவதில்லை" என்பது இங்கு ஞாபகப்படுத்த வேண்டியதாகும்.

அடுத்து "சத்திரம்" என்றசொல். பொது வாக சத்திரம் என்பதற்கு ஆறுமுகநாவலர் போன்றோர் கொடுக்கும் விளக்கம் "ஞானிகள், துறவிகள், நோயாளர்கள், மாற்று திறனாளிகள், முதியவர்கள், பயணிகள் போன்றோர் தங்குமிடம்" என்பதே. குறிப்பாக இவ்வாறானவர் களுக்கு உணவு வழங்கும் இடமாக சத்திரங்கள் இருந்திருக்கின்றன. அதாவது சத்திரமானது அன்னதானம், விருந்தோம் பலுடன் நெருக்கமாக இருக்கும் கட்டட அமைப்பினைக்குறிக்கும் சொல் என்பதை மனத்திற் கொள்வோம்.

அடுத்து "பிரிவெனா" என்பதைப் பார்த்தால் சிங்களத்தைப் பொறுத்தவரை பௌத்த மதத்தின் வழியாக கிளர்ந்த சொல்லாக இது இருக்கின்றது.



பௌத்த துறவிகள் தங்கிக் கல்வி பயிலும் இடங்களை இவ்வாறு குறிப்பிட் டனர். இலங்கையைப் பொறுத்தவரை அரசியல், சமூக, சமயச்செல்வாக்கு கொண்ட இடங்களாக வரலாற்றுக் காலம் தொட்டே "பிரிவெனாக்கள்" இருந்தமைக் கான சான்றுகள் கிடைக்கின்றன. இவை, வட இந்திய, சீன, பர்மிய, யப்பான் தேசங் களில் உள்ள பௌத்த கல்விக் கூடங்களை ஒத்த தன்மைகளை கொண்டிருப்பவை.

"பள்ளிகள்" என்று சொல்லப்படும் மடம் போன்ற கட்டட அமைப்புக்களைப் பொறுத்த வரையில், பள்ளிகள் பெரும் பாலும் சமண, பௌத்த மதம் சார்ந்த துறவிகள் தங்குமிடமாகவும், குருகுலக் கல்வி முறை சார்ந்த கூடங்களாகவும் இருந்துள்ளன.

இச் சொற்களின் அமைப்பு அர்த்தங்க ளோடு ஏதோ ஒருவகையில் தொடர்புபடும் மடம் என்ற சொல்லைப் பொறுத்த வரை, இந்தியப் பண்பாட்டில் இருந்த மடங்கள் கொண்டிருந்த உருவ உள்ளடக்கங்களில் இருந்து, ஈழத்தின் பண்பாட்டுக்குள் தெளி வான வேறுபாடுகளுடன் இயங்குவதனைக் காணலாம். அதனை விளங்கிக் கொள்ள இந்திய மடப் பண்பாட்டின் அமைப்பு மற்றும் அதன் தொடர்ச்சியினைக் கவனிக்க வேண்டும்.

மடப் பண்பாட்டினை பொதுநிலையாக இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

**1. சமயம் சார்ந்தவை.**

**2. சமயச்சார்பற்ற சமூக நிலைப்பட்டவை.**

சமயம் சார்ந்த கட்டட அமைப்புக்க ளாக பன்னசாலை, ஆச்சிரமம் ஆகிய இரண்டும் இந்து சமயத்தின் படியான சன்யாசத்தினோடு தொடர்புபட்டவை, அதேவேளை இந்தியாவில் இருக்கும் சமயம் சார்ந்த மடங்களில் அனுட்டானங் கள், சமய ஆய்வுகள், விவாதங்கள் ஆகியன இடம் பெற்ற போதும், அவை சத்திரங் களாகவும் இருந்திருக்கின்றன. சீன யாத்திரீகனான பாகியன் முதலானவர்க ளின் குறிப்புக்களில் இருந்து மடப்பண் பாடு இந்து, சமண, பௌத்த நிலைகளால் அதிகம் நிறுவப்பட்டு இயங்கியமைக் கான சான்றுகள் கிடைக்கின்றன.

சமூகம் சார்ந்து சத்திரங்களோடு கூடிய விருந்தோம்பலின் பொருட்டும், வழிப் போக்கர்களும் நிராதரவானவர்களும் மாற்று வலுக்காரர்களும் தங்குமிடங்களா கவும் மடங்கள் இருந்துள்ளன. ஆயினும் இந்தியாவைப் பொறுத்தவரை மடம் என்பதிலும் சரி, சத்திரம் என்பதிலும் சரி, ஆச்சிரமம் என்பதிலும் சரி இந்து, பௌத்த, சமண மதங்களின் செல்வாக்குச் செறிவாக இருந்துள்ளது. இவை தவிர மடங்கள் அரசர்களின் நேரடியான கண்காணிப்புக் குள்ளும் செல்வாக்குடனும் இருந்துள்ள மைக்கான சான்றுகள் தமிழ்நாடு முதற் கொண்டு இந்தியா முழுவதும் கிடைக்கின்றன.

தமிழ்நாட்டில் சங்ககாலம், சங்கமருவிய காலங்களில் மடப்பண்பாட்டின் எழுச்சி ஆரம்ப கட்டத்திலேயே இருந்துள்ளது, சங்கமருவிய காலத்தில் எழுச்சிபெற்ற சமண, பௌத்த சமயங்கள் அக் கால மடப் பண்பாட்டின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியிருக்கின்றன.

பல்லவர் காலத்தில் ஏற்பட்ட இந்து, சமண, பௌத்த மதங்களின் போட்டி சமய இயக்கங்களைத் தோற்றுவித்தது.

(அடுத்தவாரமும்...)

புதுவிதி

(08 ஆம் பக்க தொடர்ச்சி...)



## நல்லூரை போல உருவாக்க முயற்சி

இந்தக் கோயில் புனரமைப்புக் குறித்து பல தகவல்களை சொன்னார் ஆலய நிறுவுநர் கணபதியார் தம்பையாவின் பீட்டப்பிள்ளையும், கிராம உத்தியோகத்தருமான செல்வி நவராஜினி சண்முகம். அவர் தெரிவித்த தகவல்கள் வருமாறு-

"2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி அன்று இக்கோயிலுக்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. அன்றிலிருந்தே பிரச்சினையும் தொடங்கி விட்டது. 1913 ஆம் ஆண்டு கட்டப்பட்ட நூறு வருடங்கள் பழமை வாய்ந்த இக் கோயிலை, "நல்லூர் கந்தன் போல் ஆடம்பரமாக உருவாக்கப்போகிறோம்" என்ற கணக்கில் இடித்துக்கட்டுகின்ற வேலையில் புதிய நிர்வாக சபையின் தலைவர் செயற்படத் தொடங்கியுள்ளார். இக்கோயிலுக்கென்று நீண்ட பெரிய வரலாறு உள்ளது. கோயிலைக் கட்டியவரே எனது பீட்டன்தான் என்பது அவருக்கும் தெரியும். நிர்வாக சபையினர் கோயிலைப் பராமரித்து வருவதனால் இப்போது இதை அவர் ஒரு "பொதுக் கோயில்" என்று சொல்லித் திரிகிறார்கள். இது எமக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது.

மூன்றாவது தடவையாக எனது பீட்டன் கணபதியார் தம்பையாவால் கட்டப் பட்டு நூறு வருடங்கள் பழமை வாய்ந்த இந்தக் கோயிலில், இத்தனை வருடங்களாக கிரியைகள் செய்யப்பட்டு வந்ததோடு, மந்திரங்களும் ஓதப்பட்டு வந்தன. இதனால் தெய்வீக அருள் இக் கோயில் முழுவதிலும் நிறைந்துள்ளது. இப்படிப்பட்ட தெய்வீக அம்சத்தோடு இருக்கிற கோயிலை இடித்துக் கட்டினால் இறைவன் இக் கோயிலில் குடிகொள்ளமாட்டான். வெறும் சீமெந்துக் கட்டடமாகத்தான் இருக்கும். இது சிங்களப் பெரும்பான்மை அரசுக்குச் சாதகமாகப் போய்விடும். ஏனெண்டா சிங்களவர்கள் தமிழ் மக்களை வந்தேறு குடிகள் என்று சொல்லிக் கொண்டிருக்கினம். இந்தக் கோயில் இடித்துக்கட்டப்பட்டவுடன் கோயிலின் வரலாறுடன் பண்பாடும் அழிஞ்சு போடும். அதுமட்டுமல்ல கோயிலின் அருகே அரச மரம் ஒன்றும் உள்ளது இது அவர்களின் கருத்துக்கு தீனியாகிவிடும்.

இக்கோயில் நூறு வருடங்கள் பழமை வாய்ந்த கோயில் என்றபடியால் இக் கோயில் மரபுரிமைச் சொத்தாகப் பேணிப்பாதுகாக்க வேண்டியது அவசியம். இதற்காகவே இக்கோயில் இடிப்பது சம்பந்தமான முறைப்பாடு ஒன்றினை, நான் 21.07.2016 அன்று யாழ்.பிராந்திய தொல்லியல் திணைக்களத்திற்கு கடிதம் மூலம் அனுப்பினேன். அதற்கு அவர்கள் "மேற்படி விடயம் தொடர்பாக அடைகலம் தோட்டம் கந்தசுவாமி கோயிலானது மிகவும் பழமை வாய்ந்த கோயிலாக காணப்படுகின்றது. இத்தகைய கோயிலை எதிர்காலத்தில் அழியவிடாது பாது காத்துப் பேண வேண்டியுள்ளது. இக்கோயிலினை எமது திணைக்களத்தால் பதிவு செய்யத் தீர்மானித்துள்ளோம். எனவே இக்கோயில் புனர்நிர்மாண வேலைகளை, அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பொழுது தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்று மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்" 29.07.2016 அன்று இவ்வாறு எனக்கு அனுப்பிய பிரதிக் கடிதத்தில் தெரிவித்திருந்தனர். ஆனால் இப்ப என்ன நடந்ததோ தெரியவில்லை. இக்கோயிலை இடித்துக் கட்டுவதற்கு அவர்கள் சம்மதித்துள்ளனர், இது எனக்கு மனதுக்கு கஷ்டமாக இருக்குது.

இக்கோயிலின் கொடிக்கம்பத்திற்கு பக்கத்திலுள்ள மண்டபத்திலுள்ள ஆறு பழமை வாய்ந்த தூண்களை இடித்திருக்கினம். மேற்கூரையின் தேக்கு மரத்திலான ஊசிக் கால் கழட்டியிருக்கினம். அதுமட்டுமல்ல கோயிலின் தெற்குப்பக்கத்தில் சுண்ணாம்பு கற்களினால் கட்டப்பட்ட ஒரு சேதமும் இல்லாத சுவர் முழுவதையும் இடித்தழித்திருக்கினம். களஞ்சிய அறை, மடப்பள்ளி, அலுவலக அறை என்பவற்றையும் இடித்தழிச்சுப் போட்டினம். இப்ப இக்கோயிலுக்கு அருகிலுள்ள சுமார் 500 வருடங்கள் பழமை வாய்ந்த கிணறு உள்ளது இதனையும் மூடுவதற்கு புதிய நிர்வாகத்தின் தலைவர் முடிவெடுத்திருக்கிறார். கிணற்றையும் அளவு எடுத்துக் கொண்டும் போயிருக்கிறார். இது சாமி விஷயம் இவையளை எங்கட கந்தசாமி பார்த்துக் கொள்ளுவான்.

## வீண்பழி போடுகிறார்கள்

கோயில் புனரமைப்புத் தொடர்பாக தம் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் பரிபாலனசபைத் தலைவர் வி.வேலுப்பிள்ளை தெரிவித்த விடயங்கள் இவை -

"இக்கோயிலின் சுண்ணாம்புக் கட்டடம் உழுத்துக் கொட்டத் தொடங்கிவிட்டது. இதனால் சுண்ணாம்புக் கட்டடங்கள் எல்லாவற்றையும் இடித்துக் கட்டுவதற்கு நாம் முடிவெடுத்தோம். இடிக்கப்பட்ட கட்டடத்தின் கூரையை உயர்த்த வேண்டும். ஏனெண்டால் சுவாமி காவிக் கொண்டு கோயில் உள்ளே செல்லமுடியாதுள்ளது. இதனால்தான் கூரை கழட்டப்பட்டது. கடந்த மூன்று மாதங்களாகத்தான் கோயில் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இந்த வேலைகளுக்காக நியமிக்கப்பட்ட சிற்பாச்சாரியாரும் தன்னால் முடியாது எண்டும், நேரம் இல்லை எண்டும் சொல்லிப் போட்டார். இதனால்தான் கோயிலின் வேலைகள் இடையிலே நிற்பாட்டியுள்ளோம். இப்ப வேலையாட்கள் பற்றாக்குறையாக உள்ளது.

இந்தக் கோயில் இடிச்சுக் கட்டுவது பற்றி தொல்லியல் திணைக்களத்திடம் முறைப்பாடு ஒன்று கொடுத்திருக்கினம். இதனால் தொல்லியல் திணைக்களத்து ஆட்கள் இக்கோயிலுக்கு வந்து பார்த்தனர். மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மாகாமண்டபம் ஆகிய கருங் கற்களினால் ஆன கட்டிடங்கள் என்பனவற்றை விட்டுட்டு மற்றவற்றை இடித்துக் கட்டலாம் என்று சொல்லியுள்ளனர். அதோட கோயிலில் மேற்கொண்டு செய்யப்படும் திருத்தங்களின்போது தொல்லியல் திணைக்களத்தைச் சேர்ந்த ஆள் ஒருவரும் இருப்பார் என்றும் தெரிவித்துமுள்ளனர். எனக்கும் புராதனவற்றை பாதுகாக்கும் எண்ணமுடையவன் ஒரு சில பேரின் தனிப்பட்ட எரிச்சல் காரணமாக என்மீது வீண்பழி போடுகின்றனர்.

இடிச்ச தூண்களைப்போன்றே அதே அளவில் போடவுள்ளோம் அதோட உயரமாவும் தூண்களைப் போடப் போறோம். இக்கோயிலின் வடக்குப் பக்கத்தில் இருக்கிற கிணற்றை மூடப் போவதாக என் மீது பழி போட்டிருக்கினம். அது உண்மையில்லை. நான் கிணத்த மூடமாட்டேன். வெளிநாட்டு, உள்நாட்டு நிதிகளை வைத்தே இக் கோயிலை இடிச்சுக் கட்டுகின்றோம். குறிப்பிட்ட நிதியை வைத்துக் கொண்டே வேலையை ஆரம்பிச்சம் பணம் முடிஞ்சுது இனி பணம் வரத்தான் விட்ட வேலையைத் தொடங்க வேண்டும்"

## சிந்திப்பார்களா?

தமிழ்த் தேசிய இனத்தின் கலை, கலாசார, பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றாக கோயில்கள் விளங்குகின்றன. அந்த வகையில் தமிழ் இனத்தின் இருப்பை தக்க வைக்கவேண்டியது காலத்தின் தேவை. இப்படியான தமிழரின் பண்பாட்டை பறைசாற்றும் இக் கோயிலை புனர்நிர்மாணம் செய்வது தொடர்பாக சற்று சிந்திக்க வேண்டியுள்ளது. மேலும் இக்கோயில் நூற்றாண்டை கடந்து பழமை வாய்ந்த கோயிலாக விளங்குகிறது. எனவே இக் கோயிலானது மரபுரிமைச் சொத்தாகும்.

மரபுரிமை என்பது நாடுகள், தேசங்கள், இனக்குழுக்கள், ஆகியவற்றின் அடையாளமாகவும், அதன் வரலாறு மற்றும் பண்பாட்டின் சின்னமாகவும், அவற்றுக்கான தடயங்களாகவும் பார்க்கப்படுகின்றது. அதுமட்டுமின்றி பொருளாதார அபிவிருத்திக்கான அடிப்படையாகவும் தொழிற்படுகிறது. இதனால் நாடுகள் தோறும் மரபுரிமையைப் பாதுகாக்கவும், பேணவும் சட்ட ரீதியான செயற்பாடுகள் உள்ளன. உலக வங்கியின் அறிக்கையொன்றில் "மூன்றாம் மண்டல நாடுகளில் அபிவிருத்தி என்ற பெயரால், மரபுரிமைகள் பெரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் தற்பொழுது மரபுரிமை சிதைவடைவு அல்லது அழிக்கப்படுதல் இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கு அதிகம் பொருத்தமாக உள்ளன. எனவே இக்கோயில் சார்ந்த புனர்நிர்மாணம் மரபுரிமையைச் சிதைக்குமா? என்பது பற்றி ஆலய பரிபாலனசபையும், தொல்லியல் திணைக்களமும் சிந்திக்க வேண்டியது அவசியம். ●


## தனியார் பஸ்ஸூம் தவிக்கும் பயணிகளும்...

வழமையாக தான் செல்லுகின்ற கிளினிக்கை நோக்கித் தனியார் பஸ் ஒன்றில் பயணித்த கர்ப்பிணியொருவர் வாந்தியெடுத்துள்ளார். அவரை வலுக்கட்டாயமாக பஸ்ஸைச் சுத்தம் செய்ய வைத்த சம்பவமொன்று 14.02.2017 அன்று நடந்திருக்கிறது. இதன் பின்னர் சம்பவம் பற்றி மேல் மாகாணப் போக்குவரத்து அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டு அவர்களின் வழிகாட்டலில் கொடதெனிய பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டை அடுத்து அச்சம்பவத்தின் பின்னணியிலிருந்த பஸ் நடத்துநரும், சாரதியும் குறித்த பெண்ணை அச்சுறுத்தியுள்ளார்கள். அச்சுறுத்திய குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்டு பின்னர் அந்தப் பெண்ணிடம் மன்னிப்புக் கோரியதையடுத்து அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்

இது தென்னிலங்கையில் நடைபெற்ற சம்பவமென்றதால் வெளியுலகிற்குத் தெரியவந்திருக்கிறது. வடக்கிலும் தினம் தினம் தனியார் பஸ்களில் எண்ணற்ற அடாவடித்தனங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எமக்குத் தெரிந்த வகையில் கடந்தவாரம் நாச்சிமார் கோயிலடி தொடக்கம் யாழ். வின்சர் சந்திவரை ஏறத்தாழ 6மாத கர்ப்பிணிப் பெண் ஒருவர் நின்று கொண்டு பயணிக்க வேண்டிய பரிதாப நிலையைக் கண்டேன். அவரை ஏற்றி கவனமாகக் கொண்டு சென்று சேர்ப்பது நடத்துநருக்குரிய கடமை. அவரும் அதைச் செய்யவில்லை. அந்த பஸ்ஸில் பயணித்த எவரும் அந்தப் பெண்ணுக்குரிய இடத்தை ஒதுக்கிக் கொடுக்காமலே பஸ் பயணித்தது.

சில மாதங்களுக்கு முன்னதாக கல்வியங்காட்டிலிருந்து அச்சுவேலியை நோக்கிப் பயணித்த பார்வையற்ற பயணி ஒருவர் அவரது பஸ்தரிப்பில் இறங்கிக் கொண்டிருந்தபோது விரைவாகத் தாம் செல்லவேண்டுமென்ற காரணத்தைக் காட்டி தள்ளிவிடப்பட்டபோது அவர் விழுந்து கைமுறிந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இது போன்ற சம்பவங்கள் நடைபெறும்போது உரியவர்கள் அது பற்றி தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறுவதே தொடர்ந்தும் இப்படியான சம்பவங்கள் நடை பெறுவதற்குரிய காரணம். எம்மவர்களில் சமூக அக்கறை குறைவதையும், நாம் அதிக சுயநலமிகளாக மாறிக் கொண்டு வருவதையுமே இது காட்டுகின்றது. எனவே எதிர்காலத்தில் விழித்திருப்போம். உங்களுக்கு நேரும் தீங்குபற்றி நீங்கள் உரிய அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யப்படும் பட்சத்தில் எதிர் காலத்தே மற்றவர்களுக்கு இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாது தடுக்க வாய்ப்பிருக்கிறது. ●





# தேசியகீதத் தற்கொலை

■ ஸபர் அஹமட்

"என்னய்யா இது தேசிய கீதம்? எப்ப பார்த்தாலும் நமோ நமோ மாதா என்று தொடங்கிகிட்டு.. நமோ நமோ இல் ந - குறில் எழுத்து, மோ - நெடில் எழுத்து திரும்ப ந - குறில் எழுத்து.. நமோவை வெட்டி களனி ஆற்றில் போடு.இது எவ்வளவு பெரிய அபசகுனம் தெரியுமா? இந்த நாடு உருப்படுமா? ஐக்கிய தேசியக் கட்சி என்ற சைத்தான் அனுமதி கொடுத்தால் அப்படியே பாடிவிடுவதா?" என்று பிக்குகள் வீரிட, சோதிடர்கள் ஆருடம் சொல்ல தினம் ஒரு காட்டுக் கத்தல். போராட்டம்.

"போராடுவோம் போராடுவோம். தேசிய கீதத்தை மாற்றப் போராடுவோம்.. தடை செய், தடை செய் நமோ நமோவை தடை செய்..."

அது 50 களின் நடுப்பகுதி.

தேசம் எங்கும் ஏற்கனவே பல்லாயிரம் பிரச்சினைகள்... ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறிய எஸ்.டபிள்யூ.ஆர்.டீ பண்டாரநாயக்க, சுதந்திரக் கட்சியை உருவாக்கி அடிமட்ட சிங்கள மக்களின் ஹீரோவாக மாறி இருந்தார்.. 1956 தேர்தலில் வென்ற பண்டாரநாயக்க பிரதமராகித் தனிச் சிங்கள சட்டத்தைக் கொண்டு வந்து தமிழுக்கு ஆப்பு வைத்தார். இனக் கலவரத்தில் நாடே கொளுந்துவிட்டு எரிந்தது.

இனப்பிரச்சினை மற்றும் 1959 களில் பண்டாரநாயக்க சுடப்பட, இழவு என்பவற்றுக்கு தேசிய கீதத்தின் நமோ நமோ ஆரம்ப என்ற அடிகள் தான் காரணம் என்று அற்புதமாய் விஞ்ஞான விளக்கம் கூறி, இனவாத அமைப்புகளும் இன்னும் பலரும் போர்க்கொடி தூக்கினர். 1960 இல் ஆட்சிக்கு வந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க "கடந்த ஆறு ஆண்டு களில் நாட்டில் ஏற்பட்ட அல்லோல கல்லோலங்களுக்கு யார் காரணம்" என்று ஆராய ஒரு குழுவை அமைத்தார்.. அந்தக் குழுவின் முடிவுதான் வடிவேல் படங்களை மிஞ்சும் நகைச்சுவை.. ஒரு வரிப் பதில் "நமோ நமோ மாதாவைத் தூக்கி குப்பையில் போடு.. ஸ்ரீலங்கா மாதாவை தூக்கி உள்ளே போடு..."

தான் செதுக்கிய பாடல் தனது கண் முன்னே கற்பழிக்கப்படுவதைப் பார்த்து சொல்லொணாத் துயர் அடைந் தார் ஆனந்த சமரக்கோன்.. தனது பாடலுக்கும் நாட்டில் நடந்த துர்ச் சம்பவங்களும் இடையில் முடிச்சுப் போட்ட அறியாமையை நினைத்து ஓவென்று அழுவதைத் தவிர வேறுவழி ஒன்றும் தெரியவில்லை. பாடலின் பதிப்புரிமையை அரசு ஏற்கனவே பெற்றுக் கொண்டு இருந்ததால் வழக் குத் தொடரவும் முடியவில்லை. கடைசியில் மிகுந்த விரக்திக்குள்ளான ஆனந்த சமரக்கோன் தனது நிலைமையை விளக்கி எதிர்க்கட்சி தலைவர் டட்லிக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டு 1962 இல் ஏகப்பட்ட தூக்க மாத்திரைகளை விழுங் கித் தற்கொலை செய்து கொண்டார்.

இன்று தேசிய கீதத்தைத் தமிழில் பாடுவதா? சிங்களத்தில் பாடுவதா? என்ற வாதப் பிரதிவாதங்கள் நடக்கின்றன.. ஆனால் இன்று பாடப்படும் தேசிய கீதத்தின் பிதாமகனுக்கே அரசு நீதியை நிலை நாட்டவில்லை. இந்த தற்கொலைச் சம்பவத்தை இன்றைய மேடைகளில் யாரும் பேசப்போவதும் இல்லை. சரித்திரத்தில் இருட்டடிப்பு செய்யப் பட்ட பக்கங்கள் என்று இருக்கின்றன. அதில் போய் உட்கார்ந்து கொண்டது இந்த தற்கொலை சம்பவமும்...

நிர்வாக சீர்கேடுகளையும், இனக் கலவரங்களையும் சீர்செய்யத் தெரியாத அரசு, தேசிய கீதத்தை சப்பைக் காரணமாய் சொல்லியது. தேசிய கீதம் இயற்றிய ஆனந்த சமரக்கோனே பலிக்கடா ஆகிப்போனார்..

இந்த வருடம் மற்றொரு சுதந்திர தினம் வந்து போயிருக்கிறது. வழக்கம் போலவே இதுவும் கடந்து போகும் என்ற மனநிலையிலேயே சிறுபான்மை சமூகங்களில் பலர் இருக்கின்றனர். யாருக்கும் எந்தவிதமான பிரக்ஞையும் இல்லை.உலமா சபை மட்டும் கொஞ்ச காலமாய் சுதந்திர தினம் வரும் போது "டேய் சமத்து பிள்ளைகளா! தேசிய கொடி ஏத்துங்கடா புண்ணியமாய்ப் போகும் என்கிறது..." இதெல்லாம் பயத்தால் வந்த அறைகூவல்கள் என்று எல்லோருக்கும் தெரியும். கட்சிகளும், தலைமைகளும் ஆயிரம் சொல்லட்டும். அது நமக்கு எதுக்கு? எல்லாவற்றையும் வேடிக்கை பார்ப்போம்.

பார்வை நயம் - 10



# நவரத்தினத்தின் மனைவி

கணபதி சர்வானந்தா

நவரத்தினத்துக்கும் எனக்குமான நட்பின் ஆரம்பம் ஒரு விபத்தாக நடந்த விடயம். ஒரு நாள் அதி காலை சந்தைக்குப் போகின்ற வழியில், ஒருவர் விதை உருளைக் கிழங்குப் பெட்டி நிறைய அடுக்கிய மரவள்ளிக் கிழங்குப் பொதி ஒன்றை, சைக்கிளின் பின் புறக்கரியரில் கட்டியபடி சந்தையை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். சந்தையை அண்மித்ததும் வயிரவர் கோயிலுக்கு முன்பாக மோட்டார் சைக்கிள் ஒன்று மோத, சைக்கிளும், மரவள்ளிக் கிழங்குப் பெட்டியும் விழுந்து கிழங்குகள் சிதறிப்போயின. அந்த மரவள்ளிக் கிழங்குப் பெட்டியை சரி செய்து சந்தைக்குக் கொண்டு செல்ல உதவினேன். அந்த மரவள்ளிக் கிழங்குச் சைக்கிள்காரர்தான் நவரத்தினம். அந்த உதவியோடு நட்பும் ஆரம்பித்தது. பின்பு சந்தையிலும், கடைத்தெருவிலும், கோயில் திருவிழாக்களிலும் காணும்போது கதைப்பதுவும், சிரிப்பதுவும் நட்பை முன் கொண்டு சென்றன.

நவரத்தினம் ஒரு தோட்டக்காரரின் மகன். தினமும் மாட்டடி கூட்டி எருவைக் கொண்டு சென்று தோட்டத்திற்குள் போட்டுவிட்டு, தோட்டத்தில் ஏதாவது விளை பொருளிருந்தால் அதைக் கொண்டு போய்ச்சந்தையில் விற்றபின், வீட்டிற்கும் சமான் சக்கட்டென வாங்கிக் கொடுத்துவிட்டு, ஊரிலிருந்து 4 மைல்களுக்கப்பாலுள்ள இந்துக் கல்லூரிக்கு சைக்கிளில் போக வேண்டும். அப்படிப் படித்து லிகிதரானவர்தான் நவரத்தினம்.

பின்பு சிலகாலம் நவரத்தினத்துடனான தொடர்பு குறையக் காரணம், தொழில் நிமித்தம் நான் அரபு தேசம் சென்றதும் பின்பு திரும்பி வந்து மீண்டும் மட்டக்களப்பு, நெல் சந்தைப்படுத்தும் திணைக்களத்தில் எனது பணியைத் தொடர்ந்ததும் தான். அத்துடன் அப்போது நடைபெற்று கொண்டிருந்த போரையும் இன்னுமொரு காரணமாகச் சொல்லலாம். இந்த இடைப்பட்ட காலத்தில் நவரத்தினத்திற்குத் திருமணம் நடந்தது என்றும், கச்சேரியில் பணியாற்றும் ஒருவரையே அவன் திருமணம் செய்து சந்தோஷமாக இருப்பதாகவும் கேள்விப்பட்டேன்.

நீண்ட காலப்போர் முற்றுப் பெற்ற பின்னர், மட்டக்களப்பில் பணியாற்றிக் கொண்டிருந்த நான் சொந்தங்களைப் பார்ப்பதற்காக, விசேட தினங்களில் மட்டும் விடுமுறை எடுத்துக்கொண்டு ஊருக்கு வந்து செல்வது வழக்கம். ஒரு வருடம், பொங்கலுக்காக வந்திருந்தேன்.. கடைத்தெருவில் நவரத்தினத்தைச் சந்தித்தேன். அவனும், பொங்கல் பானை மற்றும் பொங்கலுக்கான பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தான். "வருடா வருடம் என் மனைவியின் கைப்பாகம் பொங்கலன்று தான் அமோகமாயிருக்கும். அந்தன்றுதான் அவள் அனுபவித்துச் சமைப்பாள்" என்று தனது வீட்டுக் கதைகளைச் சொன்னபடி நகர்ந்து சென்றுவிட்டான்.

பின்பு ஒரு தினம், சித்திரை வருடப்பிறப்புக்கான விடுமுறையில் வந்திருந்தேன். சந்தையில் சாமான் வாங்கிக் கொண்டிருந்த சமயம் நவரத்தினமும் வந்திருந்தான். சற்று நேரம் நின்று, விடுபட்ட கதைகள் சிவற்றை என்னுடன் பேசினான். புது வருடத்திலன்று மனைவி பால் பொங்கல் பொங்குவதற்காக வாங்கியதென சிறிய பானை மற்றும் சாமான்களை காட்டினான். "அவள் கையால்தான் கைவிசேஷம் பெறுவதென்றும், அதுவே தனக்கு ராசி என்றும் சொன்னான். வீட்டில் மனைவி பார்த்துக் கொண்டிருப்பாள்" என்று சொல்லிப் புறப்பட்டு விட்டான். மீண்டும் ஒரு முறை தீபாவளிக்கு வந்திருந்தேன். யாழ்ப்பாணக் கடைத்தெருவில் சந்தித்தான். தீபாவளிக்கு புடவைகள் வாங்கிக் கொண்டிருந்தான். "மனைவிக்கு நாவல் நிறம் பிடிக்கும்" என்றான். "அவளது வெள்ளை நிறமேனிக்கு அந்தக் கலர் தான் பொருத்தம்" என்றும் சொன்னான். மலாயன் கபேயில் வடை தேநீரோடு விடை பெற்றுக் கொண்டோம்.

மீண்டும் ஊருக்கு வந்திருந்தேன். எனது ஊர் கோயிலில் நவராத்திரி பூசை என்னுடையது. சாமான் வாங்கச் சந்தைப் பக்கம் போனேன். திரும்பும் வழியில் நவரத்தினத்தை எதேச்சையாகச் சந்திக்க நேர்ந்தது. சைக்கிளின் முன்னுக்கும், பின்னுக்கும் என சாமான்கள் இருந்தன. "நவராத்திரி ஒன்பது நாளும், ஒன்பது வகையான சமையலும், ஒன்பது வகையான பலகாரங்களும் செய்து படைப்பது வழக்கம் என்றும், மனைவிக்குப் பிடித்த விடயங்களில் அதுவும் ஒன்று" என்றும் சொன்னான்" இனி தைமாதம் திருவெம்பா முடியும் வரை மிகவும் சந்தோஷமான காலம் நிறைய விரத காலங்கள் வருவதே அதற்குக் காரணம். மனைவிக்கு பிடித்த விடயங்களில் விரதம் முதன்மையானது, என்றும் சொன்னான். புறப்பட்டு விட்டான்.

நவரத்தினம் வீட்டிற்குச் சென்று பார்க்க வேண்டும் போல் தோன்றியது. இதுவரை ஒரு நாள் கூட அவன் என்னைத் தனது வீட்டுக்கு அழைத்ததில்லை. அதற்குரிய காரணத்தைப் பலவாறாக என் மனம் எண்ணியது. நவரத்தினத்தை நினைக்கும் போது சில சமயங்களில் பொறாமையாவும் இருக்கும். எவ்வளவு சந்தோஷமா இருக்கிறான். எல்லாவற்றிலும் விட நல்ல மனை, நல்ல மனைவி, நல்ல மக்கள். இவை தானே ஒருவனுக்கு முக்கியமானது. அதைத் தானே திருப்தியான வாழ்க்கை எள்கின்றனர் பெரியோர். அது நவரத்தினத்திடம் இருப்பதாக அவனது சந்தோஷம் எனக்கு உணர்த்தியது.

மீண்டும் நீண்ட இடைவெளிக்குப் பின் ஊருக்கு வந்தேன். நவரத்தினத்தைக் காணவில்லை. அவனது உறவு ஒன்றைக் கண்டேன். நவரத்தினத்தின் மனைவி இறந்ததாகச் சொன்னார். எனக்குத் "திக்" என்றது மனம். அவரிடம் விபரங்கள் எதனையும் பெற முடியாமல் தொண்டை காய்ந்துபோக, வார்த்தைகள் வர மறுத்து விட்டன. முன்பு ஒரு முறை அவன் சொன்ன குறிப்புப்படி வீட்டுக்குப் போனேன். வீட்டு ஹோலில் வைக்கப் பட்டிருந்த படத்தில்தான் நான் நவரத்தினத்தின் மனைவியை முதல் முறையாகப் பார்த்தேன். ஒவ்வொரு பண்டிகையின்போதும் அவன் வாங்கிய பொருட்கள் அத்தனையும் உபயோகிக்கப்படாது, அந்தப் படத்தின் முன்பதாக வரிசையாக அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. நவரத்தினம் பேசவில்லை. என்னை நிமிர்ந்து கூடப் பார்க்கவுமில்லை. புறப்படத் தயாரானேன். அங்கிருந்த ஒருவர் என்னை வழியனுப்ப வெளியே வந்தார்.

போர்க்காலத்தே கிபிர் விமானக்குண்டு வீச்சின் சத்தத்தில் நினைவிழந்த தனது மனைவியோடு நவரத்தினம் இருபது வருடங்கள் வாழ்ந்த செய்தியை அவர்தான் எனக்குச் சொன்னார். அவன் தனது மனைவியைக் குறைவில்லாது குழந்தைபோலப் பார்த்துக் கொண்டதையும், பராமரித்ததையும் அவர் சொன்னபோது. நவரத்தினம் இதுவரை அவன் தனது மனைவி பற்றிச் சொன்னதெல்லாம்......ஒன்றன் பின் ஒன்றாய்...கேள்விகளாய் எழ, நான் நடந்து தெரு முகப்பை எட்டியிருந்தேன்.

**எது எப்படி அமைகிறதோ! எப்படி வருகிறதோ! அதை அப்படியே ஏற்றுக்கொள். அதுவே சந்தோஷம். அதுவே மகிழ்சி. என்கிறது ஆன்மிகம்.**



# 01 உன்னையே நீயே அறிவாய்!

கொழும்பின் பிரமாண்டமான கடைகளை அண்ணாந்து பார்க்கும் நம் கிராமத்து இளைஞர்கள், நாமும் அவர்களைப் போல் ஆக முடியுமா? என பிரமிக்கிறார்கள்.

“பில்கேட்ஸ், மார்க் ஸுகர்பேர்க் (பேஸ்புக் நிறுவுநர்) போன்று ஆக முடியுமா” என கனவு காணுகிறார்கள். இந்த பிரமிப்பும், வியப்பும், கனவும் நிஜம் ஆகாது என்று எப்படிச் சொல்ல முடியும்..? எந்த விதைக்குள் எந்த விருட்சம் என்று எவர் கணிக்க முடியும்..?

சிந்தனைகளில் தரமும், உழைப்பில் உரமும் இருக்குமானால், யார் வேண்டுமானாலும் சிறந்த தொழிலதிபர் ஆகலாம், ஜெயிக்கலாம். இதற்கு முதலில், “என்னிடம் தொழிலதிபர் ஆகக்கூடிய முழுத் திறனும், தகுதியும் இருக்கிறது” என நம்பவேண்டும். அடுத்தது, வேலையில் ஜெயிக்க வைக்கும் அத்தனை வித்தைகளையும், சூட்சுமங்களையும் அறிந்து கொள்ள மனக் கண்களை எப்போதும் திறந்தே வைத்திருக்க வேண்டும்.


“படித்தப் படிப்புக்கான வேலை கிடைக்கவில்லை. உழைப்புக்கு ஏற்ற சம்பளம் இல்லை; திறமையும் அறிவும் வீணாகிக் கொண்டிருக்கிறது. வயதும் போய்க் கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு ஒன்றுமே செய்யவில்லையே” என இன்றைய இளைஞர்கள் நான்கு பேர் கூடினாலே இந்தப் பேச்சுக்கள்தான் அதிகமாக இருக்கும். இளைஞர்கள் தங்களின் எதிர்காலம் குறித்து பெரிதும் கவலைப்படுகின்றனர். இதற்கெல்லாம் ஒரே தீர்வு, “சொந்தமாகத் தொழில் தொடங்குவது” என்று அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். அது உண்மையும்கூட.

## ஏன் தொழில் தொடங்க வேண்டும்?

“ரிச் டொட்... புவர் டொட்” உள்ளிட்ட பல புகழ்பெற்ற புத்தகங்களை எழுதியவர் ரொபேர்ட் கியாஸ்கி. இவர் “இந்த 21 ஆம் நூற்றாண்டு தொழில் முனைவோர்களுக்கானது” என்று குறிப்பிட்டு, அதற்கு ஒரு புத்தகமே எழுதி இருக்கிறார். காரணம், இந்த நூற்றாண்டு மனிதர்களில் சொந்தமாகத் தொழில் செய்பவர்களைத் தவிர, “பிறர் மகிழ்ச்சியாகவும் பாதுகாப்பாகவும் உணர்வதில்லை” என்று ஆய்வுகள் சொல்கின்றன.

மிகவும் பரபரப்பாக மாறிவிட்ட இந்த வாழ்க்கை முறை நம்முடைய எதிர்காலத்தை ஒரு நிலையற்ற தன்மைக்குள் வைத்திருக்கிறது. நாம் பார்த்துக் கொண்டிருக்கும் வேலை நிரந்தரமில்லை. நாம் வாங்கும் சம்பளம் நிரந்தரமில்லை. எனவேதான், இன்றைய தலைமுறையினர் அனைவரும் சொந்தமாகத் தொழில் செய்ய வேண்டும் என்ற மன நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஒரு காலத்தில் அரச வேலைக்குப் போக வேண்டும் என்பதே எல்லோரது குறிக்கோளாகவும் இருந்தது. “கோழி மேய்ச்சாலும் கோர்ன மேந்தில மேய்க்க வேணும்” என்ற மனோ நிலை. ஆனால், இப்போது யாரைக் கேட்டாலும் “சொந்தத் தொழில் தொடங்க வேண்டும்” என்பதே பதிலாக இருக்கிறது.

சொந்தத் தொழில் தொடங்கினால், சுதந்திரமாகச் செயல்பட முடியும். நம்முடைய திறமைகளைப் பிறரிடம் நிரூபித்துக் காட்ட வேண்டிய தேவை இல்லை.



நாமே அவற்றை நடைமுறைப்படுத்தி முயற்சி செய்து பார்க்கலாம். எல்லையில்லா வளர்ச்சியைச் சாத்திய மாக்கிக் கொள்ள முடியும். நம் தேவைகள் பெருகிக் கொண்டிருக்கின்றன. நம்மை சுற்றி இருக்கும் உலகம் நம்மிடம் அதிகமாக எதிர்பார்க்கிறது. நம் தேவைகளையும், பிறரது எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்ற சொந்தத் தொழில் நமக்குப் பெரிதாகக் கைகொடுக்கும்.

அதுமட்டுமல்லாமல், மக்களின் தேவையும் நுகர்வுக் கலாசாரமும் வெகுவாக மாறியிருக்கிறது. இது தொழில் செய்வதற்கான பல்வேறு வாய்ப்புகளையும், இந்தப் பெரும்சந்தை உருவாக்கி இருக்கிறது. அந்த வாய்ப்புகள் தொழில்முனைவோரைத் தேடிக் கொண்டிருக்கின்றன. அவற்றை அடையாளம் காண்பவர்களே தொழில் முனைவோர்களாக ஆகும் பாக்கியம் பெற்றவர்கள்.

## எல்லோராலும் முடியுமா?

இன்றைய இளைஞர்களில் 35% பேர், படித்து முடித்ததும் ஏதோ ஒரு வேலைக்குப் போய் விடுகின்றனர். 35 சதவிகிதத்தினருக்கு “பேருக்கு படித்து முடித்தபிறகு” என்ன செய்வதென்றே தெரியவில்லை. இவர்கள் படிக்கும்போது “நாம் ஏன் படிக்கிறோம், என்ன படிக்கிறோம், எதிர் காலத்தில் என்ன செய்யப் போகிறோம்” என்பதைப் பற்றிப் பெரிதாக கவலைப்படுவதில்லை. இவர்கள் பின்னாள்களில் மிகவும் கஷ்டப்படுகின்றனர். 25 சதவிகிதத்தினர் குடும்பத் தொழில்களைப் பார்த்துக் கொள்கின்றனர். 5% பேர் மட்டுமே படித்து முடித்ததும், சொந்தமாகத் தொழில் செய்ய முடிவெடுக்கின்றனர்.

இதில் வேலை பார்க்கும் 35 சதவிகித இளைஞர்கள், தங்களின் 30 வயதைக் கடக்கும்போதுதான் அவர்களுக்குள்ளும் “நாம் ஏன் சொந்தமாகத் தொழில் தொடங்கக் கூடாது” என்ற எண்ணம் உண்டாகிறது. அவர்களிலும் சிலர் தான், தாங்கள் வேலை பார்த்த அனுபவத்தை வைத்தும், தங்களின் சுய ஆர்வத்தை வைத்தும் தொழில் தொடங்க முன்வருகிறார்கள். பலரும், செய்யும் வேலையை விட்டுவிட்டு, தொழில் தொடங்கினால் சம்பளமும் போய்விடுமே! “தொழிலில் நஷ்டம் வந்துவிட்டால் என்ன செய்வது” என்றெல்லாம் நினைத்து, அதே வேலையில் இருந்துவிடுகிறார்கள்.

சொந்தத் தொழில் தொடங்கப் பணம் அவசியமே. கொஞ்சம் முயற்சித்தால், அதை எளிதில் தயார் செய்துவிட முடியும். தொழில் செய்யப் போகும் நபர், தன்னைத் தயார் செய்து கொள்வதில்தான் முதலில் கவனம் செலுத்த வேண்டும். ஓர் இடத்தில் வேலை பார்ப்பதும், சொந்தத் தொழில் செய்வதும் முற்றிலும் வேறானது. அதேபோல், தொழில் தொடங்குவதற்குப் படிப்பு, வயது, மொழி எல்லாம்கூட பெரிய விஷயமே அல்ல. “தொழில் செய்து லாபம் சம்பாதிக்க வேண்டும்” என்கிற வெறி இருந்தால், தானாகவே அதற்கான அறிவை நம்மால் எளிதில் பெற்றுவிட முடியும். நாம் தயாரிக்கிற பொருளையோ அல்லது தரும் சேவையையோ, மக்கள் ஏற்றுக்கொள்வார்களா என்கிற சந்தேகம் நமக்கு வரவே கூடாது. மக்களுக்குத் தேவையான பொருளை அல்லது சேவையை அவர்கள் விரும்பும் விதத்தில் தந்தால், ஏற்றுக்கொள்ளாமல் போக வாய்ப்பே இல்லை!

(இன்னும்...)

# பழஞ்சோறு



பழஞ்சோறு அல்லது பழைய சோறு என்பது முதல் நாள் வடித்த சோற்றில் தண்ணீர் ஊற்றி மறுநாள் உண்ணும் உணவாகும்.

சோறு வீணாவதைத் தடுக்க இவ்வாறு செய்கின்றார்கள். நொதித்த உணவு வகைகளுள் ஒன்றான இது பொதுவாக, உழவர்கள், பாட்டாளிகள், அடித்தட்டு மக்களின் உணவாகவும் உள்ளது.

இதனால், சமூகத் தகுதியில் உயர்ந்தவர்களும், பணக்காரர்களும், நகரங்களில் வாழ்வோரும் பழஞ்சோற்றைத் தாழ்வாகப் பார்க்கும் நிலை உள்ளது. நொதிக்கவைத்தல், உணவுப் பொருட்களைத் தயாரிப்பதற்கும் அவற்றைக் கெட்டுப்போகாமல் பாதுகாப்பதற்குமான மிகப் பழைய முறைகளுள் ஒன்று.

பழஞ்சோறு பல கனிமப் பொருட்களை அதிக அளவில் கொண்ட காலை உணவாகப் பயன்படலாம் என்பதைப் பல ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

பழஞ்சோற்றில், சோடியம், பொட்டாசியம், கல்சியம், இரும்பு, மக்னீசியம் போன்ற தனிமங்களைக் கொண்ட கனிமப்பொருட்கள் அடங்கியுள்ளன.

அத்துடன், மனிதரின் தைராயிட் சுரப்பு நீரைக் கட்டுப்படுத்துவதன் மூலம், வளர்ச்சிக்கும், வளர்சிதை மாற்றத்துக்கும் உதவும் செலெனியம் என்னும் கனிமமும் சிறிய அளவில் பழஞ்சோற்றில் காணப்படுகின்றன எனக் கண்டறியப்பட்டுள்ளது.

நம்முடைய வாழ்க்கை முறையில் இருந்த ஆரோக்கியமான மரபு உணவுகளை இன்று தொலைத்துவிட்டுக் கோதுமை மாவினை மூன்று வேளையும் உண்டு நோய்களை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம்.

# தொதல்



தொதல் அல்லது தொடோல், (ஆங்கிலம்: dodol) என்பது இலங்கையில் தமிழர், முஸ்லிம் மக்களின் சமையலில் இடம் பெறும் ஒரு இனிப்புவகை உணவு ஆகும்.

இது இலங்கையின் தென் மாகாணத்தில் தோன்றிய ஒரு இனிப்பு வகை. மலாயர் வழியாக இலங்கைக்கு வந்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

இப் பண்டம் யாழ்ப்பாணத்தில் தோன்றியதாகவும் கூறப்படுகிறது. பச்சரிசி, தேங்காய், சீனி, பயறு, முந்திரி, ஏலக்காய் உள்ளிட்ட பொருட்களைப் பயன்படுத்தி இதனைச் செய்வர்.

யாழ்ப்பாணத்தில் இப்பலகாரம் சர்க்கரைக்களி என்றும் அழைக்கப்படுகிறது. சிங்களவர்கள் இதனைக் களுதொதல் என்பார்கள். அவர்கள் கித்துள் கட்டியையே தொதலுக்குப் பயன்படுத்துவார்கள்.

# பனையோலைப் பாய்



நாளாந்தம் மனிதன் தனது செயற்பாடுகளுக்கு பின்னர் உறக்கத்திற்கு செல்கிறான். இதற்காக பாய் பாவிக்கப்படுகிறது.

இப்போதெல்லாம் பெரும்பாலும் கட்டில் படுக்கைக்குப் பாவிக்கப்பட்டாலும், பாயில் படுத்து உறங்குவது தனியான ஒரு சுகமாக இருக்கும். இதற்காக தற்போது பிளாஸ்ரிக் பாய் பயன்படுகிறது. இது வெப்பமான காலநிலையுள்ள நாடுகளுக்கு பொருத்தமற்றதாகும். இதைப்போல புற்பாய் பாவிக்கப்படுகிறது. இதற்கு சில காலங்களிற்கு முன்னர் பனையோலை பாய் பாவிக்கப்பட்டது. பனஞ்சார்வு வார்ந்து எடுக்கப்பட்டு இது பின்னப்படுகிறது. இந்த பாய் போல சின்னதாக பின்னப்பட்டு குழந்தைகளை படுக்க வைப்பார்கள். இதை தடுக்கை என அழைப்பர்.

# குத்துவிளக்கு

குத்துவிளக்கு தமிழர் மரபு சார்ந்த விளக்குகளுள் தலையாயதாகும். மங்களகரமான அடையாளங்களுள் ஒன்றாக இந்துக்களால் கருதப்படும் இந்த வகை விளக்குகள், சமய சார்பான சடங்குகளிலும், மற்றும் பொது விழாக்களிலும் இடம் பெறுகின்றன.

வட்ட வடிவமான அடியில் நிலைக்குத்தாகப் பொருத்தப்பட்டிருக்கும் அலங்காரங்களைக் கொண்ட தண்டு, குத்து விளக்கின் தலைப் பகுதியைத் தாங்கியுள்ளவாறு அமைந்ததே குத்து விளக்கின் அமைப்பாகும். தலைப் பகுதியும் வட்ட வடிவமானதே. இவ் வட்ட வடிவத்தின் மையப் பகுதியில் கலசம் போன்ற உச்சிப் பகுதி பொருத்தப்பட்டிருக்கும்.

இக் கலச வடிவம் வட்டத் தலைப் பகுதியுடன் பொருந்தும் இடத்தைச் சுற்றிய பகுதி குழிவாக அமைக்கப்பட்டிருக்கும். இதுவே இவ் விளக்கின் எண்ணெய் தாங்கியாகும். இதன் வட்ட வட்ட வடிவான விளிம்பிலிருந்து சமமான இடை வெளிகளில் அமைக்கப்பட்ட ஐந்து நீட்சியான அமைப்புக்கள் இருக்கும். இவையே விளக்கின் சுவாலையை ஏற்றுவதற்கான திரிகளைக் கொண்டிருக்கும் இடமாகும்.

முன்னர் குறிப்பிடப்பட்ட கலசம் போன்ற உச்சியமைப்பில் சில சமயங்களில் பல வகையான அலங்கார வடிவங்களும், உருவங்களும் பொருத்தப்படுவதுண்டு. பொதுவாகப் பெரிய அளவிலான விளக்குகளில், அன்னப் பட்சி, மயில் போன்ற உருவங்களும், சில விளக்குகளில், தெய்வ உருவங்களும் பொருத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.



# ஒரு தீர்ப்பு:

# விலகிய சனியும் பரவிய வெளிச்சமும்



வா.மணிகண்டன்

கடந்த முப்பதாண்டு காலம் தமிழக அரசியலைக் குதறிச் சின்னா பின்னமாக்கி சாக்கடையாக மாற்றிக் கொண்டிருந்த சசிகலாவின் அரசியல் கனவுக்கு மிகப்பெரிய முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. ஜெயலலிதாவை புனித முகமாக்கி அதன் பின்னால் இருந்தபடியே ரவுடியிசம், சொத்துப் பறிப்பு, ஊழல் என்று கயமைத்தனங்களால் தமிழகத்தைச் சீரழித்துக் கொண்டிருந்த சசிகலாவுக்கு எதிராகத் தீர்ப்பு எழுதப்பட்டிருக்கிறது. தொண்ணூறுகளுக்குப் பிறகாக தமிழகம் முழுவதும் விரவிக் கிடந்த பயம், நடுக்கம், கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான ஆட்டங்களுக்கு ஒரு விடிவுகாலம் பிறந்திருப்பதாகத்தான் உணரமுடிகிறது.

அரசியல் நாகரிகம் என்பதே கிஞ்சித்தும் இல்லாத ஒரு சூழலில் கருணாநிதி ஓய்ந்து, ஜெயலலிதா மறைந்து மிகப் பெரிய வெற்றிடம் உருவான போது ஆசுவாசமாக இருந்தது. இனி நாகரிக அரசியலையும் சக மனிதர்களை மதிக்கும் போக்கும் தமிழக அரசியலிலும் உருவாகக் கூடும் என்ற நம்பத் தொடங்கிய தருணத்தில் சசிகலாதான் அ.தி.மு.க வின் பொதுச் செயலாளர், சட்டமன்ற ஆளுங்கட்சித் தலைவர் என்று அடுத்தடுத்த குண்டுகளை வீசினார்கள். "சிரித்துக் கொண்டார்கள். அதனால் சந்தேகம் வலுத்தது" என்று கேவலமாகப் பேசிய போது எரிச்சல் வந்தது. நேற்றைய தினம் வரைக்கும் நாலாந்தர அரசியல்வாதியைப் போல பேசிக் கொண்டிருந்த சசிகலாவின் பேச்சும், உடல்மொழியும் மீண்டுமொரு இருண்ட காலத்திற்கு தமிழகத்தை இழுத்துச் செல்கிறதோ என்ற பயத்தை உருவாக்காமல் இல்லை.

**உச்ச நீதிமன்றத்தால் எழுதப்பட்டிருக்கும் சசிகலாவுக்கு எதிரான இந்தத் தீர்ப்பைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது தமிழகம்.**

எழுபத்தைந்து நாட்களாக ஜெயலலிதாவை உள்ளே வைத்துக் கொண்டு எவ்வளவு பெரிய மனிதனையும் கிட்டவே அண்டவிடாமல் தனது சர்வாதி காரத்தின் கோர முகத்தைக் காட்டியது. சசிகலாவின் ஆட்டத்தின் ஒரு சிறுதுளிதான். அசிட் அடிப்பதும், மிரட்டுவதும், உதைப்பதும், சொத்துக்களை பறிப்பதும், ஊடகங்களை அதட்டுவதும் என எல்லாவிதத்திலும் திகிலூட்டிக் கொண்டிருந்த வன்முறையாளர்களுக்கு இது ஒரு சம்மட்டி அடி. கணக்காய்வாளரை செருப்பால் அடித்தும், ஐ.ஏ.எஸ் அதிகாரி மீது அசிட் அடித்தும், மருத்துவரை சிறையில் அடைத்தும், எம்.எல்.ஏக்களையும் அமைச்சர்களையும் காலில் விழச் செய்தும், அதிகாரிகளைக் குறுகச் செய்தும் அருவருப்பான அரசியலை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

எதிர்ப்பவர்களை எல்லாம் இல்லாமல் போகச் செய்கிற வல்லமை அவர்களிடமிருந்தது. வாயை அடக்குகிற முரட்டுத்தனம் இருந்தது. தமிழகத்தில் யாரையும் வழிக்குக் கொண்டு வருகிற வலையமைப்பை வைத்திருந்தார்கள். அதுதான் பயத்தைக் கொடுத்தது. யார் குரல் கொடுத்தாலும் கருணையே இல்லாமல் அவர்களின் குரல்வளையை நெரித்தார்கள். ஊடகங்கள் மௌனமாகின. நமக்கு எதுக்கு வம்பு என்ற மொன்னைச் சமூகத்தை வெற்றிகரமாக உருவாக்கி வைத்திருந்தார்கள்.

தமிழகம் முழுவதுமே சசிகலா எதிர்ப்புணர்வு புகைந்து கொண்டிருந்தது. இன்றைக்கு யாரை அலைபேசியில் அழைத்துப் பேசினாலும் உற்சாகம் கரைபுரளத்தான் பேசுகிறார்கள். இவ்வளவு வன்மத்தைச் சம்பாதித்து வைத்திருந்த ஒரு பெண்மணி அடுத்த முதல்வராகிவிட வேண்டுமென வெறியெடுத்துத் திரிந்தது அருவருப்பை உண்டாக்கியிருந்தது. "நீ யார் எங்களை ஆள்வதற்கு?" என்பதை எப்படி கேட்பது எனத் தெரியாமல் தமக்குள் புகைந்து கொண்டிருந்தார்கள்.

## விடியல் பிறந்திருக்கிறது.

இப்பொழுதும் கூட நீதியை விலை கொடுத்து வாங்குவதற்கும் மத்திய அரசை வளைப்பதற்கும் எல்லாவிதமான முயற்சிகளையும் சமீபகாலத்தில் சசிகலா தரப்பு செய்திருக்கும். சசிகலா முதல்வராவதற்கு அவசரப்பட்டதும் கூட இந்தத் தீர்ப்பை மனதில் வைத்துத்தான். தமக்கு எதிராக எழுதப்பட்டுவிட்டால் உடனடியாக திவாகரனுக்கோ, நடராசனுக்கோ அல்லது வேறொரு போனாம்போக்கிக்கோ முதல்வர் பதவியைக் கொடுத்துவிடலாம் என்று துள்ளினார்கள். ஓ.பி.எஸ்ஸை விட்டுவைத்தால் அவரிடமிருந்து பொறுப்பை கைமாற்றுவது கடினம் என்று பயப்பட்டார்கள். ஒருவேளை சசிகலா முதல்வராகியிருந்தால் அடுத்த முப்பது வருடங்களுக்கு மாஃபியாவின் கரங்களிலிருந்து தமிழகம் விடுபட்டிருக்கவே முடியாது. நம்முடைய தலைமுறை முழுக்கவும் வெறுப்பரசியல் தொடர்ந்திருக்கும்.

தடுத்து நிறுத்திய ஆளுநருக்குத்தான் மனப்பூர்வமான நன்றியைச் சொல்ல வேண்டும்.

ஓ.பி.எஸ் ஒன்றும் உத்தமர் இல்லைதான். பத்தாண்டு காலம் இவர்களுக்குத்தான் கட்டுப்பட்டுக் கிடந்தார். அப்பொழுதெல்லாம் வாயே திறக்காதவர் தன்னை ராஜினாமா செய்யச் சொன்னவுடன் பேசத் தொடங்கினார். "நீ சி.எம்; நான் பொ.செ" என்று சொல்லியிருந்தால் ஒருவேளை அவர் அமைதியாகவே இருந்திருக்கக் கூடும். ஓ.பி.எஸ் நல்லவரோ கெட்டவரோ ஆனால் மன்னார்குடி குழுமத்தளவுக்கு மோசமானவராக இருந்துவிட முடியாது என்ற நினைப்பிலேயேதான் தமிழகம் அவர் பின்னால் திரண்டது. அவரை ஆதரிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற முட்டுச்சந்தில் நம்மைக் கொண்டு போய் நிறுத்தியிருந்தது தமிழக அரசியல் சூழல்.

மிகப்பெரிய ஆபத்து நீங்கியிருக்கிறது. நமக்கு அவகாசம் கிடைத்திருக்கிறது. இனி நாம் பொறுமையாக முடிவு செய்யலாம்- உருவாகியிருக்கும் வெற்றிடத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வோம். யார் நமக்குச் சரியானவர், எந்தக் கட்சி வர வேண்டும்? யார் எல்லாம் ஒழிக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யும் அதிகாரமும் வாய்ப்பும் மக்களிடம் வந்து சேர்ந்திருக்கிறது.

இனிமேலாவது புனிதப்படுத்து தலை அடித்து நொருக்க வேண்டும். அதிகாரத்திற்கும் ஆட்சிக்குமாக நாக்கைத் தொங்கப் போட்டுத் திரியும் யாருமே புனிதர்கள் இல்லை. வெறியெடுத்த வேட்டை நாய்கள். அதை மட்டும் மனதில் நிறுத்திக் கொள்வோம்.

மற்றபடி, இந்தத் தீர்ப்பின் காரணமாக தமிழகத்தின் அரசியல் எதிர்காலத்தில் வெளிச்சம் விழுந்திருக்கிறது என்பதை மட்டும் உறுதியாகச் சொல்ல முடியும். ஆகவே இந்தத் தீர்ப்பைக் கொண்டாடுவோம்!



## சுணை கெடுதல்

அழுது கண்ணீர் வடிக்கத்
தொடங்கினேன்...

அலறி அழும்
கேப்பாப்பிலவும்...

யாரும் அணுகா கண்ணீரும்...

பசிக்கும் வயிற்றுழைவும்
பால்வற்றிப் போன
அம்மாக்களின் மார்பும்...

கொட்டகை தேடி வந்த
பள்ளிக் கூடமும் திரை விலகிப்
போன பண்பாட்டு மறைப்பும்...

ஆமிக்குப் பயந்து பயந்து
சுணை கெட்டுப்போன மனமும்

இப்படி என்னினத்தின் துயரை

அடுக்க என் மனம் கூட, அழ
மனமில்லாமல் சுணை கெட்டு
விடுகிறது...

தராக்கி தாசன்



## எனது சொற்கள்

எனது சொற்கள்
மண்ணின் சொற்களாய் இருந்த நாளில்
நான் கோதுமைத்தாள்களின்
நண்பனாய் இருந்தேன்.

எனது சொற்கள்
சினத்தின் சொற்களாய் இருந்த நாளில்
நான் சங்கிலிகளின் நண்பனாய்
இருந்தேன்.

எனது சொற்கள்
கிளர்ச்சியின் சொற்களாய் இருந்த
நாளில்
நான் பூமி அதிர்ச்சியின் நண்பனாய்
இருந்தேன்.

எனது சொற்கள்
தேனாய் மாறியபோதோ
ஈக்கள்
என் இதழ்களை மூடின.

மஹ்மூத் தர்வீஷ்
பலஸ்தீனக் கவிதைகள்

சிறு கதை



# கடவுளுக்கும் தெரியாத கதைகள்

பல்கலைக்கழக முதலாமாண்டு முதல் செமஸ்டரில் பாணந்துறைக்கு எங்களை களப்பயணம் கூட்டிக் கொண்டு போனார்கள். பின்னேரம் நான்கு மணியளவில், களப் பயணம் முடிந்த கையோடு, பாணந்துறை கடற்கரைக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். கொஞ்ச நேரம் கால் நனைய உட்கார்ந்திருந்துவிட்டுக் கடற்கரை மணல் முடியும் இடத்தில் ஒட்டினாற்போல் தொடங்கும் தார்ச்சாலையில் விற்றுக் கொண்டிருந்த அவித்த சோளம் வாங்குவதற்காக கிளம்பிப்போனேன். என்னுடன் இரண்டு நண்பிகளும் வந்தார்கள். மூவருமே தமிழர்கள். உள்நாட்டு வெறுங் கதையெல்லாம் கதைத்துச் சோளம் வாங்கிக் கொண்டு திரும்பி நடக்க தொடங்கையில், நான்கைந்துபேர் கொண்ட இளைஞர் குழு எங்களை மறித்தது. "தெமழத? தெமழத?" என்பது மட்டும் தான் விளங்கித் தொலைக்கிறது. பெண்கள் இருவரையும் விட்டுவிட்டு என்னைத்தான் ரவுண்டு கட்டினார்கள். 2009! சண்டை முடிந்து இரண்டு மூன்று மாதங்கள் மட்டுமே ஆகியிருந்த நிலையில், சில நாட்களுக்கு முன்னர் தான், மருதானை ரயில் நிலையத்தில் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணையில் ஒரு நாள் முழுக்க இருந்துவிட்டு திரும்பியிருந்தேன். ஆங்காங்கே தமிழர் என்ற ஒரே காரணத்துக்காகச் கைதுகள் சரமாரியாக நடந்து கொண்டிருந்த நேரம்.

அந்த இளைஞர் குழு என்னைச் சூழ்ந்து கொள்ள, கிலி பற்றிக்கொண்டது என்றாலும், கால்சராயின் பையில் இருந்த பல்கலைக்கழக ரெக்கார்ட் புக் தைரியம் சொல்லியது. "நான் சாசுவதமாக இருக்கிறேன்" என்று காட்டிக்கொள்ளவும், கலவரப்படவில்லை என்று காண்பிக்கவும் அவித்த சோளத்தை ஒரு வாய் கடித்துக் கொண்டேன். ஆனால் மெல்ல முடியாத படிக்கு பயத்தால் எச்சில் உறைந்த வாய் எதிர்வினையாற்றிக் கொண்டிருந்தது.

இத்தனையும் நடந்துமுடிந்த இந்த சில செக்கன்களுக்குள், கூடப்படிக்கும் சிங்கள நண்பர்கள் ஓடி ஸ்தலத்துக்கு வந்து விட்டார்கள். முன்னால் புகுந்து நின்றவன் மதுரங்க. இரண்டு கைகளையும் பக்கவாட்டில் விரித்து என்னை மறைத்துக் கொண்டு, சிங்களத்தில் அவர்களிடத்தில் காரசாரமாய் ஏதோ பேசினான். அவர்களும் பதிலுக்கு ஏதோ - ஆனால் பவ்வியமாக - பேசிக் கொண்டே, அந்த கூட்டத்தில் கொஞ்சம் பாவம் என்று சொல்லக் கூடியது போன்ற முகத்தை உடைய அல்லது அப்போது அப்படி இருந்த ஒருவனின் சட்டைப் பையில் இருந்து காகிதம் ஒன்றை வெளியே எடுத்தான். விரித்த கைகளை இறக்கிய மதுரங்க, சிரித்துக் கொண்டே என்னிடம் "கடிதம் ஒன்று இருக்கிறது தமிழில், அதை உன்னால் வாசித்து மொழிபெயர்க்க முடியுமா?" என்றான். எனக்கு அப்போது சிங்களம் வராது. சில தூசணங்களைத் தவிர. அதைப்புரிந்து கொண்ட அவனே, "நீ ஆங்கிலத்தில் என்னிடம் சொல். நான் சிங்களத்தில் அவர்களிடம் சொல்கிறேன்" என்றான். நானும் மண்டையை ஆட்ட கடிதம் என் கைக்கு வந்தது. இரண்டு சிறிய அப்பியாச கொப்பியின் தாள்களில் எழுதியிருந்த கடிதம் முற்றாகவும் ஞாபகம் இல்லை. ஆனால் சில விடயங்கள் இன்னமும் ஞாபகத்தை விட்டு அகன்றபாடும் இல்லை.

"அன்பே" - பெயர் எழுதப்படவில்லை -

"My love"

"மகே ஆதரே"

வேண்டாம். மொழிபெயர்ப்பின் கூம்பு இப்படித்தான் போனது. ஆக கடிதத்தின் சாராம்சத்தை மட்டும் பார்ப்போம்.

**அன்பே!**

**கொஞ்ச நாட்களாகவே கோவிலடி சென்றியில் உங்களை காணவில்லை. தண்ணி எடுக்க வரும்போது பார்த்துக் கொண்டே போவேன். காணவில்லை. என்னைக் கவனித்த, உங்களுடன் நான் அடிக்கடி காணும் உங்கள் நண்பர் தான் ஒருநாள் என்னைக் கூப்பிட்டு உங்களின் இந்த முகவரியை தந்தார். சென்றியை தவிர ஒரு நாள் உங்களைப் பெரிய மதகடியில் ரோந்து போகும் போது பார்த்தேன். நீங்கள் கவனிக்கவில்லை. உங்களிடம் சொல்லலாம் என்றால் அதற்கு பிறகு உங்களை காணவில்லை. சென்றி மறைவில் நீங்கள் தந்த முத்தத்தை கவனமாக வைத்திருக்கிறேன். முத்தம் மட்டும் இடுகிறேன் என்று சொல்லி கோவிலில் அப்படியெல்லாமா செய்வீர்கள்? உங்களை முத்தமிட வேண்டும் என்றும் கட்டிப்பிடிக்க வேண்டும் என்றும் ஆசையாக உள்ளது. உங்கள் கொச்சைத் தமிழை கேட்க வேண்டும் போல் இருக்கிறது. எனது முகவரி எழுத முடியாது, காரணம் நீங்கள் எனக்கு கடிதம் எழுதி அது அப்பாவிடம் மாட்டினால் பெரிய பிரச்சினை வரும். அதனால் முகவரியை எழுதவில்லை. நான் தினமும் கோவிலடிக்கு தண்ணீர் அள்ள வருகிறேன். சீக்கிரம் விடுமுறை முடிந்து வரவும்.**

**அன்புடன்**

**சுகந்தினி**

> சில நாட்களுக்கு முன்னர் தான் மருதானை ரயில் நிலையத்தில் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணையில் ஒரு நாள் முழுக்க இருந்துவிட்டு திரும்பியிருந்தேன்.

படித்து முடிய கடிதத்தை மடித்துக் கொடுத்தேன். இப்போது அந்த பாவ முகத்தோனே கடிதத்தை வாங்கி விரித்துப் பிடித்த மேனிக்கு கொஞ்சநேரம் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு மதுரங்கவிடம் ஏதோ சொல்லி திரும்ப கடிதத்தை நீட்டினான்.

Machan! Could you please check whether there is any phone numbers noted? *(மச்சான் அந்தக் கடிதத்தில் எப் பகுதியிலாவது ஏதாவது தொலைபேசி இலக்கம் குறிப்பிடப்பட்டு இருக்கிறதா? என்று பார்)* இது மதுரங்க.


உஹூம்... எந்த இடத்திலும் தொலைபேசி இலக்கம் எதுவுமே காணக் கிடைக்கவில்லை. எனக்கே இப்போது கொஞ்சம் ஏமாற்றமாகத்தான் இருந்தது. மதுரங்கவும் அவனும் திரும்பவும் ஏதோ சிங்களத்தில் பேசிக்கொண்டார்கள். மதுரங்க பேசியதில் "நிவாடு" என்ற சொல்பதமும் எனக்கு தெரியும். நிவாடு என்றால் விடுமுறை. கடிதத்தை நானே மடித்து அவனிடம் கொடுத்தேன். வாங்கி மடித்த மேனிக்கிருந்த கடிதத்தை திரும்ப பார்த்தான். வாயை விரக்தியாய் சுழித்துக் கொண்டு, சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே மடித்திருந்த கடிதத்தால் தன் உள்ளங்கையில் "சட் சட்" என்று இரண்டு தடவை தட்டினான். பிறகு பெரு மூச்சொன்றை விட்டான். கடிதத்தை சட்டைப்பையில் திணித்துக் கொண்டு என் தோளில் தட்டி "போம ஸ்துதி கொல்லா" என்றான். அதற்கு எனக்கு அர்த்தம் தெரியும். நான் சினேகமாக சிரித்துவைத்தேன். மிக மெதுவாய் திரும்பியவன் தன் நண்பர்களுடன் வீதியின் எதிர் திசைக்கு நடக்கத் தொடங்கினான். அவன் திரும்பி நடக்கத் தொடங்கியதும் "அவனிடம் திரும்ப என்ன பேசினாய்?" என்று மதுரங்கவிடம் கேட்டேன்.

"நீ விடுமுறை முடிந்து சீக்கிரம் போ"

"முடியாது... என்னை டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள்"

இதுதான் மதுரங்கவுக்கும் அவனுக்குமான அந்த கடைசி சம்பாசணையின் ஒன்லைனர்.

அதுவரை கொஞ்சம் தள்ளி நின்று நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த எனது சக பாடிகள் கொல்லென்று ஓடிவந்து என்னைச் சூழ்ந்து தமிழிலிலும், ஆங்கிலத்திலுமாக புதினம் விசாரிக்கத் தொடங்கினார்கள். என்னைச் சுற்றி நின்ற அந்தக் கூட்ட வட்டத்தின் முடிவில், நடந்து போய்க்கொண்டிருந்த அவன் தலைமறைந்துபோனது.



கடந்தவாரம் நடைபெற்ற WWE போட்டி ஒன்றில் சமோஜோவின் தாக்குதலுக்கு ஆளான சேத் றோலிங்ஸை பார்த்து ரசிக்கும் றிபிள் எச்

# பக்குவமான பதில்

தொகுப்பு : சி.விமலன்

இந்திய - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் ஹைதராபாத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் கருண்நாயர் இடம்பெறாதது பலருக்கும் அதிர்ச்சியாகவே இருந்தது. ஏனென்றால் இந்தியா இறுதியாக விளையாடிய இங்கிலாந்துடனான சென்னை டெஸ்ட் போட்டியில் முதல் சதத்தையே முச்சதமாக அவர் பெற்றிருந்தார்.

டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர்களான அண்டி சந்ஹம் கார் விபத்தொன்றுக்கு ஆளான காரணத்தாலும் லென் ஹட்டன் தலையில் ஏற்பட்ட காயத்தாலும் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரான இன்சமாம் உல் ஹக் குதிக்காலில் ஏற்பட்ட காயத்தாலும் முச்சதம் அடித்தும் அடுத்த போட்டியில் அவர்களால் விளையாட முடியவில்லை. ஆனால் கருண் நாயர் முழு உடற்தகுதியுடன் இருந்தபோதிலும் விளையாடும் 11 பேரில் அவருக்கு இடம் கிடைக்கவில்லை.

இந்த முடிவு தொடர்பாக கருண் நாயரின் தந்தையான கலாதரன் நாயர் "இது குறித்து எந்த வருத்தமும் எனக்கில்லை. சென்னை டெஸ்ட் போட்டியில் ரகானே காயத்தால் விளையாட முடியாததாலேயே கருணுக்கு வாய்ப்புக் கிடைத்தது. அதனை அவர் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டார். இருந்தாலும் கடந்த இரண்டு வருடங்களாக இந்திய அணியின் டெஸ்ட் போட்டிகளில் மிகச்சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தி வருபவர் ரகானே. எனவே அவர் முழு உடற்தகுதியுடன் இருக்கும் பொழுது அவருக்கு வாய்ப்பளிப்பதுதான் பொருத்தமாக இருக்கும். மன உறுதி மிக்க கருண் இதனால் நம்பிக்கையை இழக்கமாட்டான். இதனை விளையாட்டு உணர்வோடு எடுத்துக்கொள்வான் என்றே நம்புகின்றேன். ஒவ்வொரு தந்தையும் தனது மகன் விளையாடுவதையே விரும்புவர். ஆனாலும் இது அணியின் தீர்மானம். எனவே அதற்கு நாம் மதிப்புக் கொடுத்தல் வேண்டும்" என்று கூறியுள்ளார்.

சில மாதங்களுக்கு முன்னர் யுவராஜ்சிங்கை இந்திய அணியில் தெரிவு செய்யாததற்காக டோனியை யுவராஜின் தந்தையான யோக்ராஜ் சிங் திட்டித்தீர்த்த சம்பவத்துக்கு மத்தியில் அணியின் யதார்த்தத்தை உணர்ந்து கருத்துக்கூறிய கலாதரன் நாயர் உண்மையில் பாராட்டப்படவேண்டியவரே.



# தகுதி நீக்கம்

இங்கிலாந்து - கனடா அணிகளுக்கிடையில் கடந்தவாரம் நடைபெற்ற டேவிஸ் கிண்ண ரென்னிஸ் தொடரில் ஒரு போட்டியில் இங்கிலாந்தின் எட்மண்சும் கனடாவின் ஷாபோவாலோவும் மோதியிருந்தனர். இதில் ஷாபோவாலோவ் அடித்த பந்து கோட்டுக்கு வெளியே விழுந்த கோபத்தில் கையில் இருந்த இன்னொரு பந்தைத் தூக்கி ஆடுகளத்துக்கு வெளியே அடித்தார். ஆனால் அந்தப் பந்து எதிர்பாராதவிதமாக நடுவராகக் கடமையாற்றிய பிரைன் இயர்லியின் கண்ணைப் பதம் பார்த்தது. இதனால் கனடா அணி இந்தப் போட்டியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவதாக நடுவர் அறிவித்தார்.




விளையாட்டில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வீரர்கள் நிதானம் இழக்கக்கூடாது என்றபோதிலும் அவர்களையும் அறியாமல் சில சந்தர்ப்பங்கள் அமைந்து விடுவதும் உண்டு. போட்டிகளில் வீரர்கள் தோல்வி அடையும் தருணங்களிலும் அநாவசியமாகத் தவறு விடும் தருணங்களிலும் தமது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் ரென்னிஸ் மட்டையை ஆடுகளத்தில் அடித்து நொருக்கியும் நடுவர்களோடு வாய்த்தர்க்கத்தில் ஈடுபடுவதுமுண்டு. ATP சட்டவிதி 8.04 இன்படி வீரர்களின் நடத்தை மீறல் குற்றச்சாட்டுக்கு 25,000 அமெரிக்க டொலர் அல்லது தொடரில் கிடைக்கும் வெற்றிப்பணத்தில் எது அதிக தொகையோ அதைத் தண்டப்பணமாகச் செலுத்த வேண்டும்.

ஷாபோவாலோவ் விடயத்தில் அவர் தனது கோபத்தை பந்தின் மீது காட்டினாரே தவிர, நடுவரைத் திட்டமிட்டுத் தாக்க வேண்டுமென்று அவர் செயற்படவில்லை. ஆனாலும் அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். ரென்னிஸ் போட்டிகளில் வீரர்களைத் தகுதி நீக்கம் செய்வது ஒன்றும் புதிய விடயமில்லை என்றாலும் அது அத்திபூத்தாற்போன்றே நிகழ்வதுண்டு.

2012ஆம் ஆண்டு ஆர்ஜென்ரீனாவின் டேவிட் நல்பாண்டியன் ரென்னிஸ் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி ஒன்றில் விளையாடிய பொழுது ஒரு புள்ளியை இழந்த விரக்தியில் ஆடுகளத்தில் இருந்த விளம்பரப்பலகையை எட்டி உதைத்தார். அவரது துரதிர்ஷ்டம் அதன் ஒரு பகுதி அருகில் இருந்த Line Judge காலைக் காயப்படுத்தியதனால் அவரும் தகுதி நீக்கம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கோரிக்கை

2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடரில் 48 நாடுகள் கலந்து கொள்ளும் என சர்வதேச உதைபந்தாட்டச் சங்கங்களின் சம்மேளனம் (பிபா) உத்தியோகபூர்வமாக அறிவித்தமை நாம் அறிந்ததே. 48 நாடுகளையும் 3 நாடுகள் கொண்ட 16 குழுக்களாகப் பிரித்து மொத்தம் 80 போட்டிகளை 32 நாள்களில் நடத்தி முடிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஐரோப்பிய உதைபந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத் தலைவரான அலெக்சாண்டர் செபெரின் மேற்படி தொடரில் 16 ஐரோப்பிய நாடுகள் பங்குபற்றுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் எனவும் அந்த 16 நாடுகளும் வெவ்வேறு குழுவில் இடம்பெற்றால் இன்னும் சிறப்பாக இருக்கும் எனவும் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.



32 நாடுகள் பங்குபற்றிய 2014ஆம் ஆண்டு பிரேசிலில் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டியில் 13 ஐரோப்பிய நாடுகள் கலந்துகொண்டதோடு ஜேர்மனி கிண்ணத்தைக் கைப்பற்றியும் இருந்தது. உலகக் கிண்ணத் தொடரில் ஒவ்வொரு கண்டத்திலும் எத்தனை நாடுகளை உள்வாங்க வேண்டும் என்பதை கோட்டா அடிப்படையிலேயே (பிபா) செயற்படுத்தி வருகின்றது. அந்தவகையில் 2026ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடருக்கான கோட்டா குறித்து எதிர்வரும் மே மாதம் ஆராயவுள்ள நிலையில் அலெக்சாண்டர் செபெரினின் கூற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகின்றது.

உதைபந்தாட்ட உலகில் ஐரோப்பிய நாடுகளுக்கும் தென்னமெரிக்க நாடுகளுக்குமிடையில் ஆதிக்கப்போட்டி எப்போதுமே இருந்து வருகின்றது. வெவ்வேறு குழுக்களில் ஐரோப்பிய நாடுகள் இடம்பெறும்பட்சத்தில் கிண்ணத்தை ஐரோப்பிய நாடு ஒன்று கைப்பற்றுவதற்கான வாய்ப்பும் அதிகரிக்கும் என்ற ஆதங்கத்தை அவரது கூற்றில் இருந்து புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. ஆனாலும் 16 குழுக்களாகப் பிரிக்கும் பொழுது சிலவேளைகளில் ஒரு குழுவில் மூன்று நாடுகளுமே ஐரோப்பிய நாடுகளாக அமையவும் கூடும். ஒவ்வொரு குழுவிலும் ஒரு ஐரோப்பிய நாடு என அமையவும் கூடும். அது அதிர்ஷ்த்தைப் பொறுத்ததே.

இதுகுறித்து குஜகுயு தலைவரான கியானி இன்பன்ரினோ 'அவர்களது கோரிக்கையை நான் பரிசீலிக்கிறேன் . ஆனால் உதைபந்தாட்டம் என்பது ஐரோப்பாவுக்கும் தென்னமெரிக்காவுக்கும் மட்டும் உரித்தான ஒன்றல்ல. அது உலகம் முழுவதற்கும் உரியது ' என்று மட்டும் பதில் கொடுத்துள்ளார். உலகக் கிண்ணத் தொடரில் நாடுகளை அதிகரித்தமையே உதைபந்தாட்டத்தை உலகமயப்படுத்தும் நோக்கிலேயே. எனவே மேற்படி பதிலை நோக்கும் பொழுது அது ஐரோப்பிய நாடுகளுக்கு உவப்பானதாக அமையாது என்றே தோன்றுகிறது.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 18.02.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.